


# வைகறை வெளிச்சம்

ஆகஸ்ட் 2015 - ஷவ்வால் 1436
ஆசிரியர் : மு. குலாம் முஹம்மது
Volume - 8
Issue - 8
விலை ரூ. [illegible]0

# பலியானார் யாகூப் மேமன்



## ஒரு தலித் போராளியின் வாழ்வும் அவர் காட்டிய வழியும்!

விடுதலைப் போரின் மறைக்க முடியாத அத்தியாயம் - நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்!

தனிமைப்பட்டு தவிக்கும் இஸ்ரேல்

# வைகறை வெளிச்சம்

ஆகஸ்ட் 2015 - ஷவ்வால் - 1436

ஆசிரியர்

மு. குலாம் முஹம்மது

துணை ஆசிரியர்

கே.எம். இல்யாஸ் ரியாஜி

**தனி இதழ் : ரூ. 20/-**

**ஆண்டுச் சந்தா:**

**உள்நாடு : ரூ. 240/-**

**வெளிநாடு : ரூ. 1500/-**

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
DARUL ISLAM FOUNDATION TRUST
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு
VAIGARAI VELICHAM
52/1, Mannady Street,
Room No.7, Mannady,
Chennai - 600 001.
Tel.: 044-25224887

E-mail: darultrust@yahoo.com
Web : www.darulislam.in

All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of chennai courts private circulation to promote the original issue

بسم الله الرحمن الرحيم

பலியானார் யாகூப் மேமன் .......... 6

யாகூப் மேமனின் கடைசி மணித்துளிகள் .......... 15

அகதிகள் முகாம்களில் இப்தாரும் (ஈத்) பெருநாளும்! .... 17

டி.எம். உமர் ஃபாரூக் – ஒரு தலித் போராளியின் வாழ்வும் அவர் காட்டிய வழியும்! .......... 18

தீன் சுடர் ஜனாப் டி.எம். உமர் ஃபாரூக் நினைவுகள்! ..... 38

இது வைகறை வெளிச்சம் ஜுலை இதழுக்கு எழுப்பப்படும் கருத்து! .......... 40

கர்கரேயைக் கொலை செய்த வழக்கு! மும்பை நீதிமன்றத்தில் நடந்ததென்ன? .......... 43

விடுதலைப் போரின் மறைக்க முடியாத அத்தியாயம் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்! .......... 45

வீராங்கனை தீஸ்டா செட்டல்வாட் மீது மோடி அரசின் தொடரும் கெடுபிடிகள் .......... 48

எது முதலில்? .......... 51

தனிமைப்பட்டு தவிக்கும் இஸ்ரேல் .......... 54

பைத்துல் முகத்திஸ் (ஜெருசலம்) அல்குத்ஸ் தினம் ....... 58

முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன? .....62

தரீக்குல் குர்ஆன் .......... 64

**இறை நம்பிக்கையாளர்களே! அல்லாஹ்வைக் கொண்டும், அவனுடைய தூதரைக் கொண்டும். அவனுடைய தூதரின் மீது அவன் இறக்கி வைத்த (இவ்) வேதத்தைக் கொண்டு. இதற்கு முன்னர் அவன் இறங்கி வைத்த வேதங்களைக் கொண்டு நீங்கள் நம்பிக்கை கொள்ளுங்கள். எவரேனும் அல்லாஹ்வையும், அவனுடைய வானவர்களையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய தூதர்களையும், மறுமை நாளையும் நிராகரிக்கிறாரோ, அவர் தூரமான வழி கேடாகத் திட்டமாக வழி கெட்டுவிட்டார்.**

**(அன்னிஸா வசனம் - 136)**

**http:/www.facebook.com / vaigaraivelicham**

அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்

# மறுக்கப்படும் தனிமனித உரிமை!

*‘ஆதார் அட்டைகள்’ என்ற பூச்சாண்டியைக் காட்டி நாட்டு மக்கள் அனைவரின் தனிமை உரிமைகளை பறித்து வருகின்றது நமது மத்திய அரசு.*

*தனிமனிதர்களின் அனைத்து அந்தரங்க தகவல்களையும் மத்திய அரசு தனது கைகளுக்குள் வைத்துக் கொள்ளும் சதி திட்டமே ஆதார் அட்டைகள்.*

*எரிவாயு - காஸ் - சிலிண்டர் மானியங் களைப் பெற்றிட வேண்டும் என்றால், நீங்கள் ஆதார் அட்டையைப் பெற்றிருக்க வேண்டும் எனக் கட்டாயப்படுத்தி தனி மனிதர்களின்* “Right to Privacy” *தனித்திருக்கும் உரிமையைப் பறித்துவிட்டார்கள்.*

*இதில், மிகப்பெரிய வேதனை என்னவெனில் உச்ச நீதிமன்றத்தில் நமது அரசு வழக்கறிஞர் மத்தியிலே இருக்கின்ற (பாசிச) பா.ஜ.க. அரசு குடிமக்களுக்கு அந்தரங்க உரிமைகள், தனித்திருக்கும் உரிமைகள் இவை அடிப்படை உரிமைகள் என அரசு கருதவில்லை எனக் கூறிவிட்டார்.*

*பாசிசத்தைப் பாதையாகக் கொண்ட இவர்களுக்கு தனித்திருக்கும் அந்தரங்க உரிமை குடிமக்களின் அடிப்படை உரிமை பற்றி தெரியாதா என்ன?*

*நமது அரசியல் நிர்ணயச் சட்டத்தின் பிரிவு 21 தனிமனிதர்களின் இந்த உரிமையை அடிப்படை உரிமை எனப் பிரகடனப்படுத்துகின்றது.*

*ஆங்கிலேயர்களின் காட்டு மிராண்டித் தனமான அடிமைச் சட்டம் தான். இந்த அடிப்படை உரிமையை மறுத்தது. அவர்களிடம் நீண்ட காலம் போராடிய பின்னரே நாம் இந்த உரிமையைப் பெற்றோம்.*

*ஆகஸ்ட் 15, 1947ல் நாம் விடுதலை அடைந்தவுடன் நாம் பிரடகனப் படுத்திய முதல் உரிமைகளிலும், முக்கிய உரிமைகளிலும் இந்த அடிப்படை உரிமை வருகின்றது.*

*1950-ல் அரசியல் நிர்ணயச் சட்டம் இதை நிரந்தரமாக உறுதி செய்தது.*

*ஆனால் இன்று நாடு, விடுதலைப் போரில் சற்றும் சம்பந்தமில்லாதவர்களின் கைகளில் சிக்கிக் கொண்டு சீரழிந்து வருகின்றது.*

*இன்று நாடாளுவோருக்கும் நாட்டின் விடுதலைப் போருக்குமிருந்த ஒரே தொடர்பு அவர்கள் விடுதலைப் போரில் ஈடுபட்டவர்களை ஆங்கிலேயர்களிடம் காட்டிக் கொடுத்தார்கள் என்பதுதான்.*

*ஆகவே இவர்கள் விடுதலை, அதில் நாம் மீட்டெடுத்த உரிமைகள் இவற்றை அறிய மாட்டார்கள். பாசிசத்தை மெல்ல மெல்ல இந்திய குடிமக்களிடம் திணிக்க உரிமை மறுப்புகளில் ஈடுபட்டு வருகின்றார்கள்.*

*இந்த உரிமை அதாவது தனிமனிதனின் தனித்திருக்கும் அந்தரங்க உரிமை இன்று உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் செயலில் இருக்கின்றன.*

*ஐக்கிய நாடுகளின் சபை பிரகடனப்படுத்திய* Universal Declaration of Human Rights *மனித உரிமைகளின் உலகப் பிரகடனத்தில் இடம் பெற்றிருக்கும் ஓர் மனித அடிப்படை உரிமை. ஆகவே இவர்களின் விருப்பப்படி இந்த உரிமைகளைப் பறித்திட இயலாது.*

*ஐக்கிய நாடுகளின் இந்தப் பிரகடனம் ஓர் 50 ஆண்டுகளுக்கு முன்னர் வந்ததுதான்.*

*அதற்கு 1400 ஆண்டுகளுக்கு முன்னரே இஸ்லாம் இந்த தனிமனித உரிமையை பிரகடனப்படுத்தி இருந்தது. இன்று உலகிலிருக்கும் மனித உரிமைகள் அனைத்திற்கும் அடித்தளம் போட்டது இஸ்லாம் தான் என்கின்றார் முன்னாள் உலக நீதிமன்றத்தின் நீதிபதி சி.ஜி. வீரமந்திரி அவர்கள்.*

*இந்த உரிமையை இஸ்லாம் மிகவும் அழுத்தமாகவே பிரகடனப்படுத்தியது. நடைமுறையில் செய்து காட்டியது. இஸ்லாம் ஆட்சி செய்த பூமியெங்கும் இந்த உரிமை மதம், நிறம், நிலம் இவற்றைக் கடந்து செயலில் இருந்தது. இந்த உரிமையை எந்த ஆட்சியாளரும் பறித்திட முடியாது. காரணம் இது இறைவன் வழங்கிய உரிமை.*

*நீங்கள் சாதாரண அதிகாரியாக அல்ல, சாதாரண மனிதராக இருந்தாலும் எந்த வீட்டுக்குள்ளும் அவர்களின் அனுமதியைப் பெறாமல் நுழையாதீர்கள் எனப் பிரகடனப் படுத்திற்று இஸ்லாம்.*

*அது எங்கள் தாயாரின் வீட்டிலுமா? என வினவப்பட்டபோது உங்கள் தாயார் நீங்கள் பார்க்க விரும்பாத ஒரு கோலத்தில் இருந்தால்? எனக் கேட்டார்கள். இந்த உலகில் இந்த மனித உரிமையை முதலில் செயல்படுத்திக் காட்டிய மாமனிதர் முஹம்மத் (ஸல்) அவர்கள். அந்தக் காலக்கட்டத்தில் இந்த உலகம் அடிப்படை உரிமை, மனித உரிமை என்பனவற்றைப் பற்றிய பிரஞ்சையே இல்லாதிருந்த காலம்.*

*இப்பனு 2012 இல் முன்னாள் டெல்லி உயர்நீதிமன்ற நீதிபதி ஏ.பி. ஷா அவர்கள் அளித்த அறிக்கையில் தனிமனிதனின் இந்த அந்தரங்க உரிமையால் அரசு எழுத்துவடிவில் அந்த தனிமனிதர்களிடம் அனுமதி வாங்கியே தேவையானால் தலையிட வேண்டும் என்றெடுத்துரைத்தது.*

**Times of India, 3rd August 2015**

*ஆனால் இப்போதைய அரசு அப்படியொரு உரிமை அடிப்படை உரிமை என்றில்லை எனக் கூறி இருப்பது, அதிர்ச்சியாகவே இருக்கின்றது.*

*இந்த உரிமையையும் இன்னும் இஸ்லாம் வழங்கி இருக்கும் உரிமைகளையும் நாம் மொத்த மனித இனத்திற்கும் பெற்றுத் தந்தாக வேண்டும். அதற்கிருக்கும் ஒரே வழி இஸ்லாம் வழங்கியுள்ள வழிகாட்டுதல் களையும் நம் மக்களிடம் பிரச்சாரம் செய்வதும், அவர்களின் விழிப்புணர்வுவோடு அவர்களை இந்த வழிகாட்டுதல்களை எற்றுக் கொள்ள செய்வதும் அந்த அடிப்படையில் மொத்த நிருவாகத்தையும் ஆட்சியையும் அமைப்பதே! இதற்காக இந்த வழிகாட்தலைப் பெற்றவர்கள் உழைக்க முன் வரட்டும்!*

---

**இறைவன் கூறுகின்றான்,**

**இறைநம்பிக்கையாளர்களே! உங்களுடைய வீடுகளல்லாத (பிற) வீடுகளில் (நுழைவதானால் அவ்வீட்டாரிடம்) அனுமதி பெற்று, அதிலுள்ளவர்களுக்கு நீங்கள் ஸலாம் (முகமன்) கூறும்வரை நீங்கள் நுழைய வேண்டாம். இதுவே உங்களுக்கு நன்மையுடையதாக இருக்கும். நீங்கள் நல்லுபதேசம் பெறுவதற்காக (இது கூறப்படுகிறது)**

**எனவே, அதில் யாரையும் நீங்கள் காணவில்லையென்றால், உங்களுக்கு அனுமதி வழங்கப்படும்வரை அதில் நீங்கள் நுழைய வேண்டாம். “நீங்கள் திரும்பி விடுங்கள்” என்று உங்களுக்குக் கூறப்பட்டால், நீங்கள் திரும்பி விடுங்கள்; அதுதான் உங்களுக்கு மிக்கப் பரிசுத்தமாகும். அல்லாஹ் நீங்கள் செய்கின்றவற்றை முற்றும் அறிந்தவன்.**


**(அல் குர்ஆன் அத்தியாயம் :24:27,28)**

# பலியானார் யாகூப் மேமன்

இந்த இதழ் வாசகர்களின் கைகளில் கிடைக்கும் போது யாகூப் மேமன் தூக்கில் தொங்கவிடப்பட்டிருப்பார் (நவூதுபில்லாஹ்). இதை நாம் வைகறை வெளிச்சம் ஏப்பிரல் 2015 இதழில் விரிவாகக் குறிப்பிட்டிருந்தோம். (பார்க்க அடுத்த பலியா யாகூப் மேமன்?)

இதுதான் நடக்கும் இந்தியாவில் முஸ்லிம்களுக்கு. நீதி கிடைக்காது. அவர்கள் நீதிமன்றத்தை அணுகிடும் போதெல்லாம் அவர்கள் நீதியின் பெயரால் கொடுமைப்படுத்தப் படுவார்கள். இந்த உண்மைகளை நீண்ட நெடும் நாளாகவே நாம் மக்கள் மன்றத்தில் பதிவு செய்து வருகின்றோம்.

இதுதான் நடக்கும் நீதித்துறையில் முஸ்லிம்களுக்கு என 2003ஆம் ஆண்டே மூத்த வழக்கறிஞர் ராஜீவ் தாவான் அவர்கள் சொன்னார்கள். அவர் இன்னும் தெளிவான சொற்களில் தி ஹிந்து ஆங்கில நாளிதழில் நடுப்பக்கக் கட்டுரை ஒன்றில் தெளிவுப் படுத்தினார். அதில் இப்படிக் குறிப்பிட்டார், “Muslims will not get justice but will be brutalised in the name of justice”.



முஸ்லிம்களுக்கு நீதி கிடைக்காது என்பது மட்டுமல்ல, அவர்கள் நீதியின் பெயரால் கொடுமைப் படுத்தவும் படுவார்கள். இதுதான் இப்போது நமது உச்சநீதிமன்றத்தின் முழு இரவு உழைப்பு உறுதிபடுத்தும் உண்மை. இதுதான் இப்போது யாகூப் மேமன்க்கும் நடந்திருக்கின்றது.

இதில் நெஞ்சை மிதிக்கும் அநீதிகள்

1. யாகூப் மேமனுக்கும் மும்பைக் குண்டு வெடிப்புகளுக்கும் எந்த சம்பந்தமுமில்லை. அவர் ஒரு கட்டத்தில் இந்தியா வந்ததே நீதியின் முன் தன்னை நிறுத்தி தன் மீதும் தன் குடும்பத்தினர் மீதும் ஏற்பட்ட களங்கங்களைத் துடைத்திடவே! இதில் அவர் தனகுக் கிடைத்த சாட்சியங்கள் தடயங்கள் அனைத்தையும் நமது விசாரணை அதிகாரிகளிடம் ஒப்படைத்திருக்கின்றார்.




2. தானாக இந்தியா வந்தவரை நாங்கள் டெல்லி ரெயில் நிலையத்தில் வைத்து தாவிப் பிடித்தோம் எனப் பொய் மூட்டைகளை அவிழ்த்துவிட்டார்கள். அப்பாவிகளையும், குற்றவாளிகளாக ஆக்கிடவே அது பயன் படுத்தப்படுகின்றது. ஏனெனில் தடாச் சட்டத்தில் வாங்கப்பபடும் வாக்குமூலத்தைப் பயன்படுத்தி குற்றவாளியை தண்டிக்கலாம், என்றெல்லாம் குற்றம் சாட்டித்தான் தடா சட்டம் 1995ஆம் ஆண்டு பின்வாங்கப் பெற்றது.

ஆனால் இன்று அதே சட்டத்தின் கீழ் அதாவது தடாச் சட்டம் காலாவதியாகி 20 ஆண்டுகளுக்குப் பின் யாகூம் மேமனை தூக்கில் தொங்க விட்டிருக்கின்றனர்.

அவருடைய சகோதரர் அவரை தெளிவாகவே எச்சரித்திருக்கின்றார். இப்படி,

சாட்சியங்களையும், தடயங்களையும் அள்ளித் தந்து இந்தியாவில் நீ மஹாத்மா ஆகிவிடலாம் என என்னாதே. அவர்கள் உன்னை விழுங்கிவிடுவார்கள். அனைத்தை யும் விஞ்சி அவர் இந்திய அதிகாரிகளை நம்பினார். இந்தியாவின் உளவுத்துறை அதிகாரி இராமன் என்பவர் தந்த வாக்குறுதி களை நம்பி பாகிஸ்தானிலிருந்து இந்தியா வந்தார். அவரது 53வது பிறந்தநாளில் அவரைத் தூக்கிலே போட்டார்கள்.

யாகூப் மேமனுக்கு தூக்குத் தண்டனையை வழங்கியது வழக்கமான சட்டங்களின் கிழ் அல்ல. 'தாடா' என்ற தீவிரவாத தடுப்புச் சட்டம் என்ற சிறப்பு சட்டத்தின் கீழ்தான் அவரைத் தூக்கிலே போட்டிருக்கிறார்கள்.

இந்த தடாச் சட்டம் ஓர் ஆள் தூக்கி ஆள்கொல்லிச் சட்டம். இது இன்று வரை தவறாகவே பயன்படுத்தப்படுகின்றது.

இதனால் யாகூப் மேமனை தூக்கி லிடுவதற்கான ஆணையை முன்னரே பிறப் பித்துவிட்டது. முன்னரே என்பது 01.7.2015 இலேயே பிறப்பித்து ஜூலை திங்கள் 30ஆம் நாள் காலை 7 மணிக்கு நாக்பூர் சிறையிலிருந்து தூக்கிலிட வேண்டும் என ஆணை! அனைத்து ஏற்பாடுகளையும் அப்போதே செய்துவிட்டது.

ஆனால் யாகூப் மேமனின் மேல் முறையீட்டு மனு 21.7.2015 அன்றுதான் உச்ச நீதிமன்றத்தில் இறுதி விவாதத்திற்கும் பின்னர்

தீர்ப்பிற்கும் வரவிருந்தது. ஆனால் அதற்கு 20 நாள்களுக்கு முன்னரே தூக்கில் போடும் ஆணையை மாநில ஆர்.எஸ்.எஸ். அரசு பிறப்பித்து விட்டது. அதற்கான ஏற்பாடு களையும் செய்துவிட்டது.

யாகூப் மேமனுக்கு வழக்கை நடத்திக் கொண்டிருக்கும் மூத்த வழக்கறிஞர் மஜித் மேமன் நீதிமனறத்தில் வழக்கு நடந்து தீர்ப்பு வருவதற்கு முன்பே அரசு தூக்கிலிட ஆணைகளைப் பிறப்பிக்கின்றது என்றால் அரசுக்கு முன்னரே தீர்ப்பு இப்படித்தான் வரப்போகின்றது என்று தெரியுமா? என 15.7.2015 இலேயே கேட்டார். உண்மையிலேயே நடந்ததும் அதுதான்.

யாகூப் மேமனின் வழக்கறிஞர் மஜீத் மேமன் சொன்னது போலத்தான் எல்லாம் நடந்தது.

3. 21.7.2015 அன்று நீதிபதிகள் தங்கள் இருக்கைக்கு வராமலே, தங்களுடைய 'Chambers' சேம்பர் எனக் கூறப்படும் தனி அறையில் இருந்த வண்ணமே யாகூப் மேமனின் மேல் மறு சீராய்வு மனுவை (Curative Petition) தள்ளுபடி செய்தார்கள்.

எனினும், இன்னொரு கருணை மனுவை மராட்டிய மாநில கவர்னரிடம் யாகூப் மேமனின் பெயரில் வழங்கினார்கள்.

4. யாகூப் மேமனுக்கு இன்னொரு மேல் முறையீட்டிற்கும் வழி இருக்கின்றது என்றார்கள் சட்டத்துறை வல்லுநர்கள்.

அதுவும் பின்னர் அதாவது 29.7.2015 இரவு 10 மணிக்கு குடியரசு தலைவரால் நிராகரிக்கப்பட்டது. முன்நிகழ்வு இதே போல் அறுதி முறையீடும் அற்றுப் போனபின் ஒரு வழக்கில் இருவருக்கு மரண தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டுள்ளது என வாதிக்கின்றனர் சட்டத்துறை வல்லுநர்கள்.

இதில் மேல் 27,2015 உச்சநீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் ஏ.கே. சிக்ரி, யு.யு. லலித் (A.K. Sikri, U.U. Lalit) வழங்கிய தீர்ப்புகளை மேற் கோள் காட்டுகின்றார்கள்.

இந்த வழக்கை மேற்கோள் காட்டிய பின் இப்படிக் குறிப்பிடுகின்றார்கள்.

Though the death warrant in the memon case was not open ended whether the rest of the procedure was followed by the court was question of fact in which a challenge may rise in a higher court of law.

Legal experts say that a writ petition can be in the supreme court on the basis of this judgement.

மரண தண்டனைக்கான ஆணை தெளிவானதுதான். ஆனால் இதில் நீதிமன்றத் தால் ஏனைய நடைமுறைகள் பின்பற்றப் பட்டனவா என்பது யதார்த்தமானதோர் கேள்வி. இதன் அடிப்படையில் இந்த மரண தண்டனையை எதிர்த்து ஒரு உயர்நீதி மன்றத்தில் வழக்குப் பதிவு செய்யலாம்.

சட்டவல்லுநர்கள் ஒரு ரிட் மனுவை உச்சநீதிமன்றத்தில் இந்தத் தீர்ப்பின் அடிப்படையில் பதிவு செய்யலாம் என்றே கூறுகின்றனர்.

**(கிருஷ்ண தாஸ் இராஜகோபால்** in the The Hindu dated July 22,2015**)**

## இன்னொரு வழக்கு!


இதே போல் நித்தாரி தொடர் படுகொலை புகழ் சுரேந்தர் ஹோலி என்ப வருடைய வழக்கையும் வழக்கறிஞர்கள் மேற்கோள் காட்டுகின்றார்கள். இதில் சுரேந்தர் ஹோலியின் மரண தண்டனையை நீதிமன்றம் ஆயுள் தண்டனையாக மாற்றியது என்கின்றார்கள்.

The Hindu 22.7.2015

5. முன்னாள் இந்திய அரசின் துணை தலைமை வழக்கறிஞர் (Additional Solictor General of India) இந்திர ஜெய்சிங் இப்படிக் கூறுகின்றார்.

It is justiciable to file a writ petition against the rejection of a mercy petition on grounds of miscarriage of justic or even nonapplication of mind.

அதாவது, "கருணை மனு நிராகரிக்கப் பட்டால் அதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் எதிர் மனு ஒன்றை தாக்கல் செய்யலாம். அந்த மனுவை நீதி நழுவி விட்டது என்ற அடிப் படையிலும், நீதிபதிகள் இந்த வழக்கில்




தங்கள் மனதை செலுத்தி (உண்மை களைக் கண்டு கொள்ள) தவறிவிட்டார்கள் என்ற அடிப்படையிலும் தாக்கல் செய்யலாம்."

இங்கே நாம் கவனிக்க வேண்டியது முன்னாள் அரசு வழக்கறிஞர் என்ன சொல்லு கின்றார் என்றால்,

யாகூப் மேமன் வழக்கில் நீதி வழுகி இருக்கின்றது. நீதிபதிகள் வழக்கில் சொல்லப் பட்டவற்றில் தங்கள் மனதை கவனத்தைச் செலுத்தவில்லை என்று தெளிவாகக் கூறு கின்றார்கள். இத்தனையையும் கடந்து யாகூப் மேமனைத் தூக்கில் போட்டிருக்கின்றார்கள்.

6. இந்திரா ஜெய்சிங் அவர்கள், சொன்னபடி அனைத்து முயற்சிகளும் மேற் கொள்ளப்பட்டன. ஆனால் நமது (அ)நீதி மன்றங்கள் குறிப்பாக உச்சநீதிமன்றம் தொடர்ந்து அநீதிகளை இழைத்துக் கொண்டே இருந்தது.

நடந்த நிகழ்வுகளின் அடிப்படையில் உண்மையைச் சொன்னால் நீதிமன்றங்கள் உச்சநீதிமன்றம் உட்பட அனைத்தும், மராட்டியத்தின், ஆர்.எஸ்.எஸ். முதல்வர், பண்டவிஸ் இன் எடுபிடிகளாகவே செயல்பட்டன.

இதற்கு ஆதாரம் 29.7.2015 அன்று நமது உச்ச நீதிமன்றம் தூங்காமல் யாகூப் மேமனை தூக்கிலட அனைத்து ஏற்பாடுகளையும் செய்தது.

உச்சநீதிமன்றம் இயங்கியதை ஓர் ஆவணமாகப் பதித்திட வேண்டும். அதனை இங்கே தருகின்றோம்.

1. உச்சநீதிமன்றத்தில் மறுசீரமைப்பு மனு ஒன்றை யாகூப் மேமன் தாக்கல் செய்கின்றார். இந்த மறுசீராய்வு மனு தனக்கு வழங்கப்பட்ட மரண தண்டனையின் தீர்ப்பு தவறானது என்பதை மையமாகக் கொண்டது.

ஆனால் இந்த மனுவை எந்த நீதிபதி மரண தண்டனையை உறுதி செய்தாரோ அவருடைய அவைக்கே - அமர்வுக்கே திரும்பவும் அனுப்புகின்றது நீதிமன்றம். அவர்



நீதிமன்றதிற்கு வராமல் தனது தனியறையில் இருந்து கொண்டே தள்ளுபடி செய்கின்றார்.

இவருடைய தீர்ப்பு தவறு. இவர் மறுசீராய்வு மனுவை நிராகரித்தது தவறு என உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி டட்ரு விடம் முறையிடுகின்றார்கள். தலைமை நீதிபதி மீண்டும் தேவ என்ற நீதிபதியின் முன்தான் அந்த வழக்கை விசாரணைக்கும் விவாதத்திற்கும் விடுகின்றார். அதன் பின் இதே நீதிபதியின் முன்தான் மேமன் தூக்கு வழக்கு வருகின்றது. அவரே மேமனை தூக்கில் போடுவதிலேயே குறியாக இருக்கின்றார் என ஓர் மனு சமர்ப்பிக்கப்படுகின்றது. அதன் பின் கொரியன் என்றொரு நீதிபதியும் தேவ என்ற நீதிபதியும் விசாரிப்பார்கள் என்கின்றார்கள். தீர்ப்பு வருகின்றது. கொரியன் என்ற நீதிபதி முற்றிலும் மாறுபட்ட ஒரு தீர்ப்பை வெளி யிடுகின்றார். அவர் தனது தீர்ப்பில் மேமனை தூக்கிலிட குறிப்பாக ஜூலை 30இல் தூக்கிலிட. எந்த முகாந்திரமுமில்லை என் கின்றார். மேமனுக்கிருக்கும் சட்டப்படியான வழிகள் முற்றுப் பெறவில்லை. அவை இன்னும் நிரம்பவே இருக்கின்றன என்கின்றார்.

குடியரசுத் தலைவரிடம் மேமன் நேரடியாக இன்னும் கருணை மனுவை சமர்ப்பிக்கப்படவில்லை. அவர் நேரடியாகக் கருணை மனுவை சமர்ப்பிக்கலாம். கருணை மனு தள்ளுபடியானால் மீண்டும் அவர் நீதிமன்றத்தை அணுகலாம் என்று தன் தீர்ப்பில் கூறுகின்றார்.

ஆனால் அதே பெஞ்ச்இல் அமர்வில் இருந்த நீதிபதி தேவ இந்த வழக்கில், சட்டப்படியான நடவடிக்கைகள் முற்றுப் பெற்றுவிட்டன. அதனால் தூக்குத் தண்டனையை நிறைவேற்றலாம் என்கின்றார். நீதிபதி குரியனின் தீர்ப்பைப் பார்க்கின்ற போது ஓர் அப்பாவி தூக்கிலிடப்படுவதை கண்டிப்பாக தடுத்தாக வேண்டும் என்ற பாங்கில் அவர் தீர்ப்பு வழங்கி இருக்கின்றார் என்றே சொல்லிட வேண்டும்.

நீதிபதி குரியன் அவர்கள், மேமன் உடைய வழக்கு விசாரணையில் உச்ச நீதிமன்றத்தின் வேறு சில தகிடுத்தத்தங் களையும் சுட்டிக்காட்டினார். அது மேமனு டைய மறுசீராய்வு மனுவை பரிசீலனை செய்திட அமைக்கப்பட்ட நீதிபதிகளின் குழுமத்தில் வேண்டுமென்றே நீதிபதிகளின் பெயர்களைக் குறிப்பாகத் தனது பெயரை விட்டிருந்ததைச் சுட்டிக் காட்டினார்கள். குறிப்பாக தன்னையும் அதாவது ஜோசப் கொரியன் அவர்களையும், நீதிபதி செல மேஸ்வர் அவர்களையும் விட்டுவிட்டதைச் சுட்டிக்காட்டினார். இதற்கு ஆதாரமாக அவர் உச்சநீதிமன்ற நெறிமுறைகள் விதி 48(4) சுட்டிக்காட்டினார்.

**The Hindu July 28,2015**

இந்த உச்சநீதிமன்ற விதி 48(4) இன் படி மேல் முறையீட்டு மனுவை (Appeal-ஐ) தள்ளுபடி செய்யும் அந்த பெஞ்சில் அமர்வில் எத்தனை நீதிபதிகள் இருந்தார்களோ, அத்தனை பேருக்கும் அந்தத் தீர்ப்பை எதிர்த்து போடப்படும் மறு சீராய்வு மனுவையும் தந்திட வேண்டும். அதை விசாரிக்கும் அமர்வில் அந்த நீதிபதிகளையும் அமர வைத்திட வேண்டும். இதை நீதிபதி ஜோசப் கொரியன் அவர்கள் வண்மையாக கண்டித்தார்கள். சுட்டிக்காட்டினார்கள்.

இப்போது கிடைக்கும் தகவல்கள் ஒன்றை உறுதி செய்கின்றன. அது இந்த இரு

நீதிபதிகளையும் இணைந்திருந்தால் யாகூப் மேமனுக்கு நீதி கிடைத்திருக்கும். அவர் மறுசீராய்வு மனுவில் நீதிமன்றத்தின் விதிகள் முறையாகப் பின்பற்றப்படாததால் அந்த மனுவை மீண்டும் நீதிமன்றம் புதிதாகக் கேட்க வேண்டும் எனத் தெளிவாக வாதிட்டார் ஜோசப் குரியன்.

**Times of India, July 29, 2015**

## உயிர்பிழைத்திருப்பார்

ஆனல் அனில் தவே என்ற நீதிபதி எல்லா அமர்வுகளிலும் இடம் பெற்றார். காரணம் அவர் யாகூப் மேமனை தூக்கிலிட வேண்டும் என்பதில் குறியாக இருந்தார்.

நீதிபதி அனில் தாவே ஓர் நீதிபதியைப் போல் செயல்படவில்லை அவர் வரிக்குவரி, இந்த வழக்கில் இனி கேட்பதற்கு எதுவுமில்லை என்றே சொல்லிக் கொண்டிருந்தார்.

யாகூப் மேமன் விஷயமாக அவர் முன் கொண்டு வந்த மனுவையும் அவர், ஏறெடுத்தும் பார்த்திடவில்லை.

கடைசி நேரத்தில் உச்ச நீதிமன்றம் யாகூப் மேமன் விஷயத்தில் காட்டிய வேகம். உச்ச நீதிமன்றத்தின் வரலாற்றிலேயே இல்லாதது.

இதில் நமது உச்சநீதிமன்றம் ஓர் கொலை வெறியோடு நடந்து கொண்டது என்பதைக் கீழ்கானும் அட்டவணை உறதிப்படுத்தும்.

மாலை 4.04 மணிக்கு மூவர் நீதிமன்றம் யாகூப் மேமனை தூக்கிலிடும் உத்திரவை நிறுத்திவைக்கும் மனுவை (Stay)தள்ளுபடி செய்கின்றது.

ஆனால் கருணை மனு, குடியரசு தலைவரிடம் கிடப்பில் கிடந்தது. குடியரசு தலைவர் இரவு 10.30 மணிக்கு தனது தூக்கத்தையும் கலைந்து விட்டு கருணை மனுவை நிராகரிக்கின்றார்.

இந்த கருணை மனு யாகூப் மேமன், தானே சமர்பித்தது. முதலில் ஒரு கருணை மறு யாகூப் மேமனின் சார்பில் அவருடைய சகோதரர் சமர்பித்தது. அது ஏற்கனவே குடியரசு தலைவரால் நிராகரிக்கப்பட்டது. அப்போது யாகூப் மேமன் ஒரு கருணை தானே தன் பெயரில் மனுவை சமர்பிக்க மறுத்துவிட்டார். காரணம் அவர் தன் மீது எந்தக் குற்றமுமில்லை. அதனால் நீதி வெல்லும் தான் சட்டப்படியாகவே விடுவிக்கப்பட்டுவிடுவோம் என நம்பினார்.

பின்னர் உச்சநீதிமன்றம் விதிமுறைகளைப் பற்றிக் கிஞ்சிற்றும் கவலைப்படாமல் அவருடைய மறுபசீலனை மனுவை நிராகரித்ததால் அவர் கருணை மனு ஒன்றை சமர்ப்பித்தார். அதைத்தான் குடியரசு தலைவர் நிராகரித்தார் இரவு 10.30. மணிக்கு.

ஏனெனில் உள்துறை அமைச்சர், முன்னாள் ஆர்.எஸ்.எஸ். தலைவர் இராஜநாத் சிங் குடியரசு தலைவரைச் சந்தித்து கருணை மனுவை நிராகரிக்கச் சொன்னாராம்.

ஒரு கருணை மனு நிராகரிக்கப் பட்டால், அதற்குரிய காரணங்களைச் சொல்லி முறையாக கருணை மனுவை சமர்ப்பித்தவருக்கும், அவருடைய குடும்பத்தவருக்கும் அதனை அனுப்பிட வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் உச்சநீதிமன்றம் செல்ல உரிய கால அவகாசம் அளிக்கப்படவேண்டும். ஆனால் இந்த விதிமுறை எதையும் நமது சங்கப்பரிவார அரசோ, நீதிமன்றங்களோ, மதிக்கமாட்டா, பின்பற்றிட மாட்டா என்பனவற்றை மேமனின் வழக்கறிஞர்கள் நன்றாக அறிவார்கள். அதனால் அவர்கள் சற்றும் தாமதிக்காமல் உச்ச நீதிமன்றத்தை அனுகினார்கள். கருணை மனு நிராகரிக்கப் பட்டதை எதிர்த்து எதிர் மனுவை தாக்கல் செய்தார்கள்.

நடைமுறை விதிகளின் படி உச்ச நீதிமன்றம் இந்த மனுவை ஏற்றுக் கொண்டால் அரசுக்கும், சம்மந்தப்பட்டவர்களுக்கும் 14 நாள்கள் கால அவகாசம் வழங்கி தாக்கீதுகள் அனுப்ப வேண்டும். ஆனால் உச்சநீதிமன்றம் இதிலும் ஓர் நாடகத்தை அரங்கேற்றியது.

இரவு 11 மணிக்கு தலைமை நீதிபதி எச்.எல். டட்ரூ உச்சநீதிமன்ற நிருவாகத்தை

தொடர்பு கொண்டு இரவு ஓர் சிறப்பு அமர்வுக்கு ஏற்பாடு செய்கின்றார்கள். அந்த சிறப்பு அமர்வில் நீதிபதி மிஸ்ரா, பாண்ட், ராய் ஆகியோர் இடம் பெறுகின்றனர்.

இந்த நீதிபதிகள் யார் யார் என்றால் இவர்கள் தாம் நீதிபதி ஜோசப் கொரின் அவர்களும், நீதிபதி அனில் தேவ அவர்களும் கருத்து வேறுபட்ட போது, அந்த மறுசீராய்வு மனுவை விசாரிக்க நியமிக்கப்பட்டவர்கள். இவர்கள்தாம் அறுதியாக மறுசீராய்வு மனுவை நிராகரித்தவர்கள்.

இரவு 2.30 மணிக்கு அரசு நீதிபதி முகுல் ரட்டோகியை உச்ச நீதிமன்றம் விரைந்திட வேண்டும் என அழைக்கின்றார்கள். அவரும் விரைந்து வருகின்றார். அவர் இரவு மூன்று மணிக்கு வருகின்றார்.

இரவு 3.24 மணிக்கு வாதங்கள் தொடங்குகின்றது 4.40 மணிக்கு வாதங்கள் முடிகின்றன. உடனேயே தீர்ப்பு. அந்த எதிரி மேல் முறையீட்டை நிராகரித்தது.

இரண்டு மணி நேரம் கழித்து தூக்கிலிடப்படுகின்றார் மேமன்.

எந்த நாட்டிலும் ஒருவரை தூக்கிலிட ஓர் உச்சநீதிமன்றம் இத்துணை விரைவாக செயல்பட்ட வரலாற்றை இப்போதுதான் பார்க்கின்றோம்.

இங்கே தூக்கிலிடும் நாளை நிர்ணயித்த ஓர் முன்னாள் ஆர்.எஸ்.எஸ். ஊழியன் இன்னாள் மராட்டிய முதல்வர் அவர் களுடைய ஆணையைச் செயல்படுத்திட வே இந்த அவசரம்.

## யாகூம் மேமனின் கடைசி நிமிடங்கள்

அவரை அவர் பிறந்த நாளாகிய ஜூலை 30அம் நாள் தூக்கிலிட வேண்டும் என்பதே சங்கப் பரிவாரத்தின் முடிவு.

அதையே விரைந்து செயல்படுத்திக் காட்டினார்கள். நமது நீதிமன்றங்கள் இரவு பகலாக அதற்காக உழைத்தன.

காலை 5.30 மணிக்கு யாகூப் மேமனிடம் அவர் ஏன் கொலை செய்யப்படுகின்றார் என்பதற்கான காரணத்தைப் படித்துக் காட்டினார்கள். அவர் நீங்கள் நான் குற்றவாளி எனக் கூறுவது பொய். என்னை நான் டைகர் மேமனின் சகோதரன் என்பதற்காக தூக்கில் போடுகின்றோம் என்று வேண்டுமானால் சொல்லுங்கள் என்றார்.

அதன் பின் அவரை உடனேயே 5.30 மணிக்கே தூக்கிலிட்டுவிட்டதாக சில தகவல்கள் கூறுகின்றன.

## யாகூப் மேமனின் மனைவி

நாங்கள் இந்தியாவிற்கு வருவதற்கு முன் இவர்களிடம் ஓர் ஒப்பந்தம் போட்டிருக்க வேண்டும். எங்களிடமிருந்து தகவல்களை வாங்கிவிட்டு எங்களை குற்றவாளிகளாக ஆக்கிடக் கூடாது என ஒப்பந்தம் போட்டிருக்க வேண்டும். அதை நாங்கள் செய்ய தவறிவிட்டோம். அதனால் தான் யாரேனும் ஒருவரை தூக்கில் போட வேண்டும் என்பதற்காக என் கணவரைக் கொலை செய்துவிட்டார்கள்.

## அபுசலீம் ஏன் இன்னும் உயிரோடு இருக்கின்றார்?

மும்பையை சார்ந்த அபுசலீம் டச்சு நாட்டில் தான் இருந்தார். அவர் மீது பல குற்றப்பத்திரிக்கைகளைத் தாக்கல் செய்து விட்டு, அவற்றை டச்சு நாட்டு அரசிடம் அவரை இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்கள் இந்திய அரசினர்.

அதன்படி டச்சு நீதிமன்றம் ஒன்றின் வாயிலாக அபூசலீம் டச்சு நாட்டு காவல் துறையில் நிறத்தப்பட்டார்.

அங்கு நீதிபதி அபூசலீமிடம் உன்னை நாங்கள் இந்திய அரசிடம் ஒப்படைக்க போகின்றோம். இதற்கு நீ என்ன சொல்லு கின்றாய் எனக் கேட்டார்கள்.

அதற்கு அபூசலீம், நீங்கள் என்னை இங்கேயே தூக்கில் போட்டுவிடுங்கள், இந்தியாவிற்கு அனுப்ப வேண்டாம். அங்கே முஸ்லிம் என்றால் எந்த விதிமுறைகளையும்

பற்றிக் கவலைப்படமாட்டார்கள் தூக்கிலே போட்டுவிடுவார்கள் எனக் கூறினார்.

இதனை செவிமடுத்த டச்சு நாட்டு தலைமை நீதிபதி இந்திய அரசுக்கு சில நிபந்தனைகளை விதித்தார். அதில் அவருக்க மரண தண்டனையை எந்தக் காரணத் திற்காகவும் வழங்க கூடாது என்பதும் ஒன்று. இந்த நிபந்தனையை இந்திய அரசு ஒத்துக் கொண்டதால்தான் அவரை இந்தியாவுக்கு அனுப்பியது டச்சு நாடு. இது சுமார் 15 ஆண்டுகளுக்கு முன் நடந்தது. அதனால்தான் அவர் இன்றும் உயிருடன் இருக்கின்றார். இத்தனைக்கும் அவர் மீது குண்டு வெடிப்பு வழக்கு எதுவுமில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

இதை யாகூப் மேமன் செய்யவில்லை என்பதைத்தான் அவருடைய மனைவி ராகின் யாகூப் சுட்டிக்காட்டுகின்றார்.

யாகூப் மேமன் இந்திய அதிகாரிகள் குறிப்பாக 'ரா' என்ற உளவுத்துறையைச் சார்ந்த அப்போதைய அதிகாரி (தலைவர்) இராமன் அவர்கள் சொன்னதையெல்லாம் நம்பினார். அதனால் அநியாயமாகத் தூக்கில் தொங்கவிடப்பட்டார். அன்றைய ரா அதிகாரி கூறியதென்ன? ரா என்பது வெளிநாடுகளில் நம் நாட்டிற்காக உளவு பார்க்கும் நிறுவனம்.

யாகூப் மேமன் மும்பை குண்டு வெடிப்புகளுக்கு வெகு நாட்களுக்கு முன்னரே பாகிஸ்தான் சென்று விட்டார். அவரிடம் சில தகவல்கள் இருக்கின்றன. அவை மும்பை குண்டுவெடிப்பு வழக்கை நடத்திட உதவும் என நம்பினர் நமது உளவுத் துறையினர். அதனால் அவரை தொடர்பு கொண்டு அவருக்கு பல வாக்குறுதிகளை வழங்கினார்கள். அவர் தன் மீது எந்த குற்றமுமில்லை என்பதால், இந்திய அதிகாரிகளிடம் தன்னை ஒப்படைக்க ஒத்துக் கொண்டார். ஆனால் அவரை பின்னர் சிறையில் அடைத்து சித்திரவதைச் செய்து, கடைசியில் தூக்கில் போட்டு விட்டனர். இதில் அப்போதைய ரா என்ற உளவுத்துறையின் தலைவர் இராமன் கூறியவற்றை Rediff.com என்ற இணைய தளம் வெளியிட்டிருக்கின்றது. அதனை இங்கே தருகின்றோம்.

"யாகூப் மேமனை தூக்கிலிடுவது என்பது நாம் அவருக்குச் செய்யும் மிகப் பெரிய துரோகம். அவர் நம்முடைய வாக்குறுதிகளை நம்பித்தான் இந்தியா வந்தார். அவர் நிச்சயமாக நம்மிடமிருந்து ஓர் வாக்குறுதியைப் பெற்றிருந்தார். அதனால் தான் அவர் தானாகவே காத்தமண்டு வந்தார். அத்தோடு நிறைய தகவல்களையும் விவரங் களையும் நம்மிடம் ஒப்படைத்தார். நாம் அவருக்குத் துரோகம் செய்துவிட்டோம்."

அவர் நடந்து கொண்டதை கணக்கில் கொண்டால் நாம் அவருக்கு மரண தண்டனை வழங்கியது எந்த அளவுக்குப் பொருத்தமானது என்பதை நாம் பலமுறை சிந்திக்க வேண்டும்.

இங்கே இந்தியாவில் நடப்பதும் நடத்தப்படுவதும் சரியானவை அல்ல. அவர் இந்திய நீதிமன்றங்களை நம்பினார்.

"யாகூப் மேமனுக்கு மரண தண்டனையை தவிர்க்கும் விதத்தில் பல Mitigating Circumstances பல காரணங்கள் இருந்தன. அவற்றை நீதிமன்றத்தின் பார்வைக்கு நாம் கொண்டு வந்திடவில்லை என்றே நம்புகின்றோம்."

2007இல் யாகூப் மேமனுக்கு முதல் முறையாக தடா நீதிமன்றம் தூக்குத் தண்டனை வழங்கியபோது, அப்போதைய நமது வெளிநாட்டு உளவுத்துறை அதிகாரி ராமன் அவர்கள் எழுதிய கட்டுரையிலிருந்து இந்த இராமன் தான் யாகூப் மேமனையும் அவரது குடும்பத்தாரையும் பம்பாய் மற்றும் துபாயிலிருந்து நமது நாடு கொண்டு வருவதற்கு முக்கிய காரணமாக இருந்தார். இவர் 2013ல் இறந்து விட்டார்.

**Source Times of India, Saturday, July 25,2015**

ஆக யாகூப் மேனின் தூக்கு ஒரு துரோகம் என்பதே முன்னாள் ரா என்ற உளவுத்துறை தலைவரின் கருத்து.

யாகூப் மேமனின் உயிரைக் காப்பாற்றிட உழைத்த வழக்கறிஞர்கள் குடியரசு தலைவருக்கு இப்போது அனுப்பிய கருணை மனுவில் இந்தக் கட்டுரையையும் இணைத்திருந்தார்கள். இராமனின் இந்தக் கட்டுரையை ஏற்றுக் கொள்ள வேண்டாம், கருணை மனுவை உடனேயே நிராகிரியுங்கள் என அன்றைய ஆர்.எஸ்.எஸ். தலைவர் இன்றைய உள்துறை அமைச்சர் இராஜ்நாத் சிங் விரைந்து சென்று குடியரசு தலைவரிடம் கூறினார்.

29.7.2015 இரவில் உச்சநீதிமன்றம் நடந்து கொண்டது உச்சநீதிமன்ற வரலாற்றின் கருப்பு நாள்.

## உச்சநீதிமன்ற துணை பதிவாளர் எதிர்ப்பு! இராஜினாமா!

அனுப் சித்தாராய்ய என்பவர் நமது உச்சநீதிமன்றத்தில் துணை பதிவாளராகவும் ஆய்வாளராகவும் பணியாற்றி வருகின்றார். இவரால் உச்சநீதிமன்றம் நடந்து கொண்ட விதத்தைப் பொறுத்துக் கொள்ள இயலவில்லை. இப்படியா ஓர் உச்சநீதிமன்றம் முழு மூச்சாய் நின்று ஓர் அநியாயத்தைச் செய்யும், என ஆதங்கப்பட்டார்.

தனது பதவியை இராஜினாமா செய்தார். அதில் அன்று நடந்தது Abdication of Supreme Court உச்சநீதிமன்றத்தை ஆளைக் கடத்துவது போல் கடத்தியதாகும் எனக் குறிப்பிட்டார்.

The Hindu/ Times of India 2nd August 2015

## வாசகர்கள் / மக்கள் கவனத்திற்கு

2001ஆம் ஆண்டு டிசம்பர் 13 ஆம் நாள் நமது நாடாளுமன்றம் ஓர் முற்றுகைக்கும் தாக்தலுக்கும் ஆளானதும் அது முதல் பல கேள்விகள் நாம் எழுப்பினோம். அந்தக் கேள்விகளில் நாடாளுமன்றத் தாக்குதல் ஓர் உள்ளிருப்பு வேலை என்பதைத் தெளிவுபடுத்தினோம். பின்னர் அது நமது அரசு ஏற்பாடு செய்த ஓர் தாக்குதல் என்பது தெளிவுபடுத்தப்பட்டது.

அதே போல் 2008 மலேகோன் குண்டு வெடிப்புகள் நடந்தன. அதையும் நாம் உள்ளிருப்பு வேலை என நிரூபித்துக் காட்டினோம்.

பின்னர் அதுவும் அரசு ஏற்பாடு செய்தது என்பது தெளிவானது.

தொடர்ந்து சந்நியாசி அசீமானந்தா வின் வாக்கு மூலம் வெளிவந்தது. அதனை தொடர்ந்து எல்லா குண்டு வெடிப்புகளும் நமது சங்கப்பரிவாரமும் இணைந்து நடத்தியவை என்பது தெளிவானது.

மும்பைக் குண்டு வெடிப்புகள் நடந்த போது இதன் பிறகு விழிப்புணர்வு ஒன்று மக்களிடமில்லை. ஆனால் கடந்த 10 ஆண்டுகளாக நடந்தவற்றை கூர்ந்து கவனித்த போது ஓர் உண்மை புலப்பட்டது. மும்பைக் குண்டு வெடிப்பும், ஓர் உள்ளிருப்பு வேலையாக்தான் இருக்கும் என்பதே அந்த உண்மை. ஆனால் போதுமான விழிப்புணர்வு இல்லாததால் அதனை கேள்வியாக்கிட தவறிவிட்டோம்.

இனி ஊடகங்கள் சொல்லும் தகவல்களின் படி 1993 மும்பைக் குண்டு வெடிப்புகள் பாபரி மஸ்ஜித் குண்டு வெடிப்பின் எதிரொலியே! அப்படியானால் பாபரி மஸ்ஜித்-ஐ இடித்தவர்களுக்கு என்ன தண்டனை? இன்றளவும் அவர்கள் தண்டிக்கப்படவில்லையே! இதுதான் நீதி!

**எம்.ஜி.எம்.**

**இஸ்லாம் அல்லாதவர்கள் குர்ஆன் பிரதிகளை இலவசமாக பெற அனுக வேண்டிய முகவரி**

**தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட்**
52/1, மண்ணடித் தெரு,
அறை எண் 7,
மண்ணடி
சென்னை – 600 001.
தொலை பேசி எண் : 8148129887

# யாகூப் மேமனின் கடைசி மணித்துளிகள்



**"அவனுக்கு அல்லாஹ்வின் மன்றத்தில் நீதி செலுத்தப்படும், அதுவே அனைத்திலும் சிறந்தது"...யாகூப் மேமன்**

"உங்களுக்கு வாழ்வு அளிப்பவன் அவனே. பின்னர், அவனே உங்களை மரணமடையச் செய்கின்றான். மேலும், அவனே உங்களுக்கு மீண்டும் உயிர் கொடுப்பான். உண்மையில், மனிதன் பெரிதும் சத்தியத்தை நிராகரிப்ப வனாக இருக்கின்றான்." அல்குர்ஆன் (22:66)

"அல்லாஹ்வின் அனுமதியின்றி எந்த ஓர் ஆன்மாவும் மரணிக்க இயலாது, அவனுக்கு அல்லாஹ்வின் மன்றத்தில் நீதி செலுத்தப்படும், அதுவே அனைத்திலும் சிறந்தது" இதுவே யாகூப் மேமன் தூக்கில் தொங்கவிடப் படுவதற்கு முன் ஓதிக்கொண்டிருந்த குர்ஆன் வரிகள்.

அன்று அவருக்கு 53வது பிறந்தநாள். அதற்கு முதல் நாள் மாலை வரை குடியரசு தலைவர் தன்னுடைய தூக்கு தண்டனையை நிறுத்திவிடுவார் என நம்பினார் யாகூப்.

"புதன்கிழமை மாலை நாங்கள் உச்ச நீதிமன்றம் அவருடைய மனுவை நிராகரித்து விட்டது என்பதை அவருக்கு தெரிவித்தோம். யாகூப் மிகுந்த பதட்டமடைந்துவிட்டார். ஆனாலும் அவர் தன்னுடைய கருணை மனு இன்னமும் குடியரசுத்தலைவர் முன்னால் நிலுவையில் உள்ளது, அது ஏற்றுக்கொள்ளப் படலாம் என எங்களிடம் கூறினார்" என்று கூறுகிறார் யாகூபின் நாக்பூர் வழக்கறிஞர் அனில் கேதாம். அவர் யாகூபை சந்தித்த போது அவருடன் யாகூபின் உடன் பிறந்த சகோதரர் சுலைமான் மேமனும் அவருடைய ஒன்று விட்ட சகோதரர் உஸ்மானும் உடன் இருந்தனர்.

யாகூப் மேமன் அதிகாலை 6.45 மணியளவில் தூக்கில் தொங்கவிடப்பட்டு கொல்லப்பட்டார். நீதியும் அவருடன் சேர்த்து தொங்கவிடப்பட்டது. அது நாக்பூர் சிறைச் சாலையில் சுதந்திரம் கிடைத்ததில் இருந்து நடத்தப்பட்ட 24வது தூக்கு. அந்த மாநிலத்திற்கு 56வது தூக்கு.அதில் அஜ்மல் கசாபும் அடக்கம்.

## விளக்குகள் அணைக்கப்பட்டன

அதிகாலை 5.45 மணியளவில் நாக்பூர் சென்ட்ரல் சிறைச்சாலை பகுதியின் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. தெரு விளக்குகளும் அணைக்கப்பட்டன. பின்னர் மின்சாரம் வழங்கப்பட்டது. இது சிறை அதிகாரிகளுக்கு நாக்பூர் காவல் துறை தந்த சமிக்ஞை. எல்லா பந்தோபஸ்துகளும் செய்யப்பட்டு விட்டன. நீங்கள் தூக்கில் போடலாம் என்பதே அது.

## யாகூப் மேமனின் உயில்

யாகூப் தன்னுடைய உயிலை புதன்கிழமை இரவு எழுதினார். சிறை அதிகாரிகளிடம் பத்திரத்தாள் இல்லாத காரணத்தால் வெள்ளை வெற்றுத்தாளில் அவருடைய உயிலை எழுதித்தரும்படி சிறை அதிகாரிகளால் கூறப்பட்டார். அதில் யாகூப் தன் சொத்தை மூன்றாக பிரித்து ஒன்றை தன் மனைவி ரஹீனுக்கும் மற்றொரு பகுதியை தன் மகளுக்கும் மூன்றாவது பகுதியை தன்னுடைய சகோதரர் சுலைமானுக்கும் வழங்கினார். ஏனெனில் சுலைமான் யாகூபின் வழக்கிற்காக பெரும்பணத்தினை செலவு செய்துள்ளார். சிறை கண்காணிப்பாளரும் மற்றொரு சாட்சியும் அந்த வெள்ளை காகிதத்தில் கையெழுத்திட்டனர். எனவே, அது தற்போது மதிப்புள்ள உயிலாக மாறிவிடும்.

## நிரந்தர தூக்கத்திற்கு...

திங்கட்கிழமையும் செவ்வாய் கிழமையும் யாகூப் இரவு தூங்கவில்லை. தான் சாகும் வரை தூங்காமல் இருப்பது என முடிவு செய்திருந்தார். நான் நிரந்தரமாக தூங்க இருப்பதால் எனக்கு இந்த தூக்கம் தேவையில்லை எனக் கூறிக்கொண்டிருந்தார். அவருடைய சிறைக்கூட்டாளிகள் சிலர் புதன்கிழமை மதியம் உணவு உண்ணமால் அவருடன் நேரத்தை கழித்துக்கொண்டிருந்தனர்.



அதன் பின்னர் அவர் தனி சிறைக்கு கொண்டு செல்லப்பட்டார். அப்போது யாகூப் தன் சிறைக்கூட்டாளிகள் அனைவருக்கும் "இறைவன் உங்களை ஆசிர்வதிக்கட்டும்" என வாழ்த்து கூறினார்.

தூக்கிலிடப்பட இருந்த இரவு, அன்றைய இரவு உணவை அவர் எடுத்துக்கொள்ளவில்லை. குர்ஆனை ஓதிய வண்ணமிருந்தார். நள்ளிரவில் அவர் சிறை அதிகாரிகளிடம் தன்னுடைய சிறைக்கூட்டாளிகளை சந்திக்க அனுமதி கோரினார். அதிகாலை 2மணியளவில் அவரால் அதற்கு மேலும் முடியாமல் தூங்கிவிட்டார்.

## "நான் அப்பாவி....இது அநீதி..."

அவர் 2 மணியளவில் தூங்கி விட்டார். அதன் பின்னர் அவரை மூன்று முறை முயன்று எழுப்ப வேண்டியதாகிவிட்டது. தூக்கத்தில் இருந்து எழுந்தவுடன் அவர் தொழுகையை நிறைவேற்றினார். அவருக்கு ஒரு பக்கெட் சுடு தண்ணீர் கொடுக்கப்பட்டது. குளிக்கும் போது அவர் அல்லாஹ்வை துதித்த வண்ணம் குர்ஆன் வசனங்களை ஓதிக்கொண்டிருந்தார்.

மருத்துவர்கள் அவரை பரிசோதித்தனர். எல்லாமே சரியாக இருந்தது. ஒரு மூத்த சிறை அதிகாரியும் மூன்று காவலர்களும் அவரை தூக்கு மேடைக்கு அழைத்து சென்றனர்.

"மே பே குணா ஹூன்.....நான் அப்பாவி, இது அநீதி" யாகூப் மேமன் மீண்டும் மீண்டும் இதை கூறிக்கொண்டிருந்தார். சிறை வழக்கப்படி தூக்கில் தொங்கப்படுவதற்கு முன் ஒரு மதத்தலைவர் அவருடைய பாவங்களை ஏற்றுக்கொள்ளும்படி கோரினார். ஆனால் யாகூப் தான் ஒரு அப்பாவி என கூறிவிட்டார்.

அதன் பின்னர் யாகூப் பின் வரும் குர்ஆன் வசனங்களை ஓதிக்காட்டினார்," உங்களுக்கு வாழ்வு அளிப்பவன் அவனே. பின்னர், அவனே உங்களை மரணமடையச் செய்கின்றான். மேலும், அவனே உங்களுக்கு மீண்டும் உயிர் கொடுப்பான். உண்மையில், மனிதன் பெரிதும் சத்தியத்தை நிராகரிப்பவனாக இருக்கின்றான்."

அவர் மேலும் கூறினார் "அல்லாஹ்வின் அனுமதியின்றி எந்த ஓர் ஆன்மாவும் மரணிக்க இயலாது, அவனுக்கு அல்லாஹ்வின் மன்றத்தில் நீதி செலுத்தப்படும், அதுவே அனைத்திலும் சிறந்தது".

## "அல்லாஹ்" என்பதே அவரின் கடைசி வார்த்தை

தூக்கில் தொங்கவிடப்படுவதற்கு முன் அவர் கடைசியாக சூரிய உதயத்தை பார்க்கவேண்டும் என கோரினார். ஆனால் அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஏனெனில் அவர் அதற்கு முன் தூக்கிலிடப்பட இருந்தார். அவர் அல்லாஹ்வின் திருநாமத்தை உச்சரித்துக் கொண்டே இருந்தார். அவருடைய கழுத்தில் கயிறு இறுக்கப்படும் போது அவருடைய சத்தம் இன்னும் அதிகரித்தது. அவர் அமைதியாக இருந்தார். குற்ற உணர்வு ஏதும் அவரிடம் இல்லை.

"அல்லாஹ் எல்லாம் வல்லவன், அறிவாளன் அனைத்தையும் அறிந்தவன். நான் ஓர் அப்பாவி. நான் கண்டிப்பாக தூக்கில் போடப்படக்கூடாது. இது ஓர் அநீதி. அரசியல் படுகொலையால் பாதிக்கப்படுவர்களில் நானும் ஒருவன்" என யாகூப் கூறினார்.

தூக்குமேடையின் பிடி இழுக்கப்பட்ட பிறகும் அவருடைய வாய் அல்லாஹ்வை

துதித்துக்கொண்டிருந்தது. குர்ஆன் வசனங்களை ஓதிக்கொண்டிருந்தது. அல்லாஹ் என்பதே அவரின் கடைசி வார்த்தை.

### மகளின் பிறந்தநாளுக்கு வாழ்த்திய யாகூப்

சிறை அதிகாரிகளின் கூற்றுப்படி யாகூப் தன்னுடைய மகளுடன் புதன்கிழமை மாலை தொலைபேசியில் பேசினார். ஜூலை 31ம் தேதி வரவிருக்கும் அவருடைய பிறந்த நாளுக்காக முன்கூட்டியே வாழ்த்தினார். தன் மகளிடம் தான் அவளுக்கு எந்த மகிழ்ச்சியையும் தரமுடியாமல் போனதற்காக யாகூப் வருத்தம் தெரிவித்தார். அவளுடைய பிறந்த நாளுக்கு வரமுடியாமல் போவது பற்றியும் ஒரு நல்ல தந்தையாக தான் இருக்கமுடியாமல் போனதை பற்றியும் அவர் வருத்தம் தெரிவித்தார். அவருடைய கடைசி ஆசை தன் மகளை கடைசியாக பார்க்க வேண்டும் என்பதே.

http://www.ndtv.com/india-news/yakub-kept-repeating-he-was-hanging-for-his-brothers-sins-lawyer-1202382

http://www.siasat.com/news/justice-will-be-given-him-allahs-court-which-supreme-yakub-803735/

**அபு அஃப்ரஹ்**

# அகதிகள் முகாம்களில் இப்தாரும் (ஈத்) பெருநாளும்!

அரபு நாடுகள் முற்றாக்கக் கொந்தளித்துக் கிடக்கின்றன. அன்றாடம் பல்லாயிரக்கணக்கில் முஸ்லிம்கள் அகதிகளாகிக் கொண்டிருக் கின்றார்கள்.

நாங்கள் அந்த இடத்தைப் பிடித்துவிட்டோம் இந்த இடத்தைப் பிடித்துவிட்டோம் என அறிக்கைகள் விடுகின்ற அமைப்புகள். தங்களால் சொந்த இருப்பிடங்களையும் வாழ்க்கை துணையையும் இழந்து அகதிகளாக நிற்கும் முஸ்லிம்களைப் பற்றி கவலைப்படுவதில்லை.

உலக முஸ்லிம்களுக்கு இப்படியொரு நிலை வரவேண்டும் என எதிர்பார்த்துக் காத்திருந்ததைப் போல் ஐக்கிய நாடுகள் சபையும் எந்த நிவாரணத்தையும் இந்த மக்களுக்கு செய்வதில்லை.

இந்நிலையில் இந்த அகதிகளின் நோன்பு இஃப்தார் ஆகியவற்றைப் பற்றி யாரும் கவலைப்படுவதில்லை என்றாகிவிட்டது.

இந்நிலையில் உதுமானிய கலீபாவின் கொள்ளுபேரன், இன்னும் துருக்கியில் இஸ்லாத்தை இலட்சியமாக கொண்டு வாழ்பவர்கள். இவர்களெல்லாம் இணைந்து நடத்திவரும் Turkish Islamic Cultural Association துருக்கி இஸ்லாமிய கலாச்சார கழகம், அகதிகள் முகாம்களில் இஃப்தார் ஸகர் ஈத் ஆகியவற்றிற்கான ஏற்பாடுகளைச் செய்தார்கள்.

### உலக முஸ்லிம் சகோதரத்துவம்

பல கோடி ரூபாய்கள் இதற்காக நித்தம், நித்தம் செலவாயின. இதில் ஒரு பகுதியை துருக்கிய அரசும், இதரத் தொகையை வியாபாரிகள், அலுவலர்கள் என முஸ்லிம் தனவந்தர்களும் ஏற்றுக் கொண்டார்கள்.

இந்த அமைப்பு ஆஸ்திரேலியாவிலும் இதே ஏற்பாட்டை அங்குள்ள அகதிகள் முகாமில் கடந்த 14 ஆண்டுகளாகச் செய்து வருகின்றது. இதில் ஈராக், சிரியா, ஆப்கானிஸ்தான், மங்கோலியா, ஆகிய இடங்களிலுள்ள அகதிகள் வாழ்ந்து வருகின்றனர். இதில் தன்னார்வ தொண்டர்களாக பல கிருஸ்தவர்களும் கலந்து கொள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு ஈகை திருநாளின் போதும் முஸ்லிம்கள் தொழுகைக்குப் புறப்படும் முன் பலகோடி ரூபாய்களை ஈந்து, ஏழைகளையும் களிப்புற செய்துவிட்டே தொழுகைக்குச் செல்கின்றார்கள்.

ஆந்திராவில் முன்னர் எடுக்கப்பட்ட ஓர் கணிப்பில் ரூ. 60 கோடி ஃபித்ராவாக வழங்கப்பட்டிருந்தது. இப்போது அது பல மடங்குகளாக உயர்ந்திருக்கும்.

**எம்.ஜி.எம்.**

# டி.எம். உமர் ஃபாரூக்
# ஒரு தலித் போராளியின் வாழ்வும் அவர் காட்டிய வழியும்!

- ஆ. மார்க்ஸ் -

## டி.எம். உமர் பாரூக் (1944–2015)

### ஒன்று

சுமார் இரண்டு மாதங்கள் இருக்கலாம். ஒரு காலை நேரத்தில் நான் பெரிதும், மதிக்கிற டி.எம். உமர் ஃபாரூக் ஆகிய டி.எம். மணி அவர்கள் என்னை அழைத்தார். நான் சற்றுப் பதட்டத்துடன் பதிலளித்தேன். என் பதட்டத்திற்குக் காரணம் குற்ற உணர்வு. அவருக்கு மாரடைப்பு வந்து 'ஆஞ்ஜியோ' செய்து சுமார் ஆறு மாத காலமாகியும் சென்று பார்க்கவில்லையே என்பதால் விளைந்த பதட்டம்.

சென்ற ஆண்டு இறுதியில் சுமார் ஒரு மாத காலம் அவர் சென்னையில் சிகிச்சை மேற்கொண்ட காலத்தில் எனக்கு அது தெரியாது. மாரடைப்புக்குச் சுமார் ஒரு வாரம் முன்னதாகச் என் வீட்டிற்கு வந்திருந்தார். சென்னை வரும் பொழுது யாரையேனும் துணைக்கு அழைத்துக் கொண்டு அவர் என் வீட்டுக்கு வந்து போவது வழக்கம். ஏதாவது முக்கிய விடயங்கள் குறித்து விவாதித்து விட்டுச் செல்வார். அன்று வந்தபோது சற்றுக் கோபமாகவும், கவலையோடும் காணப் பட்டார். பெ. மணியரசன் சமீபத்தில் எழுதி வெளியிட்டுள்ள 'தமிழ் தேசியமும், சாதியமும்' எனும் நூலில் டாக்டர் அம்பேத்கர் அவதூறு செய்யப்பட்டுள்ள தாகவும் அதற்குச் சரியான ஒரு பதில் எழுத வேண்டும் எனவும் கூறினார். நான அந்த நூலைப் படிக்கவில்லை, எனக்கு ஒரு பிரதியை அவர் கொண்டு வந்திருந்தார். கூட இஸ்லாத்திற்கு மாறிய அவரது இரண்டாம் மகன் சம்சுதீனும் இருந்தார்.



மணியரசன் போன்றோர் கிட்டத்தட்ட இந்துத்துவவாதிகள் அளவிற்குப் போய்க் கொண்டிருப்பதையும், தமிழ்த் தேசியம் அங்கு போய் நிற்பதில் வியப்பில்லை எனவும் நான் கூறினேன். அம்பேத்கர் பற்றி மணியரசன் எழுதியுள்ளதற்கு ஒரு நல்ல பதில் எழுத வேண்டும் எனவும் படித்து விட்டு என்னு டைய கருத்துக்களைச் சொல்லுமாறும் கூறி அகன்றார்.

இது நடந்த சில நாட்களில் மாரடைப்பு வந்து ஆன்ஜியோ எல்லாம் செய்து அவர் வீட்டிற்குத் திரும்பியுள்ளதைச் சற்று தாமதமாக அறிந்த நான் அவரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். வந்து பார்க்கிறேன் என்றேன். தான் வேலூரில் மகள் வீட்டில் ஓய்வெடுப்பதாகவும், ஒரு மாதத்தில் குடந்தை வந்துவிடுவதாகவும் பிறகு

வந்து பார்க்கலாம் எனவும் சொன்னார். அத்தோடு நிறுத்தவில்லை மணியரசன் நூலுக்குத் தான் மறுப்புரை எழுதத் தொடங்கி விட்டதாகவும், கூடவே ‘அம்பேத்கரின் மதமாற்றத்திற்குப் பின்னுள்ள அரசியல்’ என்றொரு குறு நூல் எழுத இருப்பதாகவும் சொன்னார். தேவையான குறிப்புகள் எதுவும் இருந்தால் உடன் அனுப்பி வையுங்கள் என்றார். தனது உடல்நிலை, சிகிச்சை மேற் கொண்டது இது குறித்தெல் லாம் அவர் ஏதும் பேசவில்லை. இதைத்தான் திரும்பத் திரும்பக் கூறினார். இருக்கட்டும். இப்போதைக்கு இது குறித்துக் கவலைக் கொள்ளாமல் ஓய்வெடுங் கள் என்று சொல்லி செல்பேசியை நிறுத்தி னேன்.

மனம் கனத்திருந்தது. தமிழகத்தில் எவ்வளவோ மெத்தப் படித்த அம்பேத் கரியர்கள் எல்லாம் இருக்கும் போது வெறும் ஆரம்ப கல்வி மட்டுமே படித்த இந்த தலித் போராளிக்கு அம்பேத்கர் மீது பூசப்படும் அவதூறைக் களைய வேண்டும் என்கிற துடிப்பை நினைத்தபோது மனம் கசிந்தது.

பின் அவர் சற்று, ஆம் சற்றுதான் உடல் தேறி திருப்பனந்தாள் திரும்பியவுடன் திருவிடைமருதூர் வட்டத்தைச் சேர்ந்த மட்டியூரில் பொது இடத்தில் ஏற்றப் பட்டிருந்த தலித் இயக்க கொடிகளை அவ்வூர் வன்னிய சாதியினர் இரு முறை உடைத்துப் போட்ட பிரச்சினையில் அவர் ஈடுபட்டிருந் ததை அறிந்தேன். இதற் கிடையில்தான் இரண்டு மாதத்திற்கு முன் அதிகாலையின் அவரிடமிருந்த அழைப்பு வந்தது. “கும்ப கோணத்திலா இருக்கீங்க?” என்றார். ‘ஆம்’ என்றேன். ‘வந்து பார்க்கிறேன்’ என்றார். ‘வேண்டாம் நீங்க ஓய்வெடுங்க நான் வந்து பார்க்கிறேன்’ எனச் சொன்னேன்.

ஆனால் போகவில்லை. அடுத்த வாரத்தில் நான் சென்னையில் இருந்தபோது (ஜூன் 5, 2015) அவரது மூத்த மகனும், தற்போது அவரது ‘நீலபுலிகள்’ இயக்கத்திற்கு அவருக்குப் பின் தலைவராகத் தேர்ந் தெடுக்கப்பட்டு இருப்பவருமான புரட்சி மணி தன் தந்தை இறந்த செய்தியைப் பகிர்ந்து கொண்ட போது துடித்துப் போனன்.

உமர் ஃபாரூக்காக அவர் மாறுமுன் டி.எம். மணி என்கிற பெயரில் குடந்தையைச் சுற்றியுள்ள கிராமங்களில் சாதி வெறியர் களுக்கு ஒரு சிம்ம சொப்பனமாக அவர் அறியப்பட்டிருந்த காலத்திலிருந்தே எனக்கு அவர் பழக்கம். 90களுக்கு முன் தலித் அமைப்புகள் மாநில அளவில் வலுவான திரட்சி பெறாமல் நிலவுடைமையயும் சாதி ஆதிக்கமும் வேரோடியிருந்த இடங்களில் வலுவான இயக்கங்களை அமைத்துப் போராடி வந்தன. பல வெற்றிகரமான இயக்கங்களை நடத்தியுள்ளன. பல தியாகங்களைச் செய்துள்ளன. கும்பகோணம் பகுதியில் டி.எம். மணி, பேராவூரணி பகுதியில் அரங்க குணசேகரன், பரமக்குடி பகுதியில் சந்திரபோஸ் இப்படிப் பலரையும் சொல்லலாம்.

மணி அவர்கள் செயல்பட்ட திருப்பனந் தாளும் சுற்று வட்டாரங்களும் வரலாற்றுக் காலந்தொட்டு நிலவுடமை ஆழ வேர் விட்டிருந்த பகுதிகள் தஞ்சை மாவட்டத்தின் மூன்று முக்கிய சைவ மடங்களுள் திருப்பனந்தாளும் ஒன்று. இந்த மடங்கள் ஒவ்வொன்றிற்கும் 6,000 வேலி(சுமார் 40,000) ஏக்கர் நிலங்கள் உண்டு. இது தவிர இலங்கை போன்ற வெளிநாடுகளிலும் அவர்களுக்கு நிலங்கள் உண்டு. மணி அவர்கள் செயல்பட்ட திருப்பனந்தாள், கும்பகோணம், திருவிடை மருதூர் முதலானவை மேலத் தஞ்சையில் அடங்கும். அதாவது காவிரிக்கு மேற்புறம் உள்ளவை. கீழ்ப்புறம் உள்ள மன்னார்குடி, திருவாரூர், திருத்துறைப்பூண்டி, நாகை முதலானவை கீழத் தஞ்சை. கீழ்த் தஞ்சையில் தலித் மக்கள் அளவில் அதிகம். இதற்குப் பல வரலாற்றுக் காரணங்கள் உள. இது குறித்து நான் எனது வெண்மணி பற்றிய கட்டுரையில் விரிவாகச் சொல்லியுள்ளேன்.

கீழத் தஞ்சையில் கம்யூனிஸ்டுகளின் தலைமையில் விவசாயத் தொழிலாளிகள் என்கிற வகையில் தலித் மக்கள் திரட்டப் பட்டனர். ஓரளவு சாணிப்பால், சாட்டையடி முதலானவை முடிவுக்கு வந்தன. மேலத் தஞ்சையில் கம்யூனிஸ்ட் இயக்கங்கள் காலூன்ற இயலவில்லை. இந்நிலையில்

நிலப்பிரபுத்துவ கொடுமையுடன் பின்னிப் பிணைந்து நின்ற சாதீய ஆதிக்கத்தை திருப்பனந்தாள் பகுதியில் எதிர்த்து நின்றவர் டி.எம். மணி அவர்கள். ஒரு பக்கம் வெள்ளாள மடம். இன்னொரு பக்கம் இங்கு ஆதிக்க சாதியினராக இருந்த வன்னியர்களின் சாதிக் கொடுமைகள் இரண்டையும் எதிர்த்து நின்றது டி.எம். மணி அவர்களின் 'அம்பேத்கர் மாணவர் இளைஞர் பேரவை' மற்றும் 'நீலப்புலிகள்' இயக்கம். 1970களின் பிற்பகுதி தொடங்கி சாவதற்கு முதல் நாள் வரை தலித் களுக்கான வீரஞ்செறிந்த பல போராட்டங் களை நடத்தி ஆயுள் தண்டனை வரை எதிர்கொண்டவர் மணி அவர்கள்.

தொண்ணூறுகளின் தொடக்கத்தில் இங்கு உருவான தலித் எழுச்சியுடன் இணைந்து செயல்பட்ட எங்கள் மீது அத்தனை நல்ல கருத்து மணி அவர்களுக்கு ஆரம்ப காலத்தில் கிடையாது. எங்கள் மீது மட்டுமல்ல, அன்று உருவான 'தலித் எழுச்சி' யின் விளை பொருட்கள் எதன் மீதும் அவருக்கு அப்படி ஒன்றும் பெரிய மரியாதை இறுதி வரை இல்லை. எனினும் அவரது வரலாற்றை அறிந்த எனக்கு அவர் மீது மிகுந்த மரியாதை. இதழாளர் டி.என். கோபாலனும், மதுரை வழக்குரைஞர் ரஜினியும் அப்போது 'தலித் தோழமை மையம்' என்றொரு தொண்டு நிறுவனம் நடத்திக் கொண்டிருந் தார்கள். என்ன நிகழ்ச்சி என எனக்கு நினைவில்லை. ஏதோ ஒரு 'பிராஜெட்'டுக்கு அப்போது கும்பகோணத்தில் இருந்தவன் என்கிற முறையில் என்னிடம் உதவி கோரினார்கள். மகாமகக் குளத்தங்கரையில் இருந்த ஒரு அரங்கில் நடந்த உரையாடலுக்கு முக்கிய பேச்சாளராக நான் மணி அவர்களை அழைத்திருந்தேன்.

அவருடைய பேச்சு எங்களின் அன்றைய அந்த முயற்சி மீதான கடும் விமர்சனமாக இருந்தது. இன்னொரு சந்தர்ப்பத்தில் மன்னார்குடியில் நாங்கள் நடத்திய அம்பேத்கர் விழா அழைப்பிதழில் நண்பர்கள் சரியாக 'புரூஃப்' பார்க்காமல் அவரது பெயர் டி.எஸ். மணி என அச்சாகியிருந்தது. அவர் அந்த கூட்டத்தைப் புறக்கணித்ததோடு அவருக்குப் பதிலாக நீலப் புலிகள் இயக்கத்திலிருந்து பங்கேற்ற தோழர் எங்களைச் சாடித் தீர்த்துவிட்டார். இந்நேரம் ஒரு உயர் சாதித் தலைவராக இருந்திருந்தால் இத்தனை அலட்சியமாகப் பெயரை அச்சிட்டிருப்பீர்களா எனக் கடும் விமர்சனத்தை அவர் முன் வைத்தபோது நொந்து போனேன். பின் குடந்தையில் மணி அவர்களைச் சந்தித்து மன்னிப்புக் கோரினேன். 'தமிழ்க் குடிதாங்கி' என்கிற ஒரு சிறப்பை மருத்துவர் இராமதாசுக்குத் தொல் திருமாவளவன் அவர்கள அளிப்பதற்குப் பின்னணியாக இருந்த குடிதாங்கி சுடுகாட்டுப் பாதைப் பிரச்சினை குறித்து 'நிறப்பிரிகை' இதழில் நாங்கள் வெளியிட்டிருந்த கள ஆய்வு குறித்த மணியின் காட்டமான விமர்சனத்தை இன்றும் நீங்கள் அவரது 'சாதி ஒழிந்தது' நூலில் காணலாம்.

எனினும் காலம் எல்லாவற்றிலும் மாற்றத்தை விளைவிக்கும்தானே. கடந்த பத்தாண்டுகளில் அவர் என் மீது மிக்க அன்பை வெளிக்காட்டினார். நூல்கள் எழுதும் போது ஆலோசனைகள் கேட்பது. அவரது நீலப்புலிகள் இயக்கத்தின் கூட்டங் கள் அனைத்திற்கும் என்னைத் தவறாது அழைப்பது என்பதாக அந்த நட்பு தொடர்ந்தது. கடைசியாக நான் அவரது மேடையில் பேசியது சென்ற ஆண்டு நடைபெற்ற அவரது மகன் புரட்சிமணியின் திருமணத்தின் போது.

மணி அவர்கள் எந்த ஆண்டு பிறந்தார். அவருடைய சரியான வயது என்ன என்பது குறித்து அவரது குடும்பத்தாரிடம் இன்று உறுதியான தகவல்கள் இல்லை. 1995ல் வெளியிடப்பட்டுள்ள அவரது "தீண் டாமைக்குத் தீர்வு" என்னும் நூலின் 'என்னுரையில்' அவர் அப்போது தனக்கு 48 வயது என்கிறார். கீழே கையொப்பத்தில் 10.5.92 எனத் தேதியிடப்பட்டுள்ளது. எனவே அவர் 1944ல் பிறந்திருக்கிலாம். இறக்கும் போது அவருக்கு 71 வயதிருக்கலாம். எட்டாம் வகுப்பு வரை படித்தாகச் சொல்கின்றனர். அவரே எழுதியுள்ள ஒரு குறிப்பில் தான்


ஆரம்பக் கல்வி வரை மட்டுமே படித்தவன் என்கிறார்.

இறுதிக் காலத்தில்தான் அவரது உடல் சற்று தளர்ந்திருந்தது. மற்றபடி நிமிர்ந்த நன்னடை, நேர் கொண்ட பார்வை என்பார்களே அப்படி ஒரு தோற்றம். இரும்பால அடித்துச் செய்தது போன்ற உடல், நறுக்கு தெறித்தாற் போன்ற பேச்சு இப்படித்தான் கம்பீரமாக அவர் தோன்றுவார்.

அவரது அப்பா திருப்பனந்தாள் முத்து குறித்தும் அவர் இப்படித்தான் ஓரிடத்தில் கூறுகிறார். அவர் அழகானவர் எனவும், நிகண்டுகள் மற்றும் முக்கிய தமிழ் இலக்கியங்களின் பாடல்கள் பலவற்றை நினைவில் வைத்துக் கொள்ளக் கூடியவர் எனவும், நன்றாகப் பாடுவார் எனவும் குறிப்பிடுகிறார். மணி அவர்களும் தமிழ் இலக்கியம், தமிழ் மற்றும் இந்திய மரபுகள் அம்பேத்கரியம், பெரியாரியம் ஆகியவற்றில் ஆழ்ந்த புலமை மிக்கவர் என்பதை அவரது நூற்களை வாசித்தால் புலப்படும். காந்தி அடிகள் தனக்குச் சத்தியத்தின் மேன்மையை உணர்த்திய வரலாறு எனச் சொல்லும் அரிச்சந்திரன் கதையின் தமிழ் வடிவமான ‘அரிச்சந்திர புராணம்’ குறித்த மணி அவர்களின் கட்டுரை (தீண்டாமைக்குத் தீர்வு) அவரது தமிழ்ப் புலமைக்கும், விமர்சனப் பார்வைக்கும் ஒரு சான்று. அரிச்சந்திரன் கதை சத்தியத்தின் மேன்மையை விளக்குகிறதோ என்னவோ, அது சாதீயத்தையும் தீண்டாமையையும், வருண வேறுபாட்டையும் எப்படியெல்லாம் நியாயப்படுத்துகிறது என்பதை அவர் அதில் தோலுரிப்பார்.

அவரது அத்தனை குறுநூல்களுமே முக்கியமானவை. ‘செந்தமிழ்நாட்டுச் சேரிகள்’, ‘சாதி ஒழிந்தது’ ஆகியன இலக்கியத் தரமானவை.

1956 டிசம்பர் 6 அப்போது மணிக்கு வயது 12. அவரும் சற்றே மூத்த அவரது மாமாவும் பந்தநல்லூர் கடைவீதியில் நின்றுகொண்டிருந்த போதுதான் வானொலி அந்தத் துயரச் செய்தியை அறிவித்தது. அண்ணல் அம்பேத்கர் மறைந்தார். இதைக்




கேட்டவுடன் மணியின் மாமா தலையில் அடித்துக் கொண்டு அழத் தொடங்கினார். என்னவென்று தெரியாமலேயே மணியும் அழுதிருக்கிறார். சுற்றியிருந்த கூட்டம் வேடிக்கை பார்த்துள்ளது. மணி அம்பேத்கரை அறிந்து கொண்டது அப்படித்தான். அதன்பின் டிசம்பர் 6 மற்றும் ஏப்ரல் 14 ஆகியவற்றில் அம்பேத்கர் நினைவை அப்பகுதியில் ஏந்தத் தொடங்கினார் மணி.

அப்படித்தான் ஒரு நாள் 1962 ஏப்ரல் 14 அப்போது மணியின் வயது 18. ஒரு பன்னிரெண்டு பேர் சைக்கிள்களில் அம்பேத்கர் படத்தை மாட்டிக் கொண்டு தீண்டாமை ஒழிக, தேசபிதா அம்பேத்கர் வாழ்க் என முழங்கிய வண்ணம் திருப்பனந்தாளைச் சுற்றியுள்ள பகுதிகளில் நீண்ட பயணம் மேற்கொண்டார். திலோகி கிராம எல்லையை அடைந்தபோது அங்குள்ள தோப்பு ஒன்றில் தோழர்கள் இளைப்பாற மணி அருகிலிருந்த பழைய ஆளரவமற்ற வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருக்கிறார்.

அப்போது வீட்டு கதவைத் திறந்து கொண்டு ஒரு பெரியவர் வந்துள்ளார். தோற்றம் அவரை வெள்ளாளர் எனக் காட்டியது.

பார்த்தவுடன் மணி எழுந்திருக்கிறார். அவர் அமரச் சொல்லி தானும் பக்கத்தில் அமர்ந்து ‘தண்ணீர் வேண்டுமா’ எனக் கேட்டுத் தந்தும் இருக்கிறார். வியப்பு பின் அவர் ‘டி.எம். மணி வாழ்க என்று சொல் கிறார்களே அது யார்?’ எனக் கேட்டிருக் கிறார் மணி சற்றே சுதாரித்துக் கொண்டு, “அது எங்கள் தலைவர்” என்றவுடன் அந்தப் பெரியர் “அவர் வந்துள்ளாரா?” எனக் கேட்டுள்ளார். மணி, “இல்லை” என்றிருக் கிறார்.

அந்தப் பெரியவர் அடுத்துக் கேட்ட கேள்வி மணியின் நெஞ்சில் சொறேர் எனத் தைத்தது. “நீங்கள் நூறு பேர்கள் இருக் கிறீர்கள். நாங்கள் இரண்டு பேர்கள் இருந் தாலும் உங்கள் அவ்வளவு பேரையும் கட்டி வைத்து நாங்கள் அடிப்போம். நீங்கள் நூறு பேர் இருந்தாலும் பேசாமல் வாய்பொத்தி இருப்பீர்கள். அது ஏன் அதுதான் எனக்கு விளங்கவில்லை”. இதை அந்தப் பெரியவர் இறுமாப்புடன் சொல்லவில்லை. அதில் ஒரு அக்கறை இருந்தது.

அந்தச் சொற்கள் மணியிடம் ஆழ்ந்த சிந்தனைகளை ஏற்படுத்தின. தீண்டாமைக்கு எதிரான தனது போராட்டப் பாதை எப்படி இருக்க வேண்டும் என்பது அந்த உரை யாடலின் மூலம் மணிக்கு விளங்கியது.

## இரண்டு

தஞ்சை மாவட்டத்தின் ஒரு வகை மாதிரியான பண்ணை அடிமைக் குடும்பத்தில் ஆறாவது தலைமுறை அடிமையாக ஆறு குழந்தைகளுக்கு மத்தியில் பிறந்த மணி வெகு விரைவில் அப்பகுதி மக்களின் அன்பிற்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமானார். சென்ற மாதம் அவர் இறந்த போது கூடத் திரண்டிருந்த தலித் மக்கள், “இனி எப்படி அய்யா தைரியமா இந்தக் கடை வீதியில் நாங்க வந்து போவோம்” எனக் கதறி அழுததை ஒருவர் குறிப்பிட்டார்.

தலித் மக்களுக்கு பிரச்சினைகளுக்கா பஞ்சம் அதுவும் அவர் எதிர்கொள்பவை சாதாரணப் பிரச்சினைகளா? உயிர்ப் பிரச்சினைகள். இத்தகைய பெரும் பிரச்சினை கள் மட்டுமின்றி, “குடும்பச் சண்டையாக இருந்தாலும், கோழிச் சண்டை, குழந்தைச் சண்டையாக இருந்தாலும் என்னிடம் புகார் சொல்லி முடிந்தால்தான் எங்கள் சேரி மக்களுக்கு நிம்மதி வரும்” என மணி ஓரிடத்தில் குறிப்பிடுவார். அவர் ஆயுள் தண்டனை பெறக் காரணமாக இருந்த திருப்பனந்தாள் கலவரம் (1982) கிட்டத்தட்ட ஒரு போரைப் போலவே நடந்துள்ளது. ஒரு பக்கம் ஆதிக்க சாதியினர். இன்னொரு பக்கம் மணி அவர்களால் திரட்டப்பட்ட தலித் இளைஞர்கள் எனத் திரண்டு மோதிய நிகழ்வு அது. கையில் ஆயுதம் தாங்கிய 25 தலித் இளைஞர்கள் மாட்டு வண்டிகளில் கற்களை ஏற்றிக் கொண்டு எதிரிகளை நோக்கி விரைந்தோடிய போது தங்கள் பிள்ளைகளை கூடத் தடுக்காத தலித் பெண்கள் மணியை மட்டும் ‘நீ இருந்தால் எங்களுக்குப் போதும் எனக் கண்ணீர் மல்கத்’தடுத்ததைப் மணி நினைவு கூர்கிறார்.

இந்துக்களுடனான அந்தச் சமர் ராஜேந்திரன் என்கிற ரவுடிப் பட்டியலில் இருந்த ஓர் இந்து கொல்லப்பட்டதில் முடிந்தது. ஆம் மணி சாதிக் கொடூரர்களை ‘ஆதிக்க சாதி’ அல்லது ‘சாதி இந்துக்கள்’ என்றெல்லாம் குறிப்பிடுவதில்லை. மாறாக அவர்களை ‘இந்துக்கள்’ எனவும் ‘எதிரிகள்’ எனவும்தான் குறிப்பிடுவார். சாதி விலக்கல் மற்றும் தீண்டாமையை மத ரீதியில் நியாயப் படுத்தும் இந்து மதம். அதன் இயல்பிலேயே தீண்டாமையைக் கொண்டுள்ளது என்பது அதன் பொருள். அப்படிக் கடைபிடிப்போர் தலித் மக்களின் எதிரிகள். அவர்களிடம் தேசியம் என்றோ தேர்தல் மூலம் அதிகாரம் என்றோ சமரசம் ஆதல், தலித் மக்களின் விடுதலைக்கு எதிராகவே முடியும் என்பதுதான் இறுதி வரை டி.எம். மணி என்கிற டி.எம். உமர் ஃபாரூக்கின் கருத்தாக இருந்தது என்பது அவரது வாழ்வையும் எழுத்துக்களையும் வாசிப்போர் அறிவர். தலித்

அல்லாத அனைவரையும் இந்துக்கள் எனச் சொல்வதன் மூலம் அவர் தலித்கள் இந்துக்கள் அல்ல என்பதையும் கூடவே வற்புறுத்துகிறார்.

சாதீய சக்திகளுடன் சமரசமற்ற போர் என்பதுதான் 18 வயதில் அந்தத் திருலோகிப் பெரியவரின் சொற்களினூடாக மணி அவர்களுக்கு வந்தடைந்த ஞானம்.

ராஜேந்திரன் கொலை வழக்கில் 54 பேர் குற்றம் சாட்டப்பட்டனர். முதல் குற்றவாளி மணி. அவரது தம்பி மதியழகனும் மற்றொருவரும் ராஜேந்திரனைப் பிடித்துக் கொண்டதாகவும் மணி அவரை வெட்டிக் கொன்றதாகவும் காவல்துறை பொய் வழக்குப் பதிவு செய்து அவரைத் தேடியது. மதம் மாறியிருந்த இஸ்லாமிய இளைஞர்கள் சிலரின் பாதுகாப்பில் தலைமறைவாக இருந்துப் பின் குடந்தை ஆர்.பி. ஸ்டாலின் அவர்கள் மூலம் நீதிமன்றத்தில் சரணடைந்தார் மணி. மணியின் வழக்கை நடத்தியவர் புகழ் பெற்ற வழககுரைஞர் தஞ்சை இராமமூர்த்தி அவர்கள். அவரும் ஓர் ஆதிக்க சாதியினர் தான். அவர் மிகச் சிறப்பாக இந்த வழக்கை நடத்தினார். இறுதிவரை மணி அவர்கள் மிக்க நன்றியுடன் மதித்தவர்களில் இராமமூர்த்தி முதன்மையானவர். விசாரணை நீதிமன்றம் மணிக்கு ஆயுள் தண்டனையும் அவரது சகோதரர் உட்பட இதர ஆறு பேர்களுக்கு தலா ஓராண்டும் தண்டனை விதித்தது. மேல் முறையீட்டின் போதும் மணிக்காக வாதிட்டு விடுதலை வாங்கித் தந்தவர் தஞ்சை இராம மூர்த்தி அவர்கள்தான்.

இந்த வழக்கில் இன்னொன்றையும் இங்கு குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். உண்மையில் ராஜேந்திரனை கொன்றவர் ஒரு 18 வயது இளைஞர். அவர் குற்றத்தை ஒப்புக் கொள்ளத் தயாராக இருந்தார். ஆனாலும் அதற்கு மணி ஒப்பவில்லை.

தொடர்ந்து அப்பகுதி தலித் மக்களின் பிரச்சினைகளுக்காக மணி எடுத்த போராட்டங்கள் ஏராளம். செந்தமிழ்நாட்டுச் சேரிகள் மற்றும் சாதி ஒழிந்தது எனும் நூற்களில் வேட்டமங்கலம், குடிதாங்கி, அண்டக் குடி, புத்தூர், காவல்கூடம், பாலாக்குடி, 23 வேலூர் முதலான ஊர்களில் மணியின் வழிகாட்டலில் நடைபெற்ற போராட்ட வரலாறுகளைக் காணலாம். சேரி மக்கள் என்னென்னவிதமான பிரச்சினைகள் எல்லாம் எதிர் கொள்ள நேரிடும் என்பதை விளக்கும் கையேடுகளாக இவ்விரு நூற்களையும் சொல்லலாம்.


சாதீயத்தின் செயல்பாடுகளை அவர் தன் அனுபவங்களின் ஊடாகவும் படிப்பின் ஊடாகவும் நுணுக்கமாகப் புரிந்து கொண்டு இயங்கினார்.

சாதி குறித்தும் சாதி ஒழிப்பு குறித்தும் அம்பேத்கர் அவர்கள் கோட்பாட்டு ரீதியாகக் கூறுவனவற்றை 1,2. . . எனத் தன் நூற்களில் ஆங்காங்கே மிக நுணுக்கமாக மணி பட்டியலிட்டிருப்பதைக் காணலாம். எங்கு போனாலும் அங்குள்ள புத்தகக் கடைகளில் அம்பேத்கர் நூல்கள் அவை ஆங்கிலத்தில் இருந்தாலும் அவற்றை வாங்கிவிடுவார் என்றார் அவரது அருமை நண்பர் ‘வைகறை வெளிச்சம்’ நிறுவனர் குலாம் முகம்மது அவர்கள்.

அதே போலத் தந்தை பெரியார் சாதி ஒழிப்பு குறித்துச் சொன்னவற்றையும் மிக நுணுக்கமாகத் தன் நூற்களில் கோடிட்டுக் காட்டியிருப்பார் மணி.

தலித்தியத்தின் பெயரால் பெரியாரை அம்பேத்கருக்கு எதிர் நிலையில் நிறுத்திச் சிலர் தனிப்பட்ட நலன்களை முன்நிறுத்திச் சொல்லக்கூடிய காலங்களில் பெரியாரை எந்நாளும் விட்டுக்கொடுக்காது, உயர்த்திப் பிடித்த மணி பெரியாருக்கு எதிரான இந்தப் பொய்ப் பிரச்சாரங்களைக் கண்டித்து சுவாமிமலையிலும் குடந்தை மகாமகக் குளக்கரையிலும் பொதுக் கூட்டங்களை நடத்தி காட்டினார். தலித் மக்களின் இரு கண்களாக அவர் அம்பேத்கரையும், பெரியாரையும் ஏந்தி நின்றார்.

அம்பேத்கர் மற்றும் பெரியார் ஆகியோரின் ஊடாகப் பெற்ற கோட்பாடு பலம், அனுபவங்களின் ஊடாகக் கற்ற பாடங்கள் ஆகியவற்றின் ஊடாக நமது சாதி முறை குறித்து அவர் நுணுக்கமாகப் பல




விடயங்களைக் கூறுவதை அவரது எழுத்துக்களில் நாம் காண இயலும்.

'கிராமங்களின் ஒற்றுமை என்பது அந்த அந்தச் சாதிக் கடமைகளை அவரவர் செய்ய வேண்டுமென்பதுதான்' என்பார் ஓரிடத்தில் (சாதி ஒழிந்தது, பக்.18).

'தலித்கள் தாக்கப்படும் போதும், கொடுமைக்குள்ளாகும் போதும் அனுதாபப் படுவதற்கும் ஆதரவு குரல் கொடுப்பதற்கும் மற்ற சாதியில் ஆட்கள் இருக்கிறார்கள். ஆனால் தலித்துகள் எதிர்த் தாக்குதல் நடத்துவதை அவர்கள் விரும்புவதில்லை' என்பார் இன்னொரு இடத்தில் (சாதி ஒழிந்ததுபக்.25)

எத்தனை நுணுக்கமாக அவர் இந்தச் சாதீயச் சமூகத்தை அவதானிக்கிறார் என்பதற்கு மலைக்குறவர்கள் பற்றிய அவரது கட்டுரை சான்று (காத்தாயி மகன், சாதி ஒழிந்தது பக். 72-82). மலைக்குறவர்கள் என்போர் ஒரு காலத்தில் குற்றப் பரம்பரை யினராகக் கருதப்பட்டோர். பட்டியல் இனத்தில் (ST) இணைக்கப் பட்டுள்ள இவர்களை இன்னும் திருட்டு முதலான குற்றங்களைப் புரிகிறவர்களாகவே காவல் துறை அணுகி வருகிறது. தலித்களை விடக் கீழ்நிலையில் இருக்கும் இவர்கள் தலித்கள் மீது தீண்டாமையைக் கடை பிடிப்பதுதான் வேடிக்கை. பன்றி மேய்த்து வந்து மணியின் ஆதரவில் ஒரு குடியிருப்பை உருவாக்கி வாழ்ந்த இவர்களைப் பற்றிச் சொல்லும் மணியின் கட்டுரை ஒரு சிறுகதை போலச் செறிவுடன் அமைந்த ஒன்று. மலைக் குறவர்களுக்குள் இரு பிரிவுகள். இவர் களுக்குள் திருமண உறவு கிடையாது. இந்த அடிப்படையில் அங்கு உருவாகும் சாதிச் சிக்கல்கள், சாதிப் பஞ்சாயத்துக்கள், அவற்றின் ஊடாகப் பெண்களின் உரிமைகள் பறிக்கப்படுதல் ஆகியவற்றை தொட்டுக் காட்டுகிறது இக்கட்டுரை. 'இந்து மதம் ஏழைகளாகப் பிறந்தவர்களைக்கூட எப்படிப் பிரித்து வைத்திருக்கிறது பார்த்தீர்களா?' என வியக்கும் மணி (பக்.76). இந்தியச் சாதிகள் எதுவும் செட்டியார், வெள்ளாளர், முதலியார், என்றெல்லாம் சொல்லிக் கொண்டாலும் இந்தப் பெயரிலான பொது அடையாளங் களுடன் விளங்குவதில்லை. இவற்றிற்குள்ளும் உட்பிரிவினைகள் கடுமையாக குறிப்பாக திருமண உறவுகளில் கடைபிடிக்கப்படு கின்றன. தலித் சாதிகளும் இதில் விதிவிலக் கல்ல என்பார்.

தலித்கள் அல்லாத அனைவரையும், அவர் இந்துக்கள் எனக் கட்டமிட்டாலும் வரட்டுத் தனமாக அவர் மற்றவர்களை எதிர்கொள்வதில்லை. தஞ்சை இராமமூர்த்தி யின் மீது அவர் கொண்டிருந்த அன்பைக் குறிப்பிட்டேன். அதே போலக் குடந்தையில் வழக்குரைஞர் கீதாலயன் ஆர்.பி.எஸ். ஸ்டாலின் முதலானோரும் அவரால் பெரிதும் மதிக்கப்பட்டவர்கள். தனது போராட்ட வரலாற்றை எழுதும்போதும் அவர் இப்படிப் பல அருமையான காவல் துறையினர், ரெவின்யூ அதிகாரிகள் ஆகியோரை அடை யாளம் காட்டுகிறார்.

ஒரு பிரச்சினை குறித்து காவல்துறை அதிகாரி ஒருவரிடம் பேசிக் கொண்டிருந்த

போது சற்றே உணர்ச்சி வயப்பட்டு சாதிக் கொடுமைகளுக்குக் காரணமான இரண்டு மூன்று பேர்களைச் சொல்லி அவர்களைத் தீர்த்துக் கட்டாமல் விட மாட்டேன் என மணி ஆவேசப்பட்ட போது அந்த அதிகாரி அவரை ஆசுவாசப்படுத்தி அவரது மனைவியிடம் தண்ணீர் கொண்டு வரச் சொல்லிக் கொடுத்துப் பின் தான் முதலியார் சாதியைச் சேர்ந்தவரனான போதும் திருச்சியில் தொண்டு வீராசாமி நடத்திய விடுதியில் தங்கிப் படித்தவன் எனவும், தான் சரியான நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதி கூறி அவ்வாறே செய்து காட்டியதையும் மணி ஓரிடத்தில் குறிப்பிடுவார்.

இளைய பெருமாள் அவர்களைத் தலைவராக ஏற்றுச் செயல்பட்ட மணி அவர் குறித்து மிக மரியாதையுடன் எழுதுவார். இளைய பெருமாள் அவர்கள் இறுதிவரை தலித் மக்களுக்காக உழைத்தவர். இந்து மதத்தை நம்பியவர் காங்கிரஸ்காரர்களும் இப்படியானவர்களும் கூட தலித் பிரச்சினை களில் அக்கறையாகவும், உண்மையாகவும் இருக்க முடியும் என்பதைச் சொல்லும் மணி, எனினும் இத்தகையோரின் நல்லெண்ணச் செயல்பாடுகளுக்குச் சில வரம்புகளுண்டு என்பதையும் நாசூக்காகக் குறிப்பிடுவார்.

காவல்கூடம் எனும் ஊரில் ஒரு பிரச்சினை. தலித் மக்களின் 47 குடிசைகள் கொளுத்தப்பட்ட. நீலத்த நல்லூர் பள்ளிக் கூடத்தில் அம்மக்கள் தஞ்சம் புகுகின்றனர். கேள்விப்பட்டு மணி அங்கு போகிறார். இளையபெருமாளும் அம்மக்களைச் சந்திக்க வருகிறார். இதை அறிந்து அப்பகுதியில் மிக்க செல்வாக்கு உடையவரும், வீடுகளைக் கொளுத்தியவர்களின் உறவினரும், காங்கிரஸ் காரருமான இராமகிருஷ்ணன் என்பவரும் வந்து சக காங்கிரஸ்காரர் என்கிற வகையில் இளையபெருமாளிடம் பேசுகிறார். வீடுகள் எரிந்தவுடனேயே தான் அங்கு வந்து ஒரு மூட்டை அரிசி கொடுத்து சோறு சமைத்துப் போட்டதாகவும், தாசில்தாரிடம் சொல்லி ஒவ்வொரு குடும்பத்துக்கும் 200 ரூபாய் கொடுக்கச் சொன்னதாகவும் மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் ஃபகீர் முகம்மது விடம் சொல்லி இன்னொரு 200 ரூபாய் கொடுக்கச் சொன்னதாகவும், இதை வைத்துக் கொண்டு இந்துக்களின் வீடுகளிலிருந்து மரங்களை வெட்டி குடிசை அமைத்துக் கொள்ளலாம் என்றும் கூறுகிறார். பின்னர் இளையபெருமாள் வீட்டிற்கு அழைத்துச் சென்று தலித்களில் சுப்பிரமணி என்பவர்தான் கம்யூனிஸ்ட் கட்சி வைத்துக் கொண்டு பிரச்சினைகள் செய்வதாகச் சொன்னதோடு, தலித்களே குடிசைகளுக்குத் தீ வைத்துக் கொண்டதாகவும் சொல்லி வைக்கிறார். அதே நேரத்தில் அந்தச் சுப்பிரமணி காவல் நிலையத் தில் சட்ட விரோதக் காவலில் வைக்கப்பட்டு இருந்தார்.

வீடு கட்டிக் கொள்ளும் வரை தலித் மக்கள் எங்கே இருப்பார்கள் என இளைய பெருமாள் கேட்ட போது பக்கத்தில் உள்ள திடலில் தற்காலிகக் கொட்டகை ஒன்று போட்டுக் கொள்ளலாம் என்கிறார் ராம கிருஷ்ணன். சரி பார்த்துச் செய்யுங்கள் எனச் சொல்லி இளையபெருமாள் அகல்கிறார்.

இளையபெருமாள் சென்றவுடன் காவல் நிலையம் சென்று சுப்பிரமணியை மீட்டு வருகிறார் மணி. குடிசைகளைத் திருப்பிக் கட்டுவது மட்டுமல்ல குடிசைகளைக் கொளுத்தியவர்கள் மீது நடவடிக்கை வேண்டும் எனவும் சொல்கிறார்.

அடுத்த சில நாட்களில் பள்ளிக்கூடம் நடத்தவேண்டும் எனச் சொல்லி அங்கு குடியேறியிருந்த தலித்களை வன்முறையாக அரசு வெளியேற்ற முனைந்தபோது மணியின் தலைமையில் மக்கள் வெளியேற மறுக் கின்றனர். 'உதைத்து வெளியேற்றுங்கள்' என சப் கலெக்டர் ஆணையிட்டபோது, 'உள்ளே நுழைந்தால் நீங்கள் தான் உதை வாங்கு வீர்கள்' என மணி பதிலளித்ததைக் கண்டு திகைத்து வெளியேறினார் அதிகாரி.

பின் அப்போதைய மாவட்ட ஆட்சியர் கங்கப்பா தலையிட்டு அம்மக்களுக்கு ஒரு மாதத்திற்குள் 52 வீடுகள் கட்டிக் கொடுக்க வும், குடிசைகளைக் கொளுத்தியவர்கள் மீது

நடவடிக்கை எடுக்கவும் ஆணையிட்டார். கங்கப்பா ஒரு தலித் என்பதும், அடுத்து அவர் வேறு துறைக்கு மாற்றப்பட்டு பழி வாங்கப் பட்டார் என்பதும் குறிப்பிடத் தக்கன. இளையபெருமாள் போன்றோரின் செயல் பாட்டு வரம்பிற்கும் மணி அவர்களின் தீரமிகுக் களச் செயற்பாட்டிற்கும் ஒரு எடுத்துக்காட்டாகத்தான் இந்தப் போராட்டத்தை மட்டும் இங்கு சற்று விரிவாகச் சொல்ல நேர்ந்தது.

பிரச்சினைகளை இப்படித் தைரிய மாகவும், அஞ்சாமலும் மணி எதிர்கொள் வதற்கு இன்னொரு எடுத்துக்காட்டைப் பகிர்ந்து கொண்டார் குலாம் முஹம்மது. ஒரு குடும்பத்தில் ஒரு பெண் மட்டும் மனப்பூர்வ மாக இஸ்லாத்திற்கு மாறுகிறார். குடந்தைப் பகுதியில் உள்ள இந்துத்துவ சக்திகள் இதை எதிர்த்து குடந்தை 'நால் ரோட்டில்' சாலை மறியல் செய்தனர். குடந்தையில் உள்ள முஸ்லிம்களுக்கு மதக் கலவரம் ஏற்பட்டு விடுமோ என்கிற அச்சம் அந்தப் பெண்ணைத் திருப்பித்தான் அனுப்பி விடுங்களேன் என அவர்கள் கூறியுள்ளனர். ஆனால் அந்தப் பெண் போக மறுத்திருக்கிறார்.

இந்நிலையில் சாலை மறியலைத் தடுத்து போக்குவரத்தைச் சீர்செய்ய காவலர்கள் குவிக்கப்பட்டுள்ளனர். காவல்துறை உயர் அதிகாரி மறியல் செய்த இந்துத்துவ சக்தி களைக் கலைக்காமல் அந்தப் பெண்ணுக்கு ஆதரவாக இருந்தவர்களிடம் வந்து அந்தப் பெண்ணை அவள் வீட்டுக்கு அனுப்புமாறு மிரட்டியுள்ளனர். அந்தப் பெண் எந்தக் கட்டாயமும் இல்லாமல் விருப்பப்பூர்வமாக மதம் மாறியுள்ளாள். அதற்குரிய வயதும் அவளுக்கு உள்ளது. நாங்கள் அவளை அனுப்ப முடியாது. நீங்கள் மறியல் செய்யும் கூட்டத்தைக் கலைத்து போக்குவரத்தை ஒழுங்கு செய்யுங்கள். முடியாவிட்டால் சொல்லுங்கள் நாங்கள் கலைக்கிறோம் என மணி சொன்னதைக் கண்டு அந்த அதிகாரி ஒரு கணம் திகைத்துப் போனதையும், பின் லத்தி சார்ஜ் செய்து கூட்டத்தை கலைத்துப் போக்குவரத்திற்கிருந்த தடையை நீக்கியதை யும் உணர்ச்சி பொங்க குறிப்பிட்டார் குலாம் முஹம்மது.

## மூன்று

நீலப்புலிகள் இயக்கமாக இறுதி வடிவமெடுத்த தன் இயக்க வரலாற்றை ரத்தினச் சுருக்கமாக இப்படிச் சொல்வார் மணி.


"1960 வாக்கில் சிறுவர்களால் துவக்கப்பட்டு, 1962ல் அம்பேத்கர் கல்வி வளர்ச்சி மன்றம் ஆகி 1967ல் தந்தை பெரியாரின் அறிவுரைப்படி இயக்கத் தனித் தன்மையை இழக்காமல் காமராஜருக்கு ஆதரவு நிலை, 1974ல் காமராஜர் மறைவிற்குப் பிறகு விலகி நின்று கடும் போராட்டங்கள், நூற்றுக்கணக்கான தீண்டாமை வழக்குகள், சிறு பெரும் கலவரங்கள்"என அவரது இயக்கம் வளர்ந்தது (விடுதலை முழக்கம், அக். 1982 முதல் 1992 வரை இளைபெருமாளின் மனித உரிமைக் கட்சியின் கீழ் இயங்கிய போதும் மணி தனது தலித் தன்மையை இழந்துவிடவில்லை. 1990ல் தனது அம்பேத்கர் கல்வி வளர்ச்சி மன்றத்தை விரிவாக்கி அம்பேத்கர் மாணவர் இளைஞர் பேரவை என ஒரு இயக்கமாக்கினார். அதுவே 1996ல் நீலப் புலிகள் இயக்கம் ஆக வடிவெடுத்தது. எனினும் இளைஞர்களுக்கு விரிவாக சமூக அறிவு வேண்டும் என்பதால் 2010ல் கற்பிப் பாசறை என்றொரு படிப்பு வட்டத்தை தனது பொறுப்பில் உருவாக்கி நூற்றுக்கணக்கான மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்குக் கோட்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டதாகவும் புரட்சி மணி கூறுகிறார்.

திருப்பனந்தாள் பகுதியை ஒட்டிய பிரச்சினைகளில் தன் சக்தி முழுவதையும் செலுத்தி இயங்கிய போதும் மணியின் பார்வை எப்போதும் தலித் மக்களின் பொதுப் பிரச்சினைகள், அவர்களுக்கான இறுதி விடுதலை குறித்த சிந்தனைகள் ஆகியவற்றி லிருந்து அகலவில்லை. ஆறு மாத காலம் அவர் சிறையில் கழிக்க நேரிட்டபோது அப்போது சிறையில் இருந்த அன்றைய நக்சலைட் தோழர்களுடன் அவர் விரிவான விவாதங்களை மேற்கொள்கிறார். வெளியில் வந்த பின்னும் இப்பகுதியில் களப் பணி புரிந்து

தியாகிகளான தோழர்கள் சந்திரசேகர், சந்திரகுமார் ஆகியோருடன் கருத்துப் பரி மாற்றங்கள் புரிகிறார். அடிப்படை மார்க் சீயம், மாஓயிசம் ஆகியவற்றையும் பயில்கிறார். ஆதிக்க சாதியினராயினும் இப்பகுதியில் தலித் பெண்களை மணந்து கொண்டு களப் பணியாற்றிய தோழர்கள் குணாளன், ஞானப்பிரகாசம், தேவதாஸ் முதலானோரை மனமாரப் பாராட்டுகிறார். திருப்பனந்தாள் மடத்தை எதிர்த்த போராட்டங்களில் நக்சல் இயக்கத்தவரோடு பல்வேறு நிலைகளில் இணைந்து இயங்கியபோதும் எந்நாளும் அவர் இங்குள்ள இடதுசாரிக் கட்சிகளின் நிலைபாட்டை ஏற்கவில்லை என்பதை அவர் மகன் புரட்சிமணி வலியுறுத்துகிறார். இந்திய சமூகப் பிரச்சினைகளை வர்க்க வேறுபாடு என்கிற கருத்தாக்கத்தின் மூலம் புரிந்து கொள்ள இயலாது என்பதை மணி தன் எழுத்துக்களிலும் ஆங்காங்கு பதிகிறார்.

தமிழக அளவில் இவ்வாறு பல்வேறு நிலைகளில் பணி செய்து கொண்டு இருக்கும் தலித் இயக்கங்களை இணைப்பது அவசியம் என்கிற எண்ணம் இறுதிவரை அவரிடம் குடி கொண்டிருந்தது அதற்கான முயற்சிகளையும் அவர் இறுதி வரை கைவிடவில்லை.

1984 தேர்தலுக்குப் பின் ‘தமிழக அளவிலுள்ள தலித் தலைவர்கள் அத்தனை பேரையும் பறையர், பள்ளர், அருந்ததியர் என்கிற பாகுபாடு இல்லாமல் ஒன்று திரட்ட இளையபெருமாள் அவர்கள் மேற்கொண்ட முயற்சியில் அவருடன் இருந்து ஊக்கம் தந்தவர் மணி. இறுதியில் அம் முயற்சி ஷெட்யூல்டு இன விடுதலைக் கூட்டமைப்பு என்பதாக விடிந்தது. வை. பாலசுந்தரம் தலைவராகவும், டாக்டர் சேப்பன், பொருளாளராகவும், சக்திதாசன் பொதுச் செயலாளராகவும், பெரியவர் மு. சுந்தர்ராஜன் ஆலோசகராகவும் நியமிக்கப்பட்டனர். தஞ்சை, திருச்சி, தென்னாற்காடு, சென்னை முதலான மாவட்டங்களில் சிறு சிறு பொதுக் கூட்டங்களுக்குப் பின் ஜூன் 29, 1986ல் மணி அவர்கள் முன்னின்று நடத்திய பந்தநல்லூர் மாநாட்டை அவரது மிகப் பெரிய சாதனையாக இன்று நீலப்புலிகள் இயக்கத்தவர்கள் நினைவு கூறுகின்றனர்.




மணி அவர்களின் தலைமையில் நடைபெற்ற அம்மாநாட்டில் இளையபெரு மாள், வை. பாலசுந்தரம், டாக்டர் சேப்பர், சக்திதாசன், பெரியவர் சுந்தர்ராஜன், தலித் எழில்மலை உள்ளிட்ட பல தலைவர்கள் கலந்து கொண்டனர். நாங்கள் இனி இந்த ஒற்றுமைக்குத் துரோகம் இழைத்து விலகிப் போனால் முச்சந்தியில் நிறுத்திச் செருப்பால் அடியுங்கள் என மாநாட்டில் சூளுரைத்த தலைவர்களில் பலர் அடுத்து வந்த தேர்தல் சொந்த நலன்களை முன்னிறுத்திப் பிரிந்து சென்றது குறித்து மனம் நொந்து எழுதுகிறார் மணி. எஞ்சி நின்ற இளையபெருமாள், சக்திதாசன், சேப்பன், சுந்தர்ராஜன், கொடிகால் செல்லப்பா, வை. பழனி வேலு ஆகியோரை வைத்து ஷெட்யூல்டு இன விடுதலை இயக்கத்தை மணி உள்பட்ட ஏழு பேர் கொண்ட குழு பதிவு செய்தது. 1989

சட்டமன்றத் தேர்தலில் 18 இடங்களில் போட்டியிட்டதில் காட்டுமன்னார் கோவில் தொகுதியில் நிறுத்தப்பட்ட தங்கராசு மட்டும் வெற்றி பெற்றார். இந்தத் தேர்தலில் தலைவர்கள் நடந்து கொண்ட விதத்தை விரிவாக எழுதினால் அது தலித் மக்களுக்கு அவமானகரமாக இருக்கும் என்பார் மணி. (சாதி ஒழிந்தது பக். 68).

இதற்கிடையில் 1983 மீனாட்சிபுரம் மதமாற்றம் இந்திய அளவில் கவனம் பெற்றது. பணத்திற்காகவே தலித்கள் மதம் மாறினர் என இந்துத்துவ பிரச்சாரம் செய்தபோது ஷெட்யூல்டு இன இயக்கத்தின் சார்பாக இளையபெருமாள் அவர்கள் சமூகக் கொடுமைகளே இந்த மதமாற்றத்தின் பின்னணி என அறிக்கை அளித்ததை ஒரு முக்கிய நிகழ்வாக குறிப்பிடுவார் மணி.

தொண்ணூறுகளுக்குப் பின் தமிழக தலித் இயக்கப் போக்கில் ஒரு மிகப் பெரிய பண்பு மாற்றம் ஏற்பட்டது. உலக அளவில் ஏற்பட்ட ஊடகப் பெருக்கம், அடையாள அரசியலுக்குத் தத்துவார்த்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட பலம். இந்தியாவைப் பொருத்த மட்டில் அம்பேத்கர் நூற்றாண்டை ஒட்டி ஏற்பட்ட எழுச்சி முதலியன இதில் முக்கிய பங்கு வகித்தன.

தலித் அமைப்புகளைப் பொருத்த மட்டில் இது இங்கு இரண்டு விளைவுகளை ஏற்படுத்தின. திருப்பனந்தாள் மணி அல்லது பரமக்குடி சந்திரபோஸ் என்கிற பகுதி அளவில் தீவிரமாகச் செயல்பட்டு கொண்டிருந்த தலைவர்களைத் தாண்டி தொல் திருமாவளவன், டாக்டர் கிருஷ்ண சாமி, முதலான தமிழக அளவிலான தலைவர்கள் உருவாயினர். இவர்கள் சென்னையை மையமாக வைத்து இயங்கத் தொடங்கினர். ஊடக வெளிச்சம் இவர் களுக்குத் தாராளமாகக் கிட்டியது.

இதன் இன்னொரு விளைவு இந்தப் புதிய தலைவர்கள் தமிழக அளவில் செயல்பட நேர்ந்ததன் ஊடாக இவர்கள் தலித் பிரச்சினைகளைத் தாண்டி தமிழக அளவி லான பொதுவான தேசிய அடையாளங் களைச் சூடிக் கொள்ளத் தொடங்கினர். இவ்வாறு செல்வாக்குடன் உருவான தலைவர் திருமாவளவன். தமிழ்த் தேசியம், ஈழ ஆதரவு, அதிலும் குறிப்பாக விடுதலைப் புலிகள் ஆதரவு என்கிற நிலைப்பாட்டை எடுத்தார். தேர்தல் பங்கேற்பு மூலமான அரசியல் அதிகாரம் என்கிற நிலைபாட்டையும் இந்தப் புதிய தலைவர்கள் அழுத்தமாக முன் வைத்து அந்த்ச் திசையில் இயங்கவும் செய்தனர். ஆற்றல் மிகு பேச்சாளரான திருமாவளவனின் பின்னால் தமிழக அளவில் தலித் இளைஞர்கள் திரண்டனர். இதன் விளைவு பகுதி அளவில் செயல்பட்டுக் கொண்டிருந்த டி.எம். மணி அரங்க குணசேகரன் போன்றோர் பலவீனமாயினர்.

நீலப்புலிகள் இயக்கத்திலிருந்து இராஜாங்கம், விவேகாந்தன், இளங்கோவன், மணிசேகர், முதலானோர் விலகினர். விலகிய இளைஞர்களில் பலர் விடுதலைச் சிறுத்தைகள் முதலான பரந்த அளவிலான தலித் அரசியல் கட்சிகளில் இணைந்தனர். நீலப்புலிகள் இயக்கம் மணி அவர்களின் இறுதிப் பத்தாண்டுகளில் பலவீனமாகியது.

இது குறித்து நீலப்புலிகள் இயக்கத்தின் புதிய தலைவரும் மணி அவர்களின் மூத்த புதல்வருமான புரட்சி மணி இப்படிக் குறிப்பிட்டார்.

‘நீங்கள் சொல்வது சரிதான். ஆனால் நீங்கள் இன்னொன்றையும் கவனத்தில் கொள்ள வேண்டும் இயக்கத்திலிருந்து வெளியேறிவர்களுக்கு ஒரு புதிய அதிகாரம் மட்டுமல்ல புதிய அங்கீகாரமும் கிடைத்தது. நீலப்புலிகள் இயக்கத்தில் இருந்தவரை அவர்கள் சைக்கிளில்தான் சென்று இயக்கப் பணிகள் செய்து கொண்டிருந்தனர். அப்பாவும் சைக்கிளில்தான் போய்க் கொண்டிருந்தார். இப்போது அவர்கள் கார்களில் பயணம் செய்யும் வாய்ப்புப் பெற்றனர். மக்கள் மத்தியிலும் அதற்கு ஒரு ஈர்ப்பு இருந்தது.’ புரட்சிமணியின் சகோதரர்கள் சும்சுதீன், கவிமணி ஆகியோரும் இதை அங்கீகரித்தனர்.

தான் தலைவராக ஏற்றுப் பணி புரிந்த இளையபெருமாள் அவர்களையே விமர்சிக்கத் தயங்காத மணி, அவர்கள் யாருடைய செயல்பாடுகள் மீதும் தன் கருத்தை முன் வைப்பதற்குத் தயக்கம் காட்டியதில்லை. தொண்ணூறுகளுக்குப் பின் உருவான புதிய தலைவர்கள் குறித்து அவர் இப்படி மதிப்பிடுவார்.

தென் மாவட்டங்கள் கிருஷ்ணசாமி என்றும் வட மாவட்டங்கள் திருமாவளவன் என்றும் உருவாகியுள்ளது. சுமார் 15 ஆண்டுகளுக்கு முன் இவர்கள் தலித் அரசியலுக்கு வருவார்கள் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. வட மாவட்டங்களைப் பொறுத்த வரையில் தலித்களின் அனைத்துப் பிரச்சினைகளிலும் (நாங்கள்) ஈடுபாடு கொண்டவர்களாய் இருந்தோம். அன்று தலைவர் திருமாவளவனும் அவரைச் சேர்ந்த தலைவர்களும், தலித் அரசியலுக்கு அப்பாற் பட்டு நின்றார்கள். பொதுவுடைமைச் சீர்த்திருத்தவாதிகளும், தமிழ் தேசியவாதிகளும், நாம் முன் சொன்ன மீடியாக்களும் இவர்களை தலித் அரசியலுக்கு தலைமை ஏற்கச் செய்தார்கள். அவர்கள் எதன் பொருட்டு இவர்களை இறக்குமதி செய்தார்களோ, அந்த வேலையை ஆழமாகவும் சிரத்தையுடனும் செய்து கொண்டு இருக்கிறார்கள். தமிழ் தேசியமும், ஈழவிடுதலையுமே, கொள்கையாக கொண்டுள்ளார்கள். (தலித் விடுதலை முழக்கம் அக்.2009. பக்.6)

முத்தாய்ப்பாகப் புதிய சூழல் குறித்து மணி அவர்கள் தன் மதிப்பீட்டையும் கவலையையும் இப்படி முன் வைக்கிறார்.

தற்போது அரசியல் அதிகாரம் என்ற பெயராலும் தமழ்த் தேசியம் என்ற பெயராலும் தலித்துக்கள் போராட்ட குணமிழந்து இந்துக்களிடம் அடிமைப்படும் நிலை உருவாகியுள்ளது. (தலித் விடுதலை முழக்கம். அக்.2009, பக். 32)

இங்கொன்றைச் சொல்ல வேண்டும். ஈழத்தில் தலித்கள் மீதான வன்கொடுமை தமிழகத்தைக் காட்டிலும் அதிகம். இதைத் தன் எழுத்துக்கள் மூலம் மிக அற்புதமாக ஆவணப்படுத்தியவர் எழுத்தாளர் டானியல். ஆனால் தமிழகத்தில் யாரும் அது குறித்து பேசியதில்லை. மற்றவர்கள் பேசாதது இருக்கட்டும். இங்குள்ள தலித் இயக்கங்களும் பேசியதில்லை என்பதுதான் வேதனை. அப்படிப் பேசுவது ஏதோ ஈழப் போராட்டத்திற்கே துரோகம் இழைப்பது என்பது போன்ற நிலை. இங்கு உருவாக்கப்பட்டது. இந் நிலையில் இது குறித்து விரிவாக தலித் இயக்கங்கள் மத்தியில் பேசியவராக நாம் மணி அவர்களைத்தான் காண முடிகிறது. மணி அவர்கள் உமர் ஃபாரூக்காகப் பிறப்பெடுத்த பின் எழுதிய 'தமிழ் ஈழத்தில் தலித்கள்' (தலித் விடுதலை முழக்கம், அக். 2009) என்னும் கட்டுரை இந்த வகையில் மிகமிக முக்கியமானது. இக்கட்டுரை தனி வெளியீடாக வெளியிடப்பட வேண்டிய ஒன்று.

ஈழத்தில் எந்தெந்த வகைகளில் எல்லாம் தீண்டாமை கடைபிடிக்கப்படுகிறது. அதன் வரலாறு, அவர்களின் உரிமைப் போராட்டங்கள் எப்படி உயிர்ப்பலிகளில் முடிந்தன. தலித் கல்லூரி முதல்வர், யாழ் நகரசபைத் தலைவர் இவர்களெல்லாம் எப்படி விடுதலைப்புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். தலித்களுக்காக வழக்காட எப்படி டானியல் போன்ற தலித் தலைவர்கள் சிங்கள வழக்குரைஞர்களை இறக்குமதி செய்ய வேண்டி இருந்தது என்றெல்லாம் அவர் மிக விரிவாக அக்கட்டுரையில் பதிவு செய்கிறார்.

மணி அவர்களின் விமர்சனங்கள் கூர்மையாக இருந்தபோதிலும் அது மிகவும் கண்ணியமாக இருக்கும். தான் விமர்சிப்பவர்களையும் அவர் தலைவர் என்றே குறிப்பிடுவது வழக்கம்.

தான் செயல்பட்ட பகுதிகளில் அம்பேத்கரின் புகழைப் பரப்பியதிலும் மணி அவர்களுக்கு முக்கிய பங்கு உண்டு. அம்பேத்கரின் சாதி ஒழிப்புக் கருத்துக்களை மணியின் எழுத்துக்கள் எல்லாவற்றிலும் காணலாம். சாதி ஒழிப்பிற்காக அம்பேத்கர் பரிந்துரைத்த மதமாற்றம் மற்றும் தனிக் குடியிருப்புகள் எனும் இரு வழிமுறைகளை அவரளவிற்குத் தமிழகத்தில் வலியுறுத்தியவர்கள் யாருமில்லை.

1992ல் திருவாய்ப்பாடியில் அம்பேத்கர் சிலையை நிறுவி அம்பேத்கரின் பேத்தி ரமா ஆனந்த் அவர்களின் கையால் அதைத் திறந்து வைத்தார். ஜான் பாண்டியன், திருமாவளவன் உட்பட பல தலைவர்கள் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். 1996ல் சோழாபுரத்தில் நிறுவிய அம்பேத்கர் சிலை பிரகாஷ் அம்பேத்கரால் திறந்து வைக்கப்பட்டது. 1996ல் திருத்துறைப் பூண்டியில் இம்மானு வேல் சேகரனின் சிலையை நிறுவியதன் மூலம் நீலப்புலிகள் இயக்கம் தலித் மக்களில் எந்த ஒரு குறிப்பிட்ட பிரிவை மட்டும் சார்ந்தது இல்லை என்பதைக் காட்டினார்.

2014ல் மணி அவர்களின் முன் முயற்சியால் நடத்தப்பட்ட கும்பகோணம் மாநாடு தமிழக அளவில் செயல்படும் தலித் தலைவர்களை ஒன்றுபடுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டது. தமிழ்த் தேசியம் பேசாத, அரசியல் அதிகாரம் என்கிற பெயரில் தேர்தல் அரசியலுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்காத தலைவர் மட்டும் அதற்கு அழைக்கப்பட்டனர். சிவகாமி ஐ.ஏ.எஸ்., திருவள்ளுவன், அரங்க செல்லதுரை, துரைராஜ் முதலானோர் இதில் கலந்து கொண்டனர்.

தேர்தல் அரசியலை மையமாக வைத்து மக்கள் திரட்டப்படுவதைக் கண்டித்த மணி மக்கள் தேர்தலுக்காக அல்ல, போராட்டங் களுக்காகத் திரட்டப்பட வேண்டியவர்கள் என்றார்.

தொண்ணூறுகளுக்குப் பின் மேலெழுந்த தலித் அரசியல், தலித் பண்பாடு, தலித் இலக்கியம் ஆகியவற்றின் மீது மணி அவர்கள் பல கூரிய அவதானங்களைச் செய்துள்ளார். பாமாவின் 'கருக்கு' நாவல் வெளிவந்து தமிழ் இலக்கியச் சூழலில் அதிர்வுகளை ஏற்படுத்தியிருந்த தருணத்தில் அந்த நூலுக்கான விமர்சனக் கூட்டம் ஒன்றைக் குடந்தையில் நானும் மறைந்த தோழர் கணேசமூர்த்தியும் ஏற்பாடு செய்தோம். கணேசமூர்த்தி வன்னியர் சமூகத்தைச் சேர்ந்தவர். எனினும் மணி அவர்கள் மீது மிக்க மரியாதை உடையவர். மணியும் அவரிடம் மிக்க அன்பாக இருப்பார். கூட்டத்தை ஒரு தலித் குடியிருப்பில் நடத்துவது என முடிவு செய்து குடந்தை அரசு கல்லூரியிலிருநது சுமார் 2 கி.மீ. தொலைவில் காவிரிக் கரையை ஒட்டி அமைந்திருக்கும் சந்தனாள் புரத்தில் அதை நடத்தினோம். முன்னதாக கருக்கு நாவல் பிரதிகள் பத்து அம்மக்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டன. கூட்டத்தில் பாமா, அருட்தந்தை மாற்கு ஆகியோரும் வந்திருந்தனர். உள்ளூர் இலக்கிய நண்பர்களோடு டி.எம். மணி அவர்களையும் அழைத்திருந்தோம். ஒரு அரசியல் போராளி யாக மட்டுமே அறியப்பட்டிருந்த மணி அவர்களின் அன்றைய பேச்சு அனைவரையும் அசர வைத்து மிக அழகான இலக்கிய மதிப்பீட்டாக மட்டுமின்றி சில கூரிய விமர்சனங்களையும் அவருடைய கோணத்தி லிருந்து அவர் முன்வைத்தார்.

தலித் கலை என்கிற பெயரில் தப்படித்தல், தலித் மொழி என்கிற பெயரில் தலித்களின் பேச்சு மொழியில் எழுதுதல் ஆகியவற்றில் தனக்கு உடன்பாடில்லை என்பதை அன்று அங்கு ஆணித்தரமாக அவர் முன்வைத்ததோடு பின்னாளில் அவர் அதைக் கீழ் கண்டவாறு பதியவும் செய்தார்.

கல்வி மறுக்கப்பட்டதால் தலித்து களிடம் உருவான ஊனத் தமிழ் வார்த்தை களை நன்றாக தலித்களிடம் புரிந்து கொண்ட பாமா போன்ற எழுத்தாளர்கள் இந்த ஊனத் தமிழுக்கு வடிவம் கொடுத்து தலித் இலக்கியம் என்று அதை எங்கள் தலையில் கட்டு கிறார்கள். தப்பு தான் தலித் கலை என்றால் குழல், யாழ் போன்ற ஏனைய இசைகள் எமக்கு உரிமை இல்லையா? பாமா சொல்வதுதான் தலித் இலக்கியம் என்றால் என் இனிய தமிழ் இலக்கியங்கள் எங்களுக்கு உரிமை இல்லையா? அகராதிகளில் அழிக்கப்பட்ட தமிழ்ச் சொற்களைக் கூட இன்னும் எங்கள் தாய் வழிச் சொந்தமாகக் காத்து வரும் ஒரு கூட்டத்திற்கு ஊனத் தமிழ்தான் உரிமையா? தலித் இலக்கியம், தலித் கலை, தலித் பண்பாடு என்பதெல்லாம் ஒதுங்குதல், ஒதுக்குதல், அடிப்படையிலான வருண தருமக் கோட்

பாடே. அண்ணல் அம்பேத்கர் சொன்ன சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவத்திற்கு இங்கு வேலையே இல்லை. எனவே தப்பு அடிக்க மறுப்பதென்பதே சமத்துவத்திற்கான போராட்ட அடித்தளமாகவே பார்த்தோம். தப்புகளைச் செய்ய செத்த மாடு எங்களுக்குத் தேவையில்லை எனக் கோஷமிட்டோம். (சாதி ஒழிந்தது பக்.11)

மாட்டுத் தோல், மாடு உரித்தல், மாட்டிறைச்சி உண்ணுதல், மாட்டுத் தோலால் கயிறு பின்னுதல் போன்ற அறுவெறுப்பான வேலைகளில் தொடர்பு ஏற்படுத்துவதுதான் இந்தத் தப்பு. பார்ப்பனர்களுக்கு எப்படி தர்ப்பையும், நாணலும் உயர்வுக்கு அடையாள மாகக் கருதப்படுகிறதோ, அதைப் போலவே தலித்துகளுக்கு தப்பு தாழ்வுக்கான ஓர் அடையாளம். (சாதி ஒழிந்தது பக்.10)

சேரிகளை மட்டுமல்ல அதைவிட முக்கியமாக இந்து மதத்தை விட்டு வெளி யேறுவதை அவர் வற்புறுத்தினார்.

## நான்கு

சாதி மற்றும் தீண்டாமை ஒழிப்புக் கென்று இதுகாறும் முன்வைக்கப் பட்ட வழிமுறைகள் பலவும் எவ்வாறு பொய்யாய்ப் போயின என்பதையும், எங்கே அவை தவறு செய்கின்றன என்பதையும் டி.எம். மணி அவர்கள் தனது எழுத்துகளில் பொருத்தமான இடங்களில் நச்சென்று சொல்லி வைக்கத் தவறுவதில்லை. சாதி ஒழிப்பிற்கான ஒரே தீர்வாக மதமாற்றத்தை அடையாளம் கண்டவராக அம்பேத்கர் அவர்களைப் போற்றும் மணி. ஆனால் அதுவும் கூட பவுத்த மதமாற்றம் என்கிற அளவில் சுருங்கியபோது இங்குப் பயனற்றுப் போனதை சுட்டிக்காட்ட தயங்குவதில்லை.

மதம் மாறுவதென்றால் இஸ்லாமால் தான் தீர்வு கிடைக்கும் என அம்பேத்கர் நம்பினாலும் என்ன பின்னணியில் அவர் பவுத்தத்தை நோக்கித் தள்ளப்பட்டார் என்பதை 'அண்ணல் அம்பேத்கரின் மத மாற்றம் பின்னணி என்ன?' எனும் குறு வெளியீட்டில் மணி விளக்குகிறார். இது குறித்து அவர் சொல்வதை இப்படிச் சுருக்கலாம்.

தற்போதைய மதத்தை விட்டு வேறொரு மதத்தினரோடு ஒன்றாய்க் கலந்திடாமல் வேறு எவ்வழியிலும் தாழ்த்தப்பட்டவர்கள் பல முடையவர்களாக முடியாது என்று கூறிய அம்பேத்கர். 'நீங்கள் இப்படி பலமுடையவர் களாக ஆகாவிட்டால் உங்கள் எதிர்கால சந்ததியினரும் உங்களைப் போலவே பரிதாபமான வாழ்வைத்தான் வாழ முடியும்' என 1936 மே 31 அன்று சக தாழ்த்தப்பட்டவர் களை எச்சரித்தார். அப்படி எச்சரித்ததோடு நிற்காமல் 'நான் இந்துவாகப் பிறந்து விட்டேன். அது என் குற்றமல்ல. நான் சாகும் போது இந்துவாக சாக மாட்டேன்' என்ற உறுதியையும் வெளியிட்டார். மதம் மாறத் தயார் எனச் சொன்ன தன் சீடர்களிடம் அவர், 'நீங்கள் மாறுவதாக இருந்தால் இஸ்லாம் மதத்திற்கு மாறிவிடுங்கள்' என்று அறிவுரை கூறினார். அவர் நடத்தி வந்த பகிஷ்கரித் பாரத் எனும் பத்திரிகை வழியாகவும் இந்தப் பிரச்சாரத்தைச் செய்தார்.

மதமாற்றம் என அம்பேத்கர் சொன்ன வுடன் இந்துக்கள் பதறிப்போனார்கள். மக்கள் தொகையில் நான்கில் ஒரு பங்கு உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் மதம் மாறினால் தாங்கள் (ஒன்றாக இருந்த இந்தியாவில்) சிறுபான்மை ஆகிப் போவோம் என்கிற அச்சம் அவர்களை ஆட்டுவித்தது. உடனே காரியத்தில் இறங்கினார்கள்.

இந்துக்களை எச்சரித்தார்கள். அம்பேத்கர் மனத்தை மாற்றுவது என ஒரு பக்கம் இந்துமகாசபை முதலான இந்துத்துவ சக்திகளும், இன்னொரு பக்கம் காங்கிரஸ் கட்சியும் களத்தில் இறங்கின.

இந்துத்துவ சக்திகள் ஆர்.எஸ்.எஸ். நிறுவனர் டாக்டர் மூஞ்சே, ஜுகல் கிஷோர் பிர்லா, சங்கராச்சாரி கொண்ட மூவர் குழு ஒன்றின் மூலம் அம்பேத்கரிடம் பேச முடிவெடுத்தது. காங்கிரஸ் கட்சி காந்தியின் தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. 1930களில் அம்பேத்கர் இவ்வாறு முடிவெடுத்த போது அவர் முன் பவுத்தம் ஒரு தீர்வாக

இல்லை. இஸ்லாம், கிறிஸ்தவம், சீக்கியம், ஆகிய மதங்களில் ஏதேனும் ஒன்று என்பதுதான் அன்று அவர் முடிவாக இருந்தது.

இந்நிலையில் டாக்டர் மூஞ்சே பம்பாய் சென்று மூன்று நாட்கள் பேச்சு வார்த்தை நடத்தி அம்பேத்கரும் அவரைப் பின்பற்று பவர்களும் இஸ்லாத்திற்கோ, கிறிஸ்தவத் திற்கோ போகாமல் சீக்கியத்திற்குப் போகு மாறு வற்புறுத்தினர். அம்பேத்கர் அதை ஏற்க வேண்டியதாயிற்று. பின்னர் தர்மானந்த கோசாம்பி முதலானவர்கள் அம்பேத்கரை சந்தித்து பவுத்தத்தைப் பரிந்துரைத்தனர்.

இது அம்பேத்கரின் மதமாற்றம் எனும் குறு வெளியீட்டில் மணி அவர்கள் சொல்லி யுள்ளதின் சுருக்கம். இவை 1930களில் நடை பெற்ற நிகழ்வுகள். தன் வாழ்வின் இறுதியில் அம்பேத்கர் தன் ஆதரவாளர்களோடு மதம் மாறிய போது அவரது தேர்வு பவுத்தமாகவே இருந்தது என்பதை நாம் அறிவோம்.

இப்படி பவுத்தத்திற்கு மாறியது குறித்து சாதி ஒழிந்தது எனும் நூலில் மணி கூறுவது,

அம்பேத்கரின் அறிவுரையைக் கேட்டு மதம் மாறியவர்கள் மிகவும் சிறுபான்மை ஆனார்கள். மதமாற்றத்தின் மூலம் கூடுதல் பலம் பெற முடியும் என்கிற அம்பேத்கரின் கொள்கைக்கு மாறாக (உண்மையில் நடந்து என்னவெனில் அம்பேத்கரின் அறிவுரையை ஏற்று) மதம் மாறிய பௌத்தர்கள் செயலற்றுப் போனார்கள். உதாரணமாக பெரியவர் சுந்தர்ராஜன், டாக்டர் சேப்பன், சக்திதாசன், போன்றவர்களை எடுத்துக் கொள்ளலாம். தற்பொழுது வி.டி. ராஜசேகர், பெரியார்தாசன் போன்றவர்கள் தன்னை பவுத்தர்கள் என்று சொல்லிக் கொள்கிறார்கள்.

தனி மனிதனாக இவர்கள் தன்னை இந்து அல்ல என சொல்லிக் கொள்ள முடியும். (ஆனால்) இவர்களை ஆதரிக்க அரவணைக்க, ஒன்றிணைந்து குரல் கொடுக்க, போராட, பெண் கொடுக்க, பெண் எடுக்க, ஒன்றிணைந்த கூட்டு வாழ்க்கைக்கு யாரோடு சேர்த்து நிற்பார்கள்? தன்னை இந்து இல்லை என்று சொல்லிக் கொண்டால் போதுமா? மானுடத் தில் இணைந்திட வேண்டாமா? மதமாற்றம் என்பது பெயரை மாற்றிக் கொள்கிற விஷயமல்ல. மதமாற்றம் என்பது சமுதாயத் தில் கூட்டு வாழ்க்கைக்கு உதவுவதாக இருக்க வேண்டும். அதை விட்டு மேலும் மேலும் தன்னைத் தனிமைப் படுத்துவதாக இருக்கக் கூடாது (பக். 74)

கடவுளை மாற்றுவோம் எனும் குறுந் வெளியீட்டில் இதை இன்னும் வெளிப் படையாக சொல்லி விடுகிறார். 'நான் பவுத் தன் என்று பெயரளவில் சொல்லிவிட்டு, இந்துக் கோயில்களை வணங்கிக் கொண்டு, இந்துப் பண்டிகைகளைக் கொண்டாடிக் கொண்டு, இந்து சாஸ்திர சம்பிரதாயங்களைப் பின்பற்றிக் கொண்டு' இருக்கும் நிலைக்குத் தான் இங்கு பவுத்த மாற்றம் கொண்டு விடும்.

அப்படித்தான் நடந்தது. முதல் தலைமுறையில் பவுத்தத்திற்கு மாறிய பலரது அடுத்த தலைமுறைகள் மீண்டும் இந்து மதத்திற்குத் திரும்பியுள்ளதுதான் எதார்த்தம். நிறைய பவுத்த மதமாற்றங்களைச் செய்த பெரியவர் ஒருவரை ஒரு முறை நண்பர் அயன்புரம் ராஜேந்திரன் அறிமுகம் செய்து வைத்தார். 'உங்களால் பவுத்தம் வந்தடைந்த வர்கள் தங்களின் மதக் கடமைகளைச் செய்ய, கடவுளை வணங்க எங்கு போகிறார்கள்?' என கேட்ட போது அவர் சோர்ந்து போனார். அதுதான் சார் எங்களுக்குப் பிரச்சினை. இங்கே புத்த கோவிலே கிடையாது. எல்லாத்துக்கும் சென்னை வந்து கென்னத் லேனுக்குத்தான் போகணும். இது ஒரு முக்கியமான நடைமுறைப் பிரச்சினை. பவுத்தத்தில் கடவுள் என்கிற கருத்தாக்கமே இல்லை என்றெல்லாம் தத்துவம் பேசிக் கொண்டிருக்க முடியாது. மனிதர்கள் சமூகப் பிராணிகள். குழந்தை பிறந்தால் அல்லது ஒருவர் இறந்தால், ஒரு திருமணம் நடந்தால் அவற்றை ஏதோ ஒரு வகையில் புனிதப் படுத்துதல் (Soleminize) சமூக வாழ்வில் அவசியமாகிறது. சமூகம் முழுமைக்கும் அரசியல் தெளிவு ஏற்படாத வரைக்கம் இது ஒரு பிரச்சினைதான்.

ஆக இந்துமதத்தை விட்டுப் போவது என்பதுதான் தலித்களுக்குள்ள ஒரே வழி. ஆனால் அப்படிப் போகும் இடம் ஒருவரை மேலும் தனிமை ஆக்கிவிடக் கூடாது. முழுமையான சமூக வாழ்க்கைக்கு அது இடமளிக்க வேண்டும். பவுத்தம் அதைச் சாதிக்காது என்பதுதான் முடிவாக மணி சொல்லும் சேதி.

சரி அப்படியானால் இரட்டை வாக்குரிமை மூலம் தலித்களுக்கு விடிவு கிடைத்து விடுமா? இந்தக் கேள்விக்கு 'கிடைத்துவிடும்', அல்லது கிடைத்துவிடாது என பதில் சொல்ல முயற்சிக்காமல் மணி நம் கவனத்தை வேறு திசைப் பக்கம் திருப்புகிறார். இன்றுள்ள தேர்தல் முறையில் தலித்கள் யாரையாவது அண்டிப் பிழைக்க வேண்டியுள்ளது என்பதெல்லாம் உண்மைதான். ஆனால் இன்றைய அமைப்பில் இரட்டை வாக்குரிமை என்பது சாத்தியமே இல்லை என்பதுதான் மணி இது குறித்து சொல்வது.

தனித் தொகுதி குறித்துத் தலைவர் கன்சிராம் கூறுகிறார். இந்தத் தனி தொகுதிப் பிரதிநிதித்துவம் குறித்துப் போராடுவதில் நான் ஒரு நிமிடம் கூட வீணாக்க விரும்பவில்லை. ஏனென்றால் ஆங்கிலேயர் ஆட்சியில் பாபா சாகிப் அம்பேத்கருக்குச் சாத்தியமாகாத போது, சாதியவாதிகள் ஆளும் காலத்தில் என்னால் எப்படி சாதிக்க முடியும்? என்கிறார். தலைவர் கன்சிராமின் இரத்தினச் சுருக்கமான இந்த கருத்து நிறைய பொருள் அடங்கியது. இந்திய அரசியல் சட்டத்திற்கு அப்பாற்பட்ட ஒரு முடிவை எடுக்கின்ற அளவிற்கு தகுதியோ, திறமையோ, அதிகாரமோ இவர்களுக்கு (இன்றைய ஆட்சியாளர்களுக்கு) கிடையாது. மேலும் இவர்கள்தான் தம் உயிரைப் பணயம் வைத்து இரட்டை வாக்குமுறையை எதிர்த்தவர்கள். அவர்களிடமே போய் கையேந்தி நிற்பது சிறுபிள்ளைத்தனமானது (சாதி ஒழிந்தது பக்.77,78)

தமிழ்த் தேசியம்தான் சாதி ஒழிப்பதற்கான தீர்வு என்பவர்களைப் பார்த்து எள்ளி நகையாடுகிறார் மணி. தமிழ் மேன்மை பேசிய மறைமலை அடிகளார் போன்றோர் எப்படி இன்னொரு பக்கம் வேளாள மேன்மை பேசியவர்களாகவும், சாதி மற்றும் தீண்டாமையை ஏற்றுக் கொண்டவர்களாகவும் உள்ளனர் என்பதை விரிவான ஆதாரங்களுடன் அவர் நிறுவுவதை (சாதி ஒழிந்தது பக். 80-87) சுருக்கம் கருதி இங்கு தவிர்க்கிறேன்.

தமிழ் தேசியத்தின் மூலம் அகமண முறையை ஒழித்து பின் சாதியத்தை ஒழித்து என்றெல்லாம் வாயாடுபவர்களிடம் சாதி உள்ளவரை அகமண முறை இருக்கும். பொது மணம் சாத்தியமில்லை எனக் கண்டிக்கிறார். கலப்புத் திருமணம் என்பதும் சாதியை ஒழித்துவிடவில்லை. அது ஏதேனும் ஒரு சாதிக்குள் முடங்குவதற்கே இட்டுச் செல்கிறது என்கிறார் (அம்பேத்கரின் மதமாற்றம் பக்.3)

பொதுவுடமைக் கொள்கை தலித்களுக்கு எதிரானதல்ல எனக் கூறும் மணி, ஆனால் வர்க்க ரீதியாக இங்கு மக்களைப் பிரிக்க முடியாத நிலை இங்கிருப்பதையும் ஏழைப் பிற்படுத்தப்பட்ட சாதிகளே தலித்களுக்கு எதிராகக் களத்தில் இருப்பதையும், அவர்கள் உணர்வதில்லை என்கிறார். (சாதி ஒழிந்தது பக்.16)

அப்படியான சாதியையும், சாதியால் இங்கு ஒட்டிக் கொண்ட இழிவையும் ஒழிக்க என்னதான் வழி?

அந்த வழியை அவர் சொன்னதோடும் எழுதியதோடும் நிற்கவில்லை வாழ்ந்து காட்டினார்.

## ஐந்து

2007 மே 7 அன்றுதான் டி.எம். மணி அவர்கள் கலிமா ஓதி டி.எம். உமர் ஃபாரூக் ஆனார். அவரோடு அன்றே அவரது மனைவி அகிலம்மை அவர்களும் ஆயிஷா பேகம் ஆனார்கள்.

உமர் ஃபாரூக் தம்பதியருக்கு ஏழு பிள்ளைகள். நான்கு பெண்கள் மூன்று ஆடவர்கள். பெண்களில் ஒருவர் வழக்குரைஞர். மற்றவர் அரசு ஊழியர்கள். மூன்றாவது மகன் கவிமணி ஒரு பொறியாளர்.

இரண்டாவது மகன் வெற்றிமணி 1992ம் ஆண்டே இஸ்லாம் ஆனார். இப்போது அவர்

சம்சுதீன். சுனாமியால் (2004) பாதிக்கப்பட்ட மக்களை நாங்கள் சந்தித்து கொண்டு வரும் போது பட்டினப்பாக்கம் பள்ளிவாசல் ஒன்றில் அடைக்கலம் புகுந்திருந்த மீனவர்கள் மத்தியில் சேவை புரிந்து கொண்டிருந்த சம்சுதீன் எனக்கு சலாம் சொல்லி, சார் நான் திருப்பனந்தாள் டி.எம். மணியின் மகன் என அறிமுகப்படுத்திக் கொண்டபோது மகிழ்ந்து போனேன். மனம் நிறைய வாழ்த்தி விடை பெற்றேன். த.மு.மு.க. அமைப்புடன் அவர் தொடர்பில் உள்ளார்.

மதம் மாறியபின் உமர் ஃபாரூக்கின் பெயர் மட்டும் மாறவில்லை. தொப்பி, தாடி, மூட்டிய வெள்ளை வேட்டி சகிதம் முழுமை யான ஓர் இஸ்லாமியத் தோற்றம் கொண்டார். வெறும் வெளித் தோற்றம் மட்டுமல்ல. ஐந்து வேளை தொழுகை, ரம்சான் மாதத்தில் நோன்பு என அவர் ஒரு நல்ல முஸ்லிமாக வாழ்ந்தார். திருப்பனந்தாளில் இப்போது அவர் இல்லம் ‘பாய் வீடு’ என அடையாளப் படுத்தப்படுகிறது. எனினும் அவர் மதமாற்றம் எந்த ஆர்பாட்டங்களுடனும் நடக்கவில்லை. மிக அமைதியாக அது நிகழ்ந்தது.

அவர் இறந்த அன்று என்னால் இறுதி அஞ்சலி செலுத்த இயலவில்லை. ஒரு வாரத்திற்குப் பின் நான் அங்கு சென்ற போது இறுதி நிகழ்ச்சி எப்படி நடைபெற்றது எனக் கேட்டேன். முழுமையான இஸ்லாமிய நெறி முறைகளின்படி நடந்தது எனவும், இஸ்லாமிய பெரியவர்கள் முழுப் பொறுப்பையும் எடுத்துக் கொண்டனர் எனவும் பள்ளிவாசலை ஒட்டிய கல்லறைத் தோட்டத்தில் அவர் அடக்கப்பட்டிருக்கிறார் என்றும் அவரது பிள்ளைகள் கூறினர். அவரது அடக்கத் தலத்தில் சில மலர்களைத் தூவி அஞ்சலி செலுத்த எனக்கு விருப்பந்தான். ஆனால் இஸ்லாமிய மரபில் அதற்கு இடமில்லை என்பதை அறிவேன்.

எங்க அப்பாவைத் தொட்டு தேய்த்துக் குளிப்பாட்டி உடை உடுத்தி அவர்களே (அதாவது அவ்வூர் இஸ்லாமிய மக்களே) எல்லாம் செய்தார்கள் சார். எங்களுக்கு முழு திருப்தி சார். இப்படி குறைந்த பட்சம் இரு முறையேனும் நான் உமர் ஃபாரூக் அவர்களின் இல்லத்தில் இருந்து அந்த இரண்டு மணி நேரத்தில் அவரது பிள்ளைகள் சொல்லியிருப்பார்கள்.

எங்களுக்கு முழு திருப்தி சார் எனும் சொற்கள் அடுத்த சில நாட்கள் என் மனதில் ஓடிக் கொண்டே இருந்தது. மரணம் என்பதைத் துக்கம் என அழைப்பது தமிழ் மரபு. பௌத்தத்தில் துக்க என்றால் முழுமை யற்றிருப்பது ஏதோ ஒன்றோ சிலவோ குறைவது.

திருப்தி என்பது எல்லாம் நிறைந்ததால் ஏற்படும் உணர்வு. இங்கே மரணம் எப்படி திருப்தி ஆகிறது?

உமர் பாரூக் அவர்களின் சாதி ஒழிந்ததைக் கண்ணால் கண்டபோது அவரது பிள்ளைகள் அடைந்த திருப்தி, அவரது மறைவால் ஏற்பட்ட துக்கத்தை விஞ்சியது என்பதாகத்தான் அதை நான் விளங்கிக் கொண்டேன்.

அப்பாவை எல்லாவற்றிலும் பின் பற்றுகிற நீங்கள் ஏன் அவரோடு மதம் மாறவில்லை? என புரட்சி மணியிடம் கேட்டேன்.

அப்பா யாரையும் கட்டாயப்படுத்த வில்லை. சென்ற ஆண்டில் திருப்பனந்தாள் பகுதியில் அப்பா பெரிய அளவில் மதமாற்றம் செய்கிறார் என ஆர்.எஸ்.எஸ். பிரச்சினை செய்தது. நக்கீரன் இதழும் பெரிதாக கட்டுரை எழுதியது. அப்ப நக்கீரன் செய்தியாளர் அப்பாவை போனில் தொடர்பு கொண்டு இது பற்றிக் கேட்டார். மதம் மாறுவது பற்றி பேச எனக்கு உரிமை உண்டு. ஆனால் நான் என் பிள்ளைகள் உட்பட யாரையும் கட்டாயமாக மதம் மாற்றியதில்லை என்றார். அப்பா மதம் மாறியதில் எங்களுக்கெல்லாம் எந்த கருத்துமாறுபாடும் இல்லை. நாங்கள் அதை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டோம் என்றார் அவர்.

அப்பாவின் மூலம் அப்படி எவ்வளவு பேர் மதம் மாறியிருப்பார்கள்?

ஆயிரம் பேருக்கு மேல் இருக்கும்.

இது எனக்குப் பெரு வியப்பு. உமர் ஃபாரூக் அவர்கள் குலாம் முகம்மது அவர்களின் ‘அறிவகம்’ அமைப்புடன் இணைந்து பல ஆண்டுகளாகத் தாவா பணிகள் செய்து கொண்டிருப்பதாக அறிவேன். ஆனால் இவ்வளவு பேர்கள் அவர் மூலம் இஸ்லாமாயினர் என்பது எனக்கு வியப்புதான். உடன் குலாம் முகம்மது அவர்களைத் தொடர்பு கொண்டு இது குறித்து கேட்டேன. அவர் சொன்னது என் வியப்பைக் கூட்டியது.

அதை விட அதிகமா இருக்கும் சார். அவரது பிள்ளைகள் சொன்னது கும்ப கோணம், தஞ்சை, திருவாரூர், முதலிய பகுதிகளில் நடந்த மதமாற்றங்களின் அடிப்படையில்தான். அறிவகம் அமைப்பே திருப்பனந்தாளில் அவரது அலுவலகத்தில் தான் தொடங்கியது. பின்னாடி அது தேனி, மாவட்டம் முத்துத்தேவன்பட்டிக்கு மாறிய அப்புறமும் அந்தப் பகுதியில் நடந்த மதமாற்றங்களிலும் அவருக்குப் பங்கிருந்தது. ஒரு தடவை சாதி ஒழிந்தது ஆங்கில மொழிபெயர்ப்பு வெளியீட்டிற்காக டெல்லி போயிருந்தோம். காலையில் அவர் வாக்கிங் போவார். “மொழி தெரியாத இடத்தில் தனியாப் போகாதீங்கன்னு நான் சொன்ன போது சிரித்த அவர், இரண்டு நாளும் நான் வாக்கிங் போற போது அங்கே தங்கியிருந்த இரண்டு தமிழ் பேசுகிறவர்களிடம் இஸ்லாம் ஆகிறதைப் பற்றிப் பேசி இருக்கிறேன் என்றார். ரொம்ப ஈடுபாட்டுடன் அதைச் செஞ்சார்” என்றார் குலாம் முகம்மது.

நீ இஸ்லாத்திற்கு மாறினால் உன் மீது படிந்திருந்த தீண்டாமை ஒழியும் எனச் சொன்ன அவர் இதை அதற்கான ஒரு வழி முறையாக மட்டுமே மேற்கொள்ளவில்லை. அவர் இஸ்லாத்தின் ஏக இறைத் தத்துவத்தை மனதார ஏற்றுக் கொண்டார்.

இஸ்லாமியர் என்கிற அடையாளமான தாடியை தொப்பியை எவ்வித தயக்கமும் இன்றி ஏற்றுக் கொள்ளுங்கள். அல்லாஹ் அக்பர்! அல்லாஹ் அக்பர்! என உரக்கக் கூவுங்கள். அந்த அற்புத ஒலி ஏக இறைவனின் காதுகளில் உரக்க ஒலிக்கட்டும். உங்களை இரண்டாயிரம் ஆண்டு அடிமைப்படுத்தி வைத்திருந்த உங்கள் எதிரிகள் காதில் அழைப்பொலியாக இருக்கட்டும். அல்லாஹ் அக்பர்! அல்லாஹ் அக்பர்! அஸ்ஸலாமு அலைக்கும் என முடிகிறது அவரது செந் தமிழ்நாட்டுச் சேரிகள் எனும் நூல்.

இறைவனின் இந்த இஸ்லாமியத் தத்துவங்கள் உலகெல்லாம் எந்த இடத்திலும் எந்த நேரத்திலும், எந்த சூழலிலும் எடுத்துச் செல்ல வேண்டிய மாபெரும் தத்துவங் களாகும். இவை இரகசியமாக கூட்டங்களில் சொல்லப்படவேண்டியவை. அல்ல மாறாக மலை மீதும் குன்றின் மீதேறியும் நின்று வெளிப்படையாக அனைத்து மக்களுக்கும் எட்ட வைக்கப்பட வேண்டிய உயர்ந்த தத்துவங்கள் ஆகும். அனைத்து மக்களுக்கும் வழி காட்டக் கூடிய கருத்துக்களாகும். இறைவன் ஒருவனே. நீங்கள் அவனையே நம்புங்கள். முஹம்மது நபி அவர்களையே ஏற்றுக் கொள்ளுங்கள். பின் பற்றுங்கள். இது அவரது தீண்டாமைக்கு தீர்வு நூலின் முடிவுரைச் சொற்கள்.

தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக் கான ஒரே மார்க்கம் இஸ்லாம் என்று சொன்னதோடு அவர் நிற்கவில்லை. அப்படி இஸ்லாத்தை நோக்கி வருபவர்கள் உண்மை பக்தர்களாக, விசுவாசிகளாக ஆக்கப்பட வேண்டுமெனவும் கூறினார்.

அவரது சாதி ஒழிந்தது என்னும் நூல் ஆங்கிலம், இந்தி, கன்னடம் முதலான மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஆங்கிலமொழியாக்கம் டெல்லியிலும், இந்தி மொழியாக்கம் லக்னோவிலும், கன்னட மொழியாக்கம் பெங்களூருவிலும் வெளி யிடப்பட்ட போது சமூகச் செயல்பாட்டாளர் கள் இஸ்லாமிய அறிஞர்கள் முதலானோர் எழுப்பிய கேள்விகளை உமர் ஃபாரூக் அவர்கள் மிகச் சிறப்பாக எதிர் கொண்டதை யும் பேச்சாளர்களும் பார்வையாளர்களும் அவரது பல்துறைப் புலமையைக் கண்டு வியந்து போனதையும் அந் நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பாளர் குலாம் முகமது நினைவு கூர்ந்தார்.

தீண்டாமையின் தோற்றம், ஒழிப்பு முதலானவை குறித்து இங்கு நிலவும்

கோட்பாடுகளை முன்வைத்தார். தீண்டப் படாத மக்களின் தாழ்வு என்பது வணங்குகிற கடவுளால் வந்தது. வணங்குகிற கடவுளை மாற்றாத வரை தீண்டப்படாத மக்களின் வாழ்வில் எந்த மாற்றமும் காண முடியாது. சமூக விடுதலையைப் பெற முடியாது. ஒன்று திரண்டு போராடு, புரட்சி செய் என்பதெல்லாம் தற்காப்பு நடவடிக்கையே அன்றி சமூக விடுதலையைத் தந்துவிடாது என்றார் (கடவுளை மாற்றுவோம், பக். 27)

மற்ற தத்துவங்கள் இறுதி உபாயமாகச் சொன்னவற்றை உமர் ஃபாரூக் வெறும் தற்காப்பு நடவடிக்கைகள்தான் எனச் சொல்வதை கவனியுங்கள். பிறிதோரிடத்தில் உற்பத்தி உறவா இங்கு ஏற்றத் தாழ்வுகளை உருவாக்கின? என நகைப்பார். டி.எம். உமர் ஃபாரூக்கைப் பொறுத்தமட்டில் இங்குள்ள ஏற்றத்தாழ்வுகள் சாதீய அடிப்படையில் ஆனவை. இவற்றை உருவாக்கியது மதம்தான். சாதீய இழிவுக்கான ஒரே தீர்வு இஸ்லாமிய மதமாற்றம்தான்.

தன்னைப் பின்பற்றி வந்தவர்களிடம், இஸ்லாமிய மதமாற்றத்தால் எந்த இழப்பும் ஏற்படாது. பயன் மட்டுமே கிட்டும் என உமர் ஃபாரூக் உறுதி கூறினார். இஸ்லாமிய மதமாற்றத்தால் இட ஒதுக்கீடு போகுமே எனக் கவலை தெரிவித்தவர்களை நோக்கி அவர் சொன்ன பதில் அவரது சுயமரியாதை உணர்விற்கும் நறுக்கான பேச்சுக்கும் ஒரு நல்ல எடுத்துக்காட்டு. ஊனமுற்றோர் இருக்கையில் அமர ஊனப்படுத்திக் கொள்ளலாமா? என்பதுதான் அந்த பதில் (கடவுளை மாற்றுவோம்.பக்.19)

இஸ்லாத்தில் பலதார மணம் உள்ளதே என்கிற கேள்விக்கு தரவுகளின் அடிப்படை யில் பிற மதங்களைக் காட்டிலும் இஸ்லாத் தில் அதிக அளவில் பலதார மணங்கள் இல்லை என நிறுவினார்.

நேற்று வரை செல்வமாக இருந்தவர் இன்று முகமது மைதீன் பள்ளிவாசலில் தொழுகைக்கு அனைவரையும் அழைக்கும் முஅத்தீனாக இருக்கிறார்.

நேற்று வரை ஞானராஜாவாக இருந்தவர் இன்று ஜமாலுத்தீன் பள்ளி வாசலில் முஸ்லிம்களுக்குத் தலைமை தாங்கும் இமாமாக இருக்கிறார்.

நேற்று வரை ராஜேந்திரன் இன்று முகம்மது சுல்தான் எலெக்ட்ரிகல் கடையில் வேலை.

நேற்று வரை காமராஜ் இன்று ஹாலி முகம்மது சூப்புக்கடை.

இப்படி ஒரு நீண்ட பட்டியலைத் தந்து இஸ்லாம் உன் வாழ்வில் அனைத்து வகைகளிலும் ஒளியேற்றும் என்றார் ( கடவுளை மாற்றுவோம் பக்.28,29)

2007ல் தான் மதம் மாறியபோதும் இஸ்லாமிய அழைப்புப் பணியை உமர் ஃபாரூக் அவர்கள் கடந்த 35 ஆண்டு கால மாகவே செய்து வருகிறார் என அவரது பிள்ளைகள் கூறுகின்றனர். அவரது அம்பேத் கர் மாணவர் இளைஞர் பேரவை மற்றும் நீலப்புலிகள் இயக்கத்திலிருந்தவர் களில் சிலரும் அப்படி மதம் மாறியுள்ளனர். பாலக்குடி சிவசுப்பிரமணியன் சிராஜு தீனாகவும், சிக்கல் நாயக்கன் பேட்டை கன்னயன் ஜக்கரியா ஆகவும், பட்டம் சுந்தர்ராஜன் சதாத் அலிகானாகவும், டி. பழூர் கருணாநிதி முகம்மது கனியாகவும் இப்படி மதம் மாறினர். இவர்களில் கடைசி இருவர் குடும்பத்தோடு மாறினர்.

இப்படி இயக்கச் செயல்பாடுகளில் இருந்து கொண்டே அழைப்புப் பணியையும் செய்ததற்கு இயக்கத்தில் ஏதும் எதிர்ப்பு இருந்ததா? எனக் கேட்டேன்.

இல்லை யாரும் எந்த எதிர்ப்பையும் காட்டவில்லை. அப்பா யாரையும் வற்புறுத்தி யதும் இல்லை. அதோடு அவரது எந்தப் பணியும் தலித் பிரச்சினைகளில் அவரது கவனத்தைக் குறைத்ததில்லை. அதனால் யாரும் எதிர்க்க வில்லை என்றார் புரட்சி மணி.

இயக்கத்திலிருந்து வெளியேறியவர்கள் அப்படி ஏதும் குற்றச்சாட்டுகளை வைத்தார் களா?

வெளியேறியவர்கள் வேறு காரணங் களுக்காகத்தான் வெளியேறினார்கள். அவர் களில் சிலர் மதம் மாறுவது என்கிற முடி வோடு இருந்தவர்கள் கூட வேறு காரணங் களுக்காக வெளியேறிய ஒரு சிலர் மதம்

மாறியதையும் ஒரு காரணமாகச் சொன்னது உண்மைதான்.

35 ஆண்டுகளாக இஸ்லாமிய மத மாற்றம் குறித்துப் பேசி இயங்கியவராயினும் அவரது மகன் 23 ஆண்டுகளுக்கு முன்பே மதம் மாறியிருந்த போதும் உமர் ஃபாரூக் அவர்கள் எட்டு ஆண்டுகளுக்கு முன்தான் இஸ்லாம் ஆகியுள்ளார். தலித் மக்கள் மத்தியில் தொடர்ந்து பணி செய்வதற்கு இஸ்லாமிய மதமாற்றம் ஒரு தடையாக இருந்துவிடக் கூடாது என அவர் நினைத்திருக்க வேண்டும்.

உமர் ஃபாரூக் அவர்கள் பற்றிய இந்தக் குறிப்பை முடிக்கும் முன் ஒன்றைச் சொல்ல வேண்டும்.

2007ல் அவர் இஸ்லாமான பின்னும், அவரது இல்லம் 'பாய் வீடு' என ஆன பின்னும் அவர் தலித் மக்களுடன்தான் இருந்தார். மட்டியூரில் விடுதலைச் சிறுத்தைகள் மற்றும் நீலப்புலிகள் இயக்கக் கொடி மரங்களை சாதி வெறியர்கள் இருமுறை உடைத்தெறிந்ததை எதிர்த்துச் செயல்பட்டுக் கொண்டிருந்த போதுதான் அவரது உயிர் பிரிந்தது. ஆஞ்ஜியோ செய்து வந்து முற்றிலும் ஓய்வாக இருக்க வேண்டிய நிலையில் அவர் மாவட்ட அதிகாரிகளைப் பார்ப்பதற்காக தஞ்சாவூருக்கு அலைந்து கொண்டிருந்தார். கொடிமரங்கள் உடைபட்டதோடு மட்டுமல்லாமல் அதை எதிர்த்துப் போராடியதற்காக 13 தலித்கள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து பொதுக் கூட்டங்களில் பேசினார். கடைசி நாட்களில் மட்டியூர் பிரச்சினை குறித்துக் கடும் மன உளைச்சலில் இருந்ததாகவும், அது உமர் ஃபாரூக் அவர்களின் மரணத்தை விரைவு படுத்தியது என்றும் அவரது குடும்பத்தார் கூறுகின்றனர்.

இஸ்லாம் ஆன பின்னும் ஏன் தலித் இயக்க வேலைகளைத் தொடர்கிறீர்கள் என்கிற கேள்வி உமர் ஃபாரூக் அவர்கள் முன் வைக்கப்பட்ட போது அவர் சொன்ன பதில்

யாருக்கு என்னுடைய பணி உடனடித் தேவை உள்ளதோ அவர்களோடு இருக் கிறேன்.

உதவிய டி.எம். உமர் பாரூக் அவர்களின் நூல்கள்.

சாதி ஒழிந்தது, வேர்கள் பதிப்பகம், 2008.


செந்தமிழ்நாட்டுச் சேரிகள், வேர்கள் பதிப்பகம், 2008

தீண்டாமை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம், வேர்கள் பதிப்பகம், 2010

அம்பேத்கரின் மதமாற்றம், வேர்கள் பதிப்பகம், 2014

தீண்டாமைக்குத் தீர்வு, இலக்கியச் சோலை, 1996

தலித் விடுதலை முழக்கம், மாத இதழ், அக்டோபர், 2009


## வரப்பெற்றோம்

சோக்கோ அறக்கட்டளை கடந்த 32 ஆண்டுகளுக்கும் மேலாக கொத்தடிமை தொழிலாளர்கள் மீட்பு மற்றும் மறுவாழ்வில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ள நிறுவனமாகும். "கொத்தடிமை முறை ஒழிப்பிற்கான சமூக செயல்பாட்டாளர்கள் / அரசு அதிகாரிகளுக்கான கையேடு" என்ற கையேட்டை சோக்கோ அறக்கட்டளை வெளியிட்டுள்ளது. இக்கையேட்டில் கொத்தடிமைகள் குறித்த வரலாற்று ரீதியான பார்வை, கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்புச் சட்டம் மற்றும் விதிகள், சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ILO) தரங்கள் முறை, கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்புச் சட்டத்தின் கீழ் அரசாணைகள், மாதிரி படிவங்கள், மற்றும் உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற தீர்ப்புகள் இடம் பெற்றுள்ளன.

இக்கையேட்டிற்கு சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு நீதிநாயகம் திரு. கிருபாகரன் விரிவான அணிந்துரை எழுதியுள்ளார். நேர்த்திய கட்டமைப்பு, மனித உரிமை ஆர்வலர்கள், நீதிக்காகப் போராடுபவர்கள் அவசியம் வாங்கிப்படித்திட வேண்டிய அவணம். ஆழமான ஆய்வுகள், ஒவ்வொரு அரசு அலுவலத்திலும் அவசியம் இருந்திட வேண்டிய கையேடு.

கிடைக்குமிடம் **எம்.ஜி.எம்.**

**பக்கங்கள் : 223**

சோக்கோ அறக்கட்டளை

**நண்கொடை ரூபாய் : 300.00** **SOCIETY FOR COMMUNITY ORGANISATION TRUST**

Justice Bagwathi Bhavan, 143 Lake view Road, K.K. Nagar, Madurai - 625 020, India
Phone : 0452 - 2580636, Fax: 0452 - 2580922, Website : www.socotrust.org Email : socotrust@sancharnet.in

# தீன் சுடர் ஜனாப் டி.எம். உமர் ஃபாரூக் நினைவுகள்!

— மு. குலாம் முஹம்மது —



**வை**கறை வெளிச்சம் ஜூலை இதழில் நான் அருமை அண்ணன் டி.எம். உமர் ஃபாரூக் அவர்களின் நினைவுகளின் தொடக்கத்தை உணர்ந்தே சுருக்கமாகக் குறிப்பிட்டிருந்தேன்.

அதில் அண்ணன், டி.எம். உமர் ஃபாரூக் அவர்களை எனக்கு அண்ணன் கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ்தான் அறிமுகம் செய்து வைத்தார்கள் என்ற உண்மையையும் குறிப்பிட்டிருந்தேன்.

பத்திரிக்கை வெளிவந்ததைத் தொடர்ந்து நான் என் சொந்த ஊருக்குச் சென்றிருந்தேன். என் ஊர் சூரங்குடிக்கு பக்கத்து ஊர்தான் அண்ணன் கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ்வின் கொடிக்கால்.

ஊரில் இருந்தபடியே அண்ணன் கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ்வை அவர்களைத் தொடர்பு கொண்டேன். அண்ணன் பத்திரிக்கையில் டி.எம். உமர் ஃபாரூக் பற்றிய கட்டுரையை படித்ததாகவும் என்னை சந்திக்க விரும்புவதாகவும் கூறினார்கள். நேரம் குறித்துக் கொண்டு நாங்கள் சந்தித்தோம்.

அண்ணன் கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் அவர்கள் காலச்சுவடு இதழோடு வந்தார்கள். காலச்சுவடு பத்திரிக்கையில் தீன் சுடர் டி.எம். உமர் ஃபாரூக் அவர்களைப் பற்றி ஸ்டாலின் இராஜாங்கம் அவர்கள் எழுதிய கட்டுரை ஒன்று இடம் பெற்றிருந்தது.

சிலிர்த்த புலி பார்வையுடன் டி.எம். அவர்கள் கட்டுரையின் தொடக்கத்தில் நின்று கொண்டிருந்தார். தரமான பதிவு. தலைப்புத்தான் சற்று நெருடலாக இருந்தது. டி.எம். உமர் ஃபாரூக் என்றொரு தலித் தலைவர் என இருந்தது.

அண்ணன் டி.எம். உமர் ஃபாரூக் அவர்கள், களமாக திருப்பனந்தாள் பகுதியை அடிப்படையாகக் கொண்டவர்கள். ஆனால் கடந்த 25-30 ஆண்டுகளாக அவர்கள் தமிழகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் நாங்கள் நடத்திய விவாதங்களில், கருத்தரங்குகளில் கலந்து கொண்டுள்ளார்கள். இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டபின் அவர்கள் இந்தியா முழுவதும் தன்னுடைய “வணங்கா முடி” கருத்துக்களோடு பவனி வந்திருக் கின்றார்கள்.

நாங்கள் உத்திரப்பிரதேசத்தின் தலைநகர், லக்னோவில் அண்ணல் அம்பேத்கர் நின்று பேசிய அரங்கில் 2013

அண்ணன் டி.எம். உமர் ஃபாரூக் அவர்களும் பேசினார்கள். நான் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தேன்.

அதனை செவிமடுத்த ‘ஜித்தேந்தர் சிங்’ என்ற ஐ.பி.எஸ். அதிகாரி எங்களிடமிருந்து ஒரு சிங்கத்தை நீங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்றார். (இது குறித்து விளக்கமாக பின்னர் எழுதுவேன் - இன்ஷா அல்லாஹ்)

ஆக இந்த நிலையில் அவர்கள் வட இந்தியாவிலும் நன்கு அறிமுகமானவர். அண்ணன் டி.எம். உமர் ஃபாரூக் அவர்களை அல்லாஹ் அழைத்துக் கொண்ட செய்தியை அறிந்தவர்களிடமிருந்து எனக்கு வந்த அலைபேசி அழைப்புகளில் வட இந்தியாவில் இருந்து வந்த அழைப்புகளே அதிகம்.

உண்மையில் அவர்கள் அண்ணன் பால் வைத்திருந்த அன்பும் மரியாதையும் என்னை ஆச்சர்யத்தில் ஆழ்த்தியது. மாஷா அல்லாஹ்! வடக்கிலிருந்து வரும் பல பத்திரிக்கைகளும் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் அவர்களுக்கு செய்திகளை அனுப்பினேன். பல உருது பத்திரிக்கைகளிலும், ஹிந்தி பத்திரிக்கைகளிலும் அந்தச் செய்தி வந்துள்ளது என அங்குள்ள நண்பர்கள் அறியத் தந்தார்கள்.

அண்ணன் டி.எம். உமர் ஃபாரூக் அவர்கள் நாடறிந்த தலீத் தலைவர்தான் என்பது என் கணிப்பு.

தலீத் மக்களின் விடுதலைக்காக அவர் கொண்டிருந்த கருத்துக்கள் அவர் களத்தில் குவித்த வெற்றிகள் இவற்றை ஜீரணிக்க முடியாத பொது ஊடகங்கள் அவரைப் பற்றி பிரஸ்தாபிக்கவில்லை. ஆதனால் அவர் அறியப்படாத தலைவர் என்றாகிப் போனார்.

தமிழகத்தில் நாங்கள் ஜாதி ஒழிந்தது என்ற நூலை மையமாகக் கொண்டு நடத்திய கூட்டங்கள் மட்டும் 29. அதில் இந்திய அளவில் 7 தமிழகத்தில் நடத்திய கூட்டங் களில் சிலவற்றில் அன்புச் சகோதரர் ஸ்டாலின் இராஜாங்கமும் கலந்து கொண்டார்கள். இதை அவர்கள் காலச் சுவடு ஆகஸ்ட் 2015 இதழிலும் சுட்டிக்காட்டி யுள்ளார்கள்.

இதற்கு முன் ஆழி என்ற பத்திரிக்கை யிலும் மிகவும் ஆழமானதோர் கட்டுரையை எழுதி இருந்தார். அதில் ஜாதி ஒழிந்தது நூல் டி.எம். மணியின் வாழ்க்கை வரலாறு என்பதை விட அஃதோர் தலீத் போராட்டத்தின் வரலாறு என்றும், தலீத்களிடமிருந்து வரும் இலக்கியங்களின் ஓர் தலைகீழ் மாற்றம் திருப்பு முனை என்றும் குறிப்பிட்டார்.

இதையே தான் ஜாதி ஒழிந்தது ஆங்கில நூலில் எம்.ஃபில் பட்டம் பெற்ற சென்னை பல்கலைக்கழக ஆய்வாளர் ரேணுகாவும் குறிப்பிட்டிருந்தார்.

ஆக ஸ்டாலின் இராஜாங்கம் ஏற் கனவே அண்ணன் டி.எம். உமர் ஃபாரூக் இன் இலக்கியங்களில் தோய்ந்தவர். அவர் கட்டுரை ஆழமானது. அவர் இறுதியில் சொல்லி யிருக்கும் வரிகள், ஒவ்வொரு எழுத்தாளரும் கவனிக்க வேண்டியது.

ஆமாம்! கொடிக்கால் டி.எம். பற்றி கொண்டு வந்த செய்தியை விட்டு விட்டேனே. மன்னியுங்கள். அதனை அடுத்த இதழில் எழுதுகின்றேன்.

இன்ஷா அல்லாஹ்!

**தொடரும். . .**

**உங்களுடைய சந்தாக்களை புதுப்பித்துக் கொள்ளுங்கள் !**

# இது வைகறை வெளிச்சம் ஜூலை இதழுக்கு எழுப்பப்படும் கருத்து!

கறுப்பர்களின் அவலங்களை அடுக்கடுக்காய் பட்டியலிட்டிருந்தீர்கள். நாகரீகம் நாகரீகத்தின் முன்னோடிகள், ஜனநாயகத்தின் காவலர்கள் என்றெல்லாம் தங்களைக் காட்டிக் கொள்ளும் அமெரிக்கர்களிடம், கறுப்பர்களைக் கொலை செய்வதற்கென்றே ஒரு பெரும் பட்டாளமிருக்கின்றது என்பது ஆச்சரியமானது.


இந்தியாவிலிருக்கும் பாசிசத்தை அது வென்றுவிட்டது என்றே தெரிகின்றது. என்றாலும் அது குறித்து எந்தத் தகவலையும் அமெரிக்க ஊடகங்கள் இதுவரை வெளியிட்டதில்லை. கறுப்பர்கள் கொலை செய்யப்படும் போதெல்லாம் அது அங்கொன்றும் இங்கொன்றுமாக நடக்கும். கொலைகள், அவற்றை அளவுக்கதிகமாகப் பெரிதுபடுத்துகின்றார்கள். அந்த அளவுக்கு அது முக்கியமல்ல என்றே நினைத்தோம்.

ஆனால் அதற்காக ஓர் அமைப்பு ஏறத்தாழ 150 ஆண்டுகளுக்குமேலாக இயங்கி வருகின்றது என்ற செய்தியை முதன் முதலாக வைகறை வெளிச்சம் தான் கொண்டு வந்திருக்கின்றது. உங்கள் பத்திரிக்கை பணிக்கு எனது பாராட்டுக்கள்.

பொது ஊடகங்கள் ஏன் இவற்றைக் கண்டு கொள்ளவில்லை? என்பதுதான் மிகவும் வியப்பாக இருக்கின்றது.

மால்கம்**X** என்ற மாவீரனை கறுப்பர்களின் விடுதலைக்காகப் போராடிய மா வீரனை கொலை செய்தது அமெரிக்காவின் உளவுத்துறை (FBI) என அறிகின்றோம்.

ஆனால் இப்போதுதான் தெரிகின்றது. அமெரிக்காவின் உளவுத்துறைக்குள் புகுந்து விட்ட கறுப்பர்கள் தாம் அந்தக் கொலையைச் செய்திருப்பார்கள். கறுப்பின விடுதலையை அவர் இஸ்லாத்தைக் கொண்டு தவிடு பொடியாக்கினார்.




அவர் மெக்காவிலிருந்து கொண்டு தன் மனைவிக்கு அனுப்பிய கடிதம் இஸ்லாம் எல்லா நிறவெறிக்கும் எதிரானது என்பதை தெள்ளத் தெளிவாக தெளிவுபடுத்தும்.

எப்படி வெள்ளையர்கள் கறுப்பர்களை வெறுத்தது தவறோ அதே போல் கறுப்பர்கள் வெள்ளையர்களை எதிர்ப்பதும் தவறு என்பதை அது சுட்டிக்காட்டும். இந்த இஸ்லாத்தை அமெரிக்கா ஏற்றுக் கொண்டால் மட்டுமே அது இந்தப் பேராபத்திலிருந்து மீண்டிட இயலும்.

அன்பார்ந்த வாசகர்களே தமிழகத்தின் பல்வேறு பகுதியிலிருந்தும் நான் எழுதிய மால்கம் **X** நூலைப் படித்தவர்கள் சொன்ன செய்திகளின் சாரம் தான் மேலே தரப்பட்டிருக்கின்றது.

வைகறை வாசகர்கள் தங்கள் கருத்துக் களை முழு முகவரியுடன் எழுதி அனுப்புவது நல்லது என அன்போடு கேட்டுக் கொள்கின்றேன்.

எல்லோரும் மால்கம் **X** என்ற மாலிக் அல் ஷாபாஸ் மக்காவிலிருந்து தன் மனைவிக்கு எழுதிய கடிதத்தைச் சிலாகித்துப் பேசினார்கள். அதனை மீண்டும் இங்கே பதிவு செய்கின்றோம்.

மால்கம் **X** நூலிலிருந்து மால்கம் **X** கடிதம்

ஹஜ் முடிந்த பின்னால் அவர் தன் மனைவிக்கு இப்படியொரு மடலைத் தீட்டினார்.

"நான் இதை என் அடிமனத்தின் ஆழத்திலிருந்து எழுதுகின்றேன்.

இந்த புராதன பூமியில், இந்தப் புண்ணிய பூமியில் பிரவாகமெடுத்து ஓடும் அன்புக்கும், பாசத்திற்கும் இணையான அன்பையோ, பாசத்தையோ நான் இதுவரை பார்த்ததில்லை. நிறம், நிலம், இனம் என்பன வற்றின் அடிப்படையில் இங்கே எந்தப் பாகுபாடும், எந்த ஏற்றத்தாழ்வும் கற்பிக்கப் படுவதில்லை. நபி இப்ராஹீம் (அலை) முஹம்மத் (ஸல்) ஆகியோர் புழங்கிய இந்தப் பூமியில் பேதங்களே இல்லை. எவர் மனதிலும், பல்வேறு நிறத்திற்கும் சொந்தக் காரர்கள் என் மேல் பாய்ச்சிய பாசத்தைப் பார்த்து நான் மூச்சுப் பேச்சற்றுப் போனேன். இங்கே இந்தப் புனித பூமிக்குப் பயணம் செய்திடும் வாய்ப்பினை நல்கியதன் மூலம் அல்லாஹ் என் மீது அளப்பரிய கருணையை அள்ளிவீசிவிட்டான் என்றே சொல்ல வேண்டும்.

ஆயிரமாயிரம் புனிதப் பயணிகள் உலகின் பல்வேறு பாகங்களிலிருந்தும் வந்து அல்லாஹ்வைத் துதித்து நிற்கின்றனர். நீல நயனங்களுக்குச் சொந்தக்காரர்கள்... கறுப்பு நிறத்தைக் கொண்டவர்கள் இப்படி எத்தனை நிறங்கள். இத்தரை மீது உண்டோ அத்தனை நிறத்தையும் கொண்ட மனிதர்கள் இங்கே உண்டு. அத்தனை பேரும் ஒன்று போலவே ஆடை அணிந்திருந்தோம். ஒன்று போலவே கிரியைகளை நிறைவேற்றினோம். ஒன்று போலவே தொழுதோம். ஒற்றுமை, சகோதரத்துவம், இவை அலைபாயும் மனித சங்கமத்தை நான் இங்கே கண்டேன். எல்லோரும் ஒரே விதமான உணர்வையே வெளிக்காட்டினார்கள்.

அமெரிக்காவில் நாம் கண்ட நிறவெறி 'வெள்ளை நிறத்தோடு வேறு எந்த நிறமும் ஒத்துப்போகாது. பகையையும், பூசலையும் தவிர வேறெதுவும் இந்த இரண்டு நிறங்களுக்கிடையேயும் உறவாக அமைய முடியாது' என்றே நம்மை நம்பச் செய்தது.

அமெரிக்கா அவசியம் இஸ்லாத்தை புரிந்து கொள்ள வேண்டும். இது இஸ்லாத் தின் தேவை அல்ல; இது அமெரிக்காவின் அவசரத் தேவை. ஏனெனில் இந்த மார்க்கம் மட்டும்தான் அமெரிக்காவின் நிறவெறியும், அதனால் விளையும் தீமைகளையும் வேரறுத்திட இயலும். இந்தப் பெரும் பூமியில் வாழ்ந்த இந்த நாட்களில் நான் பல்வேறு குடும்பங்களுடன் பழகியிருக்கின்றேன். உடன் தங்கி அவர்களின் விருந்தினராய் வாழ்ந்திருக் கின்றேன். இவர்கள் அமெரிக்காவில் வாழ்ந்திருந்தால் 'அபாய வெள்ளை அண்டாதே' என்று நாமே ஒதுங்கி நின்றிருப் போம். இவர்களும் இந்த முஸ்லிம்களும் - வெள்ளையர்களாகத்தான் இருக்கின்றார்கள். ஆனால் இவர்கள், நாம் இப்படியொரு நிறம் என்ற எண்ணமே இல்லாமல் அமெரிக்க வெள்ளையர்களிடம் இருப்பது போன்ற தொரு மனநிலையு மில்லாமல் இருக்கின்றார் கள். இந்த எண்ணங்களை, மன நிலைகளை, கிஞ்சிற்றும் இல்லாமலாக்கியிருக்கின்றது இஸ்லாம்! பல்வேறு நிறத்தைச் சார்ந்தவர் களும் இத்துணை உண்மையான சகோதரத் துவத்தோடு நடந்து கொண்டதை நான் எப்போதும் கண்டதில்லை.

என்னுடைய இந்த எழுத்துக்களைப் படித்திட உனக்கு அதிர்ச்சியாகவே இருக்க லாம். இதை எழுதியது நான்தானா? என்ற எண்ணங்கூட உனக்கு எழலாம்.

இங்கே இந்தப் பூமியில் நான் பார்த்தவை, பழகியவை, அனுபவித்தவை என்னுடைய பழைய போக்கினை மாற்றியே யாக வேண்டும் எனக் கட்டாயப்படுத்தி விட்டன. நான் எடுத்து வைத்திருந்த பல

முடிவுகளை இப்போது எடுத்தெறிந்திட வேண்டியது கட்டாயம் எனக் கருதுகின்றேன்.

இதனைச் செய்திடுவது எனக்கு இப்போது கஷ்டமாக இல்லை. ஏற்கனவே வெள்ளையர்களைப் பற்றி பல தீர்க்கமான முடிவுகளை நான் மேற்கொண்டிருந்தேன். என்றாலும் நான் எப்போதும் திறந்த மனத்துடன் உண்மைகளை அணுகுபவன்.

புதிய அறிவும் புதிய அனுபவங்களும் நான் கொண்ட முடிவுகளை மாற்றிடுமே யானால் நான் அவற்றின் அடிப்படையில் என்னை மாற்றிடத் தயங்குபவனேயல்ல. யதார்த்தங்களை நான் வாஞ்சையோடு ஏற்றுக் கொள்பவன். மாச்சர்யங்களுக்கு என் மனதில் இடமில்லை. நான் உண்மைகளைத் தேடுபவன். அவற்றைக் கண்டுகொண்டால் அட்டியின்றி ஏற்றுக் கொள்பவன்.

கடந்த பதினோரு நாட்களாக இந்த இஸ்லாமிய உலகில் நான் பலரோடு ஒரே தட்டில் உணவருந்திருக்கின்றேன். ஒரே கோப்பையில் பருகியிருக்கின்றேன்.

ஒரே படுக்கையில் படுத்திருக்கின்றேன். இவர்களுடைய விழிகள் நமது வெள்ளையர் களின் விழிகளை வெல்லும் வண்ணங் கொண்டவை. இவர்களின் முடி நமது வெள்ளையர்களின் முடியை விட எழில்மிக்கவை.

இவர்கள் தோல் வெண்மையிலும் வெண்மை. இவர்களின் உள்ளங்கள் அவர்களின் தோலைவிட வெண்மையாக இருக்கின்றன. இந்த வெள்ளையர்கள் ஆப்பிரிக்காவிலிருந்து வந்த கறுப்பர் களிடமும் சூடானிலிருந்து வந்த கறுப்பர் களிடமும் ஹனாலிலிருந்து வந்த கறுப்பர் களிடமும் என்னிடம் நடந்து கொண்டது போலவே அன்பாக நடந்து கொண்டார்கள். இங்கே எல்லோரும் முஸ்லிம்களே! நிறம் இங்கே எந்த விதத்திலேயும் தலையிடு வதில்லை.

இங்கே எல்லோரும் உண்மையான முஸ்லிம் உடன் பிறப்புகள். எல்லோரும் ஏற்று வணங்கும் அந்த ஏக இறைவன், இவர்களின் மனங்களிலிருந்தும் செயல்களிலிருந்தும் அணுகுமுறையிலிருந்தும், சிந்தனையி லிருந்தும் நிறம் என்ற பேதம் தலையெடுக் காமல் தடுத்துவிட்டான்.

வெள்ளை அமெரிக்கர்கள் இந்த ஏக இறைவனை ஏற்றுக் கொண்டால் தங்கள் நாட்டைக் கவ்வியிருக்கும் மிகப் பெரியதொரு பிரச்னைக்கு முடிவு கண்டவர்களாகி விடுவார்கள்.

இறைவன் ஒருவனே என்ற பேரு ண்மையை ஏற்றுக் கொண்ட மாத்திரத்தில் அவர்கள் ‘மனிதர்கள் அனைவரும் ஒரே குலம்’ என்ற பேருண்மையை ஏற்றுக் கொள்வார்கள். அதன் பிறகு நிறத்தைக் காரணமாகக் காட்டி அவர்கள் யாரையும் துன்புறுத்தவோ, வெறுக்கவோ, உரிமை களைப் பறிக்கவோ, பாசங்காட்டவோ, பரிவு கொள்ளவோ செய்ய மாட்டார்கள்.

வெள்ளை நிறவெறி என்ற புற்றுநோய் அமெரிக்காவை அழித்து வருகின்றது. வெள்ளை அமெரிக்காவின் கிறிஸ்தவம், இஸ்லாம் சொல்லும் உன்னத உண்மையை ஏற்றுக் கொள்ள வேண்டும். இது ஒன்றே அமெரிக்காவை அது எதிர்நோக்கும் பேரழிவிலிருந்து காப்பாற்றும். இன்றேல் இனவெறியால் அழிந்த ஜெர்மானியரைப் போல் அமெரிக்காவின் வெள்ளை நிறவெறி பிடித்த கிறிஸ்தவர்களும் அழிந்து போவார்கள்.

நான் இந்தப் புனித மண்ணில் இருந்திடும் ஒவ்வொரு நொடியும் அமெரிக்காவின் நிறவெறிக் கொள்கையின் ஆபத்துக்களை உணர்கின்றேன். இதற்கு அமெரிக்காவின் நிறவெறிக் கொள்கையின் கெடுபிடியில் சிக்கித் தவிக்கம் கறுப்பர்களைக் குறை சொல்லி இயலாது. அவன் நானூறு ஆண்டுகளாகத் தன் மீது அவிழ்த்து விடப்பட்டக் கொடுமைகளுக்கெதிராகப் போராடுகின்றான்.

வெள்ளை நிறத்தவர்கள்தாம் அமெரிக்காவை தற்கொலையின் பாதையில் இட்டுச் செல்கிறார்கள். இன்று அமெரிக்கா வின் கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங் களிலும் பயிலுகின்றவர்கள், இந்த உண்மை யின் பாதையை (இஸ்லாத்தை) ஏற்று கொள்ள வேண்டும். அவர்களாவது இதைச் செய்தால் அமெரிக்காவை இந்தத் தற்கொலைப் பாதையிலிருந்து காப்பாற்றிவிடலாம்.”

# கர்கரேயைக் கொலை செய்த வழக்கு! மும்பை நீதிமன்றத்தில் நடந்ததென்ன?

அன்பார்ந்த வாசகர்களே!

நாடாளுமன்றத் தாக்குதல், 13 டிசம்பர் 2001 மும்பைத் தாக்குதல் என்ற 26.11.2008 போன்ற பெரியதாக்குதல்கள், பலப் பல சிறிய தாக்குதல்கள் என எத்தனையோ குண்டு வெடிப்புகள். அத்தனையும் சங்கப்பரிவாரங் களின் கைவண்ணங்கள். இதில் நமது உளவுத்துறைகளும் போதிய அளவுக்குத் தங்களால் இயன்றதைச் செய்திருக்கின்றன.

இந்த உண்மைகள் நாட்டுமக்கள் யாருக்கும் தெரியாது. ஆனால் இடை விடாமல் இந்தக் குண்டு வெடிப்புகளுக் கெல்லாம் காரணம் முஸ்லிம்கள்தாம் எனப் பிரச்சாரம் செய்துகொண்டே இருந்தார்கள்.

ஆனால் நாம் எல்லாத் தாக்குதல்களும் இந்த நாட்டை இந்துராஷ்டிரமாக மாற்றிடத் துடிக்கும் சங்கப்பரிவாரத்தின் சதிகளே எனச் சுட்டிக் காட்டி வந்தோம்.

ஆனால், அனைத்து குண்டு வெடிப்பு களும், மும்பைத் தாக்குதலும் சங்கப்பரிவாரம், மற்றும் மத்திய உளவுத் துறை இவற்றின் கூட்டுச் சதி என்பதை எஸ்.எம். முஷ்ரீப் அவர்கள் தெளிவு படுத்தினார்கள்.

அந்த விளக்கங்களை சாட்சியங்களை ஆதாரங்களை, தாங்கி வந்த பேழைதான் - "கர்கரேயை கொலை செய்தது யார்? இந்தியத் தீவிரவாதத்தின் உண்மை முகம்" என்ற நூல்

இது வெறும் நூல் அல்ல, மாறாக இஃதொரு வழக்கின் ஆதாரங்கள்.

ஆமாம்! முதலில் உச்சநீதிமன்றத்திலும் பின்னர் மும்பை நீதிமன்றத்தில் வழக்காகத் தொடுக்கப்பட்டது. உச்சநீதிமன்றத்திலும் மும்பை உயர்நீதிமன்றத்திலும் தொடுக்கப் பட்ட வழக்குகளில் நாம் வைத்த புகாரில்,

கர்கரேயைக் கொலை செய்தது ஒரு சதி. இந்தச் சதியை நிறைவேற்றியவர்கள் மத்திய



உளவுத்துறையினர்தாம் என்பதற்கு போது மான ஆதாரங்கள் இருக்கின்றன. ஆகவே ஹேமந்த் கர்கரே கொலை செய்யப்பட்ட பகுதியை மறுபரிசீலனைச் செய்திட வேண்டும். மறு ஆய்வுக்கு உட்படுத் திட வேண்டும் எனக் கேட்டிருந்தோம்.

நமது புகாரைக் கணக்கில் எடுத்துக் கொண்டு மத்திய, மாநில அரசுகளுக்கு தாக்கீதுகளை Notice அனுப்பியது. ஆனால் மத்திய அரசும், மாநில அரசும் இதற்குப் பதில் அனுப்பிடவில்லை. காலங்கடத்தி வந்தன.

நாமும் இடைவிடாமல் அதனை தொடர்ந்து வந்தோம்.

எத்தனையோ தடங்கல்கள், இறுதியில் சென்ற ஏப்பிரல் மாதம் மும்பை உயர்நீதி மன்றத்தில் இந்த வழக்கு வேண்டுமென்றே இழுத்தடிக்கப்படுகின்றது. அதனால் வழக்கை ஓர் முடிவுக்கு கொண்டு வந்திட வேண்டும் என

வண்மையாக வாதாடினோம். இதற்கு நீதிபதி அவர்கள் கோடை கால விடுமுறை முடிந்த உடன் இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கிடுவோம் எனக் குறிப்பிட்டார்கள்.

இதனை மிகப்பெரிய செய்தியாகப் பத்திரிகைகள் வெளியிட்டன. அதனை நாமும் வைகறை வெளிச்சம் மே இதழில் வெளியிட்டிருந்தோம். அத்தோடு மிகவும் ஆவலோடு கோடை கால விடுமுறைக்குப் பின் நீதிமன்றம் திறக்கும் நாளை எதிர்பார்த்துக் காத்திருந்தோம்.

நீதிமன்றம் திறந்தது. ஜூன் 22ம் நாள் வழக்கும் வருவதாக அறிவிப்புகள். ஜூன் 22ம் நாள் எஸ்.எம். முஷ்ரீப் உட்பட அனைவரும் நீதிமன்றத்தில் காத்துக் கிடந்தார்கள். ஆனால் நமது வழக்கு எண்ணைக் குறிப்பிட்டு, என் முன்னால் இந்த வழக்கு இப்போது இல்லை எனக் குறிப்பிட்டிருந்தார்கள்.

உடனேயே என்ன ஆயிற்று என அங்குமிங்கும் ஓடினோம். பின்னர் மும்பை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியிடும் முறையிட்டோம். அதற்கு தலைமை நீதிபதி நான் இதனை வேறு நீதிபதிக்கு மாற்றுகின்றேன் எனக் கூறிவிட்டார்கள்.

இப்படி இந்த வழக்கு எல்லாக் கட்டங்களிலும் மத்திய உளவுத்துறையின் குறுக்கீடுகளுக்கு உட்பட்டு தவித்துக் கொண்டிருக்கின்றது.

இதற்கு முன்னர் இந்த வழக்கு மும்பை நீதிமன்றத்திலிருந்தே காணாமல் போயிருந்தது. இதனை வைகறை வெளிச்சம் இதழில் விரிவாக வெளியிட்டிருந்தோம். இப்போது நாம் தமிழில் வெளியிட்ட 26/11 நீதிதுறையும் மயங்கியது ஏன்? என்ற நூலில் விரிவாக வெளியிட்டிருந்தோம். வாசகர்கள் அவற்றைப் படிக்க வேண்டும் எனக் கோருகின்றோம்.

### வழக்கை இழுத்தடிக்கும் சதி

வழக்கு ஒரு நீதிபதியிடமிருந்து இன்னொரு நீதிபதியிடம் மாற்றுவதால் வழக்கு நடக்கும் காலம் நீண்டு கொண்டே போகும்.

காரணம் மொத்த வழக்கும் கர்கரேயைக் கொலை செய்தது யார்? இந்தியத் தீவிரவாதத்தின் உண்மை முகம் என்ற நூலை மையப்படுத்தியே அமைந்திருக்கின்றது. பல ஆதாரங்கள் இந்த நூலிலிருந்தே எடுத்துக் காட்டப்படுகின்றன. அதனால் இந்த நூலைப் படித்த நீதிபதிகளால் மட்டுமே இந்த வழக்கை நன்றாகப் புரிந்து கொள்ள இயலும்.

ஆகவே, புதிய நீதிபதிகளிடம் வருகின்றபோது, அந்த நீதிபதிகள் இந்த நூலை நன்றாகப் படித்திருக்க வேண்டும். அல்லது படிக்க வேண்டும். அவர்கள் புதிதாகப் படிக்க வேண்டும் என்றால் அதற்கு அதிகக்காலம் பிடிக்கும். அந்த வகையில் வழக்கு இன்னும் இழுத்தடிக்கப்படும். இந்த விபரங்களை நன்றாகத் தெரிந்த மத்திய உளவுத்துறைதான் இந்த வழக்கில் மூச்சுவிடாமல் தலையிட்டுத் தகிடுத்தத்தங்களைச் செய்து கொண்டிருக்கின்றது என்கின்றனர் வழக்கை முன்னின்று நடத்திக் கொண்டிருக்கும் எஸ்.எம். முஷ்ரீஃப் அவர்கள்.

எனினும் நம்பிக்கை இழக்காமல் நிலை குலையாமல் நமது போரைத் தொடருவோம் என்கின்றனர்.

இன்ஷா அல்லாஹ், பொறுத்திருந்து பார்ப்போம்.

**எம்.ஜி.எம்.**

## சிரியாவில் விடுதலை


சிரியாவில் தீவிரவாதிகள், கிளர்ச்சியாளர்கள், அரசுக்கு எதிராகப் போர் புரிந்தவர்கள் என்றெல்லாம் குற்றம் சாட்டப் பெற்று சிறையிலடைக்கப் பட்டிருந்த 800 பேரை சிரியாவின் அரசு வெளியே விட்டது. ஈதுல் பித்ரு ஈகைத் திருநாளை முன்னிட்டே இந்த ஏற்பாடு என அரசு குறிப்பொன்று கூறுகின்றது.

**இந்தியன் எக்ஸ்பிரஸ் - 19.7.2015**

# விடுதலைப் போரின் மறைக்க முடியாத அத்தியாயம்

# நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்!

## இந்தியாவின் முதல் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு. அவர் ஏன் நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸுக்கு அப்படி அஞ்சினார்?



*ஆமாம் நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸ் -ஐப் பற்றி அஞ்சி நடுங்கிய தால்தான் தன் வாழ் நாள் முழுவதும் பண்டித நேரு நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ஆகஸ்ட் 20 1945 ஆம் ஆண்டு இறந்துவிட்டார் என அறிவித்தப் பின்னரும் தொடர்ந்து நேதாஜியின் குடும்ப உறுப்பினர்களைக் கண் காணித்து வந்தார். இந்தக் கண் காணிப்பபை* **IB** *என்ற மத்திய உளவுத் துறையை ஏவி தொடர்ந்து செய்து கொண்டிருந்தார் ஏன்?*

*அத்தோடு நேதாஜி பற்றிய இரகசிய தகவல்களை வெளியே விட்டிடக் கூடாது என அறிவித்தார்.*

*நேதாஜி பற்றிய சில ஆவணங்களை ஐந்து கோப்புகளை பிரதமரின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார் ஏன்?*

*பண்டித நேரு அவர்களின் அறிவுறுத் தலின் பேரில், அந்த ஐந்து கோப்புகளும் இன்றும் பிரதமரின் கட்டுப்பாட்டுக்குள் தான் இருக்கின்றது. இப்போது மோடியின் கட்டுப் பாட்டுக்குள் இருக்கின்றது ஏன்?*

*நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் கொல்லப்பட்டாரா? இறந்தாரா?*

*இந்த வினாவுக்கு விடையும், இந்திய விடுதலைப்போரில் நேதாஜியின் பங்கும் பற்றிய ஆய்வு ஒன்று இங்கே இடம் பெறுகின்றது. அல்ஹம்ந்துலில்லாஹ்!*

### இந்திய விடுதலைப் போரின் முதல் கட்டம் - போர்களங்கள்

*இந்திய விடுதலைப் போருக்கும் மேற்கு வங்கத்திற்கும் நிறைய தொடர்புகள் உண்டு.*

*ஆங்கிலேயர்கள், கல்கத்தா துறைமுகத்தைத் தங்களது வியாபார நடவடிக்கைக்கு உகந்த இடம் எனக் கண்டது இதற்கு மிக முக்கியமான காரணம்.*

கல்கத்தாவை மையமாகக் கொண்டு தான் ஆங்கிலேயர்களுக்கெதிரான பல ஆயுதந்தாங்கிய போர்கள் நடைபெற்றன.

இந்த ஆங்கிலேயர்களின் - அதாவது கிழக்கிந்திய கம்பெனியின் நாடு பிடிக்கம் தந்திரத்தை முதன் முதலில் ஆயுதந்தாங்கிய போரில் எதிர்த்தவரும் தடுத்தவரும் முகலாய மன்னன் அவுரங்கசீப் அவர்கள்தாம்.

ஆங்கிலப் படைகளுக்கு தலைமை தாங்கி வந்த சர் ஜோசைய்ய சைல்டுக்கும், அவுரங்கசீப் அவர்களின் படைக்கும் 1689இல் நடந்த போரில் அவ்ரங்கசீப்இன் படைகள் தீர்க்கமான வெற்றியைப் பெற்றன.



சர் ஜோசைய்யா சைல்டின் படைகள் மன்னிப்புக் கேட்டு மன்றாடியதோடு, தங்கள் தலையை தரையிலே வைத்து உயிர்ப் பிச்சை கேட்டார்கள். இந்த அளவுக்கு எதிரிகள் இறங்கி வந்த பின்பு மன்னிப்பதே மாண்பு என்பது இஸ்லாத்தின் வழிமுறை. அதனால் மன்னித்து விட்டார் அவ்ரங்கசீப். இல்லையேல் ஆங்கிலேயர்களின் ஆட்டமும், ஆட்சியும் அன்றைக்கே அஸ்தமித்திருக்கும்.

இதைத்தான் வரலாற்றில் ‘Childs War’ சைல்டின் போர் என்று இன்றும் குறிப்பிடுகின்றார்கள். இதில் நிலத்தில் வைத்து மன்னிப்புக் கேட்டதோடு ஒன்றரை லட்சம் ரூபாய் அபாரதமும் செலுத்தினர்.

**(Source An Advanced History of India : By R.C. Majumdar, H.C. Raychudhuri & Kalikinkar Datta - Page 638-640)**

அடுத்து ஆங்கிலேயர்களை விரட்டிட அவர்களோடு நடந்த போரில் இன்னும் வியக்கும் போராக பிளாசி போர் நடந்தது.

இந்த போரில் Mansurul Mulk - Victory of the Country, Horror of War, வெற்றியின் நாயகன், நாட்டின் ஒளிவிளக்கு, போரின் திகில் என்றெல்லாம் பாராட்டப் பெற்ற சிராஜுல் தவ்லா அவர்கள்தாம் ஒரு பெரும் படையோடு பிளாசி என்ற இடத்தில் வைத்து ஒன்பதாவது முறை மோதினார்.

ஆனால் ஏனைய எட்டு முறையும் கிடைத்த வெற்றி அந்த ஒன்பதாவது முறை கிடைக்கவில்லை. காரணம் ஆங்கிலேயர்களின் வீரமல்ல, மாறாக நயவஞ்சகத்தனம். அதாவது, சிராஜுல் தவ்லாவின் முக்கிய தளபதி மிர் ஜாஃபருடன் போட்ட கீழறுப்பு ஒப்பந்தம். இது சென்னையிலிருந்து கல்கத்தா அனுப்பப்பட்ட ஆங்கில சதிகாரன் ராபர்ட் கிளைவுக்கும் நயவஞ்சகன் மிர் ஜபாருக்குமிடையே நடந்த பேரம். பிளாசி என்ற இடத்தில் நடந்த போரில் ஏற்பட்ட தோல்விக்குப் பின்,

இதில் அப்போதைய மேற்கு வங்க தலைநகரம் முர்ஷிதாபாத் இல் வைத்து சிராஜுத் தவ்லா கொலை செய்யப்பட்டார். ஷஹீத்தாக்கப்பட்டார். இது 1757இல் நடந்தது.

பின்னர் ஆங்கிலேயர்களோடு மோதிய பெரும் வீரன் மைசூர் வேங்கை திப்புச் சுல்தான் மூன்று முறை ஆங்கிலேயர்களை புறங்கண்டார். மாமேதை திப்புச் சுல்தான் ஷஹீத். நான்காவது முறை மைசூர் போரில் ஆங்கிலேயர்களின் கீழறுப்பு வேலைகளே மிகைந்து நின்றன.

பெங்களூர் கோட்டையைக் காத்து நின்றவர்கள் செய்த துரோகத்தால். மைசூர் வேங்கை திப்புச் சுல்தான் எதிர்பாராத நெருக்கடிகளைச் சந்தித்தார். ஆனால் திப்புச் சுல்தானே வாளேந்தி போர்க்களம் புகுந்து ஷஹீதானார். இஃது மே திங்கள் நான்காம் நாள் 1799 இல் நடந்தது. 1806 இல் திப்புச் சுல்தானின் மனைவி ஒரு பெரும் புரட்சியை

வேலூர் சிறையிலேயே நடத்திக் காட்டினார்கள். சிறை பிடிக்கப்பட்டு கல்கத்தாவுக்குக் கடத்தப்பட்டார்கள்.



அடுத்து ஆங்கிலேயே ஏகாதிபத்தியத்திற்கு சிம்ம சொப்பனமாக அமைந்தது, பகதூர்ஷா ஜாபர். இவர்களின் தலைமையில் தான் முதல் விடுதலைப் போர் எனத் திரிக்கப்படும் சிப்பாய் கலகம் நடந்தது. அதில் இந்துக்களும், முஸ்லிம்களும் ஒன்றாய் நின்று ஆங்கிலேயர்களுக்குச் சொல்லொண்ணா இழப்புகளை ஏற்படுத்தினார்கள். இந்தப் போரில் பகதூர் ஷா ஜாஃபர் அவர்கள் பர்மாவில் சிறையிலடைக்கப்பட்டார்கள். அங்கேயே அடக்கம் செய்யப்பட்டார்கள்.

இப்படி ஆங்கிலேயர்களுக்கெதிரான விடுதலைப் போரில் ஆயுதந்தாங்கிய போரின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கின்றது.

## சுபாஷ் சந்திர போஸ்

இதே போல் ஓர் ஆயுதந்தாங்கிய போராட்டத்தின் மூலம் ஆங்கிலேயர்களை வீழ்த்திட முனைந்தவர்தாம் சுபாஷ் சந்திர போஸ்.

சுபாஷ் சந்திர போஸ் - இன் குடும்பத்தவர்கள் முஸ்லிம் ஆட்சியாளர்களுடன் நெருங்கிய தொடர்புடையவர்கள். உண்மையைச் சொன்னால் முஸ்லிம் ஆட்சியாளர்களின் அரசவையில் பல முக்கியப் பொறுப்புகளை வகித்தவர்கள்.

சுபாஷ் சந்திர போஸ் இன் முப்பாட்டனார் ‘Mahipati Bose’ மாகிப்பாட்டி போஸ் என்பவர் சில அசாதாரணமான ஆற்றல்களைக் கொண்டவராக இருந்தார். அதனால் அவரை அப்போதைய வங்காள முஸ்லிம் ஆட்சியாளர் நவாப் தனது அமைச்சரவையில் நிதி அமைச்சராகவும் போர் அமைச்சராகவும் நியமித்தார். Minister for Finance and War.

மாகிப்பட்டி போஸ் இன் திறமைகளைப் பாராட்டி நவாப் அவருக்கு சுபுந்தி கான் Subudhi Khan என்ற பட்டப் பெயரையும் சூட்டி பாராட்டினார்.

அத்தோடு அரசவையின் சேவைகளுக்கு அங்கீகாரமாக அவருக்கு ஒரு பெரும் நிலபரப்பையும் வழங்கினார். அது ஒரு கிராமம். அந்த கிராமம் இப்போதும் இருக்கின்றது. அதன் பெயர் சுபுத்திகிபூர் மாகிப்பட்டி.

அதே போல் சுபாஷ் சந்திர போஸின் இன்னொரு பாட்டனார் கோபிநாத் போஸ். இவர் மாகிப்பாட்டி போஸ்இன் கொள்ளுப் பேரன். இவரும் சிறந்த திறமை மிக்கவராகவும் இருந்தார். இவரை அப்போதைய வங்காளத்தின் முஸ்லிம் ஆட்சியாளர் சுல்தான் ஹுஸைன் ஷா, தன்னுடைய அமைச்சரவையில் நிதி அமைச்சராக இருந்தார். பின்னர் சுல்தானின் கப்பல் படையும், இவருடைய பொறுப்பிலே தான் ஒப்படைக்கப்பட்டது. இப்படி மேற்கு வங்கத்தை ஆண்டு நிஜாம்களின் நன்னம்பிக்கையைப் பெற்றவர்களாக வாழ்ந்தவர்கள் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் இன் குடும்பத்தினர்.

**தொடரும் . . .**

**எம்.ஜி.எம்.**

# வீராங்கனை தீஸ்டா செட்டல்வாட் மீது மோடி அரசின் தொடரும் கெடுபிடிகள்

**வை**கறை வெளிச்சம் இதழில் வீராங்கனை தீஸ்டா செட்டல்வாட் மீது தொடரும் கெடுபிடிகளை நாம் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றோம்.

இந்தியாவில் நித்தம் நித்தம் நடத்தப் படும் திட்டமிட்ட வகுப்புக் கலவரத்திற் கெதிராக பெரும் போர் ஒன்றை நடத்தி வருபவர் தீஸ்டா செட்டல்வாட்.

கருத்துக்களம், களஆய்வுகள், அவற்றின் வழி நாடாளுமன்ற, சட்டமன்ற விவாதங் களை முடுக்கிவிடுவது, சங்கப்பரிவார சதிகள் பற்றி தொடர் வெளியீடுகள் இவற்றின் வழி மக்களிடையே விழிப்புணர்வுகளை ஏற் படுத்துதல் வகுப்புக் கலவரங்கள் நிகழும் போது அவற்றை ஆவணப்படுத்துவது வாழும் தலைமுறைக்கும் வருங்கால தலைமுறைக்கும் அவற்றைக் கொண்டு சேர்ப்பது, அவற்றின் மூலம் அவர்களையும் விழிப்படையச் செய்வது.

முரட்டு சங்கப்பரிவார கும்பல்கள் செய்யும் கொடூர கொலைகள், கொள்ளைகள், கற்பழிப்புகள், இவற்றின் சாட்சியங்களைச் சேகரிப்பது,

நாளும் பொழுதும் கண்விழித்து மனித உரிமைகளை கொட்டி அவற்றை "Clinching Widen" நீதி மன்றத்தில் செல்லத் தகுந்த சாட்சியங்களாக ஆக்கி வழக்குகளை தொடுப்பது. வழக்குகளை நடத்துவது,

எத்தனை முறை நீதிமன்றங்கள் சாக்கு போக்கு சொல்லி சாட்சியங்களைக் தட்டிக் கழிக்க முயன்றாலும் விடாமல் நீதிமன்றங் களில் வழக்குகளை பதிவு செய்து தொடர்ந்து நடத்துவார்.

சங்கப் பரிவாரத்தினர் கட்ட விழித்து விடும் அத்தனை தாக்குதல்களையும் வன்முறை களையும், தாங்குவதால் ஏற்படும் நஷ்டங் களையும், கஷ்டங்களையும் கண்டு கிஞ்



சிற்றும் கவலைப் படாமல் எடுத்த லட்சியத்தில் முன்னேறுவது இறுதியில் சங்கப் பரிவாரத்தினர் நீதி மன்றங்கள் வழி தண்டிப்பது,

இத்தனையையும் கடந்த 20 ஆண்டு களுக்கு மேலாக நடத்தி வருகின்றார்கள்.

தீஸ்தா நடத்தும் வழக்குகளில் குற்ற வாளிகள், பாசிஸ்ட்டுகள் என்ற சங்கப் பரிவாரத்தினர்தாம்.

ஆனால் அத்தனை கலவரங்களிலும் பாதிக்கப்பட்டது. கொடுமையான இழப்பு களுக்கு ஆளானது, அதன்பின் தங்கள் வசியுமிடத்தை ஒரேடியாக இழந்து நிரந்தர மாக அகதிகளாக ஆனது, அனைத்தும் முஸ்லிம்கள்.

அந்தவகையில் தீஸ்தா மேற்கொண்ட மேற்கொண்டு வரும் அத்தனை நடவடிக்கை களையும் அவற்றால் வரும் எதிர் விளைவு

*களையும் கஷ்டங்களையும் நஷ்டங்களையும் எதிர் கொண்டிருக்க வேண்டியது முஸ்லிம் களே.*

*ஆனால் தீஸ்தாவோடு வேலை செய்யும் ஓரிரு வழக்கறிஞர்களைத் தவிர ஏனைய முஸ்லிம்களெல்லாம். . . ?*

*நிவாரணங்களை வசூலிப்பது மட்டும் வேலையல்ல. இப்படி கபட காட்டாறுகளைக் கடந்து கொண்டிருக்கும் போதுதான் குஜராத் மிகப் பெரியதொரு கலவரத்திற்குத் தன்னை தயார் படுத்திக் கொண்டிருந்தது.*

*எந்த நேரமும் சிறுபான்மையினர் கூட்டாகக் கொலை செய்யப்படலாம் என்பதை டீஸ்டா 1997களில் உணர்ந்தார்.*

*சங்கப்பரிவாரத்தின் தயாரிப்புகளை மொத்தமாக விரிவாக ஓர் அறிக்கையாக 1999 ஆம் ஆண்டு வெளியிட்டார். அதில் அடுக்கடுக்கான ஆதாரங்களைத் தந்திருந்தார். அத்தனை ஆதாரங்களும் கள ஆய்வுகள் வழி கண்டெடுத்தவை.*

*விரிவான ஆய்வையும், ஆதாரங்களை யும் தந்துவிட்டு அரசு உடனேயே இதைத் தடுக்காவிட்டால் எந்த நிமிடமும் குஜராத் ஒரு கலவரப் பூமியாகலாம் என்பதைக் குறிப்பிட்டார்.*

*குஜராத் பற்றிய அவருடைய ஆய்வு 1999 ஆம் ஆண்டு அவருடைய பத்திரிக்கையாகிய கம்யூனுவல் காம்பாட் (Communal Combat)ல் வந்தது. மத்திய அரசோ எந்த நடவடிக்கை யையும் மேற்கொள்ளவில்லை. 2001 ஆம் ஆண்டு தன்னுடைய பத்திரிகையில் ஒரு தலையங்கத்தை எழுதினார். அதில் நான் திரும்பத் திரும்ப மத்திய மாநில அரசுகளை எச்சரித்துவிட்டேன். அவர்கள் யாரும் எந்த நடவடிக்கையையும் எடுக்க வில்லை. இதனால் குஜராத்தில் ஒரு பெரும் வகுப்புக் கலவரம் விரைவில் சிறுபான்மை முஸ்லிம்கள் கூட்டுக் கொலைக்கு ஆளாக்கப் படலாம் என்று எழுதினார்.*

*அவர் எழுதிய 2002 பெப்ருவரி 27 அன்று தொடங்கி பாதி குஜராத்தில் இன்று முஸ்லிம்கள் இல்லை என்ற நிலை உருவானது.*

*இதனால்தான் கூறுகின்றோம். கோத்ரா ரெயில் எரிப்பு இவர்களின் முன்னேற்பாடு.*

*ஆக, குஜராத் கலவரத்தை டீஸ்டா செட்டல்வாட் தொடக்ககாலந் தொட்டே எதிர்த்தார். அங்கு பல ஆண்டுகளாக நடந்த வெறுப்பு பிரச்சாரம், ஆயுத தயாரிப்பு, அவற்றின் விநியோகம் அத்தனையையும் அவர் விரிவாகத் தெரிந்திருந்தார். அதனால் அவரால் குஜராத் இனப் படுகொலை 2002 வழக்குகளை மிகவும் தெளிவாகவும், உக்கிரமாகவும் நடத்திட முடிந்தது.*

*அதனால் குஜராத் இனப்படுகொலை 2002க்குத் தலைமை தாங்கிய முதலமைச்சர் மோடி, குழந்தைகள் மற்றும் பெண்கள் வளர்ச்சித்துறை அமைச்சர் மாயா கோடானி போன்றவர்கள் ஆர்.எஸ்.எஸ்., பி.ஜே.பி., பஜ்ரங்தளம், விஷ்வ ஹிந்து பரீஷத் ஆகிய அமைப்புகளுக்கு எதிராக அவற்றை செய்த கொலைகாரர்கள், இவர்களுக்கெதிராகவும் தெளிவான ஆதாரங்களையும் கொண்டு வந்திட முடிந்தது. தண்டிக்க முடிந்தது.*

*நாட்டில், முதன் முதலாக வகுப்புக் கலவரங்களை ஊதி வளர்த்தவர்கள், திட்ட மிட்டவர்கள் கொலைகாரர்கள் இவர்களெல் லாம் பெருமளவில் தண்டிக்கப்பட்டது டீஸ்டா செட்டல்வாட்டின் முயற்சியால்தான் என்றால் அது மிகையாகாது.*

*நாட்டில் வகுப்புக் கலவரங்கள் நடக்காமல் தடுத்திட வேண்டும் என்பதில் டீஸ்டா காட்டிய ஆர்வத்தில் எள் மூக்கியன் முனையளவாவது நமது நீதிமன்றங்கள் காட்டி இருந்தால் வகுப்புக் கலவரங்களற்ற இந்தியாவை உருவாக்கி இருக்க முடியும்.*

*மோடி இந்தியாவின் பிரதமராக ஆகி இருக்கமாட்டார். சபர்மதி சிறையிலோ திகார் சிறையிலோ கம்பி எண்ணிக் கொண்டிருந் திருப்பார்.*

*அமித்ஷாவை நீதித்துறையின் அவ மானம் எனக் கருதப்படும் சதாசிவம்கள் காப்பாற்றிடாமலிருந்தால் பாரதீய ஜனதா கட்சியின் தலைவராகப் பவனி வந்திருக்க மாட்டார். மாறாக கொலை குற்றவாளியாக சிறையிலிருந்திருப்பார்.*

ஆனால் நீதித்துறை அனைத்து நிலைகளிலும் வழுக்கி வீழ்ந்தது.

இனி இந்திய நீதிமன்றங்களில் நீதி கிடைக்காது என்பதால் உலக நீதிமன்றத்தை அணுகிட முயற்சிகளை மேற்கொண்டார் டீஸ்டா செட்டல்வாட். அதைத் தானாகவே முன் வந்து தடுத்தது நமது உச்ச நீதிமன்றம். இப்படித் திரும்பும் திசையெல்லாம் நீதியை வழிமறித்தார்கள், தடுத்தார்கள்.

இப்படி நீதி படுகொலை செய்யப்பட்டதால் மோடி போன்றவர்கள் தண்டனையிலிருந்து தப்பித்துவிட்டார்கள். மட்டுமல்ல நாடாளவும் வந்துவிட்டார்கள்.

**பழிவாங்கும் படலம்**

அப்போது நீதியை வழிமறித்தவர்கள், இப்போது அவர்களை நீதியின் முன் நிறுத்தியவர்களைப் பழிவாங்கிடவும் துணிந்து விட்டார்கள்.

டீஸ்டா மீது காட்டுமிராண்டி தனமாய் தாக்குதல்களை நடத்தினார்கள். அலுவலகத்தை உடைத்தார்கள். டீஸ்டாவிடம் வேலைச் செய்த ஒரு முஸ்லிமை மிரட்டி விலைக்கு வாங்கி டீஸ்டா மீது பொய் வழக்குகளைத் தொடுத்தார்கள். ஆட்சியில் அமர்ந்தவுடன் மத்திய புலனாய்வுத்துறை (Central Berau of Invwestigation)யிடம் ஒப்படைத்தார்கள்.

உடனேயே டீஸ்டாவை கைது செய்திட நடவடிக்கை எடுத்தார்கள் முடியவில்லை. டீஸ்டா உச்சநீதிமன்றம் வரை சென்று முன்பினை முன் ஜாமீன் வாங்கிவிட்டார்.

உச்சநீதிமன்றத்தில் டீஸ்டாவின் முன் ஜாமின் மனுவை பிரதமர் மோடியின் விசிறிகளிடம் ஒப்படைத்தார்கள். ஆனால் அந்த முயற்சி வெற்றி பெறவில்லை. குறிப்பாக பிரஷாந்த் பூஷன் அவர்கள் இந்த இரண்டு நீதிபதிகளும் தங்கள் பிள்ளைகளின் திருமணத்திற்கு மோடியை அழைத்திருந்தார்கள். அதனால் மோடியின் விசிறிகள் இந்த நீதிபதிகள் என்கிற உண்மையை உலகறிய செய்து விட்டார்கள்.

இதனால் டீஸ்டாவின் முன் ஜாமீன் மனு வேறு பெஞ்சுக்கு மாற்றப்பட்டுவிட்டது. அந்த பெஞ்ச் டீஸ்டாவை கைது செய்திட வேண்டிய அவசியமில்லை. அவர் மீது சொல்லப்படும் குற்றச் சாட்டுக்கள் பணம், போக்குவரத்துச் சம்பந்தப்பட்டதுதான். அவற்றை ஆவணங்களைக் கொண்டே சரிபார்த்துக்கொள்ளலாம். தேவைப்பட்டால் அவரை அழைத்தோ அவர் இருக்குமிடம் சென்றோ விசாரிக்கலாம். அவர் ஒத்துழைக்கவில்லை என்றால் மட்டுமே அவரை விசாரிப்பவர்கள் அவரை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் எடுத்திட வேண்டும் எனக் கூறினார்கள்.

இப்போது மோடி தன் கட்டுப்பாட்டிலுள்ள மத்திய புலனாய்வுத்துறையை ஏவிவிட்டு டீஸ்டா அவருடைய கணவர் குலாம் முஹம்மத் பக்ஷி ஆகிய மூவருடைய அலுவலகத்தையும் 14.7.2015 அன்று கடுமையான சோதனைகளுக்கு உள்ளாக்கினார்கள்.

பின்னர் டீஸ்டாவையும் அவருடைய கணவரையும் விசாரணைக்கு அழைத்தனர். விசாரணையில் மத்திய புலனாய்வுத் துறையினர் எழுப்பிய அத்தனை வினாக்களுக்கும் பதில் சொன்னார் டீஸ்டா செட்டல்வாட்டும், அவருடைய கணவரும். ஆனாலும் அவர்கள் ஒத்துழைக்கவில்லை என்று புனைந்துரைத்து நீதிமன்றத்தில் வழக்கொன்றை பதிவு செய்து வாதாடினர். இது 17.7.2015. இந்த வழக்கில் 22.7.2015 அன்று தீர்ப்பு வந்தது.

**கஷ்மீரில் அதிசய இஃதார்**

கஷ்மீரில் நடந்த இப்தார் நிகழ்ச்சி ஒன்றில் அத்தனை அமைப்புகளையும் சார்ந்தவர்களும் கலந்து கொண்டு ஓர் ஒற்றுமை உணர்வைக் காட்டினார்கள்.

**தி ஹிந்து - 17.7.2015**



தொடர் -35

# எது முதலில்?

-இமாம். யூசுப் அல் கர்ளாவி

## தனி நபர் பற்று குலப்பற்று இவற்றைவிட சமுதாயப் பற்றே முதன்மையானது

சமுதாயப் பற்று, சமுதாய உணர்வு இவற்றுகே முதலிடம் தரவேண்டும்.

குடும்பப் பற்று, கோத்திரப் பற்று, தனி நபர்மீதான பிடிப்பு, இனவெறி இவற்றுக்கெல்லாம் சமுதாய நலனுக்கு முன்னால் எந்த இடமும் தந்திடக் கூடாது.

இதை வலியுறுத்தும் வசனங்கள் திருக்குர்ஆனில் உண்டு. பெருமானார் (ஸல்) அவர்களின் பொன் மொழிகளும் உண்டு.

ஜாஹிலிய்யா எனும் அஞ்ஞான சமுதாயத்தில் ஒருவன் எந்த கோத்திரத்தைச் சார்ந்தவன் என்பதைக் கொண்டே அவனுக்கான அனைத்தும் முடிவு செய்யப்பட்டன. அவன் தகுதி தீர்மானிக்கப்பட்டது. அவன் மீது மற்றவர்கள் அன்பு செலுத்துவதற்கு அதுவே அடிப்படை என்றிருந்தது.

எல்லா கோத்திரத்தினரிடையேயும் இப்படி ஒரு பழமொழி புழக்கத்தில் இருந்தது. "உன் சகோதரன் அநீதி இழைத்தாலும் இழைக்கப்பட்டாலும் அவனுக்கே நீ உதவி செய்திட வேண்டும்."

இஸ்லாம் எனும் சன்மார்க்கம் வந்து அன்பு, பற்று, பாசம், பிடிப்பு இவை அனைத்தும் அல்லாஹ்வுக்கும் அவனின் திருத்தூதருக்கும் முஸ்லிம் (உம்மா) சமுதாயத்துக்கும் உரியது என்றாக்கிவிட்டது.

இதோ அல்லாஹ் கூறுகிறான் : "உங்களின் உற்ற நேசர்கள் யாரென்றால் அல்லாஹ்வும் அவனுடைய திருத்தூதரும் யார் இறை நம்பிக்கை கொண்டு தொழுகையை நிலை நாட்டி ஜகாத் எனும் தர்மத்தையும் வழங்கி அலலாஹ்வுக்குப் பணிந்து நடப்போர்தாம்.

யார் அல்லாஹ்வையும் அவனின் தூதரையும் நம்பிக்கை கொண்டவர்களையும் உற்ற நேசர்களாக ஆக்கிக் கொண்டனரோ (அவர்களே அல்லாஹ்வின் படை) நிச்சயமாக அல்லாஹ்வின் படையினரே வெற்றி பெற்றவர்கள்."

**(5:55,56)**

முஸ்லிம்கள் நீதிக்குச் சாட்சியாளர்களாகத் திகழ வேண்டும். இதை அல்லாஹ்வுக்காக உறுதியுடன் செய்திட வேண்டும்.

உறவுக்காரன் மீதான அன்போ, எதிரியின் மீதான வெறுப்போ இதற்குக் குறுக்கே வர அனுமதிக்கக் கூடாது.

விருப்பு, வெறுப்புக்கு அப்பால் நின்று நீதியை விரும்பிட வேண்டும். அதை அல்லாஹ்வுக்காகச் செய்திட வேண்டும்.

அல்லாஹ் கூறுகிறான் "ஓரிறை நம்பிக்கையாளர்களே நீதியை நிலை நாட்டுபவர்களாக இருங்கள். உங்களுக்கு உங்கள் பெற்றோருக்கோ, உறவினருக்கோ பாதகமாக இருப்பினும் சரி, அல்லாஹ்வுக் காகவே சாட்சி கூறுபவர்களாகவும் இருங்கள்."

**(4:135)**

மேலும் அல்லாஹ் கூறுகிறான்: "நீதியை நிலை நாட்டுவதற்காக அல்லாஹ்வுக்கு நீங்கள் உறுதியான சாட்சியாக இருங்கள். எந்தக் கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டிருக்கும் வெறுப்பு நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்டிவிட வேண்டாம். நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். இதுவே பயபக்திக்கு மிக நெருக்கமானது. அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்"

**(5:8)**

நீதியை நிலைநாட்டுவதற்காக அஞ் ஞான காலத்துப் பழமொழிகளில் சிலவற்றை நபி (ஸல்) அவர்கள் பயன்படுத்தினார்கள். அதற்கு அம்மக்கள் கூறி வந்த விளக்கத்துக்கு மாற்றமான புதிய விளக்கம் தந்தார்கள்.

இதோ அந்தப் பழமொழியும் அதற்கு நபி (ஸல்) கூறிய விளக்கமும்.

நபி (ஸல்) கூறினார்கள் : "உன் சகோதரன் அநீதி இழைத்தாலும் இழைக்கப் பட்டாலும் அவனுக்கே நீ உதவி செய்திட வேண்டும்."

இதைக் கேட்ட நபித் தோழர்கள், "அல்லாஹ்வின் திருத்தூதரே அவன் பாதிக்கப்பட்டிருந்தால் அவனுக்கு நாங்கள் உதவி செய்வோம். அவன் பாதிப்பை ஏற்படுத்துபவனாக (அநீதி இழைப்பவனாக) இருந்தால் நாங்கள் எப்படி உதவ முடியும்?" என்று கேட்டார்கள்.

அதற்கு நபி(ஸல்) அவர்கள் "அவனை அநீதி செய்ய விடாமல் தடுக்க வேண்டும். அதுவே நீங்கள் அவனுக்குச் செய்யும் உதவி" என்று விளக்கம் தந்தார்கள்.

**(புஹாரி, முஸ்லிம் திர்மிதி, அஹ்மது)**

அந்தப் பழமொழிக்கு பெருமானார் தந்த விளக்கம் அநீதியாளனுக்குச் செய்யும் உதவியின் பொருளையே மாற்றியது.

அநீதி செய்பவனை மனோ இச்சையிலிருந்து தடுப்பது ஷைத்தானின் வலை வீழ்ந்திடாமால் காப்பாற்றுவது அநீதி எனும் படுகுழியில் வீழ்ந்திடாமல் கரம் பற்றி மீட்பது எந்த அநீதி அவனின் இம்மை வாழ்வுக்குக் கேடாகவும் மறுமை வாழ்வில் பல இருள்களாகவும் ஆகிவிடுமோ அப்படிப் பட்ட அநீதியைச் செய்ய விடாமல் தடுப்பது என்று மாற்று விளக்கம் ஏற்பட்டது.

இதுபோலவே நபி (ஸல்) அவர்கள் இனவெறிக்காக அழைப்பு விடுப்பதை தடை செய்தார்கள். இனவெறியைக் காப்பதற்காக சண்டையிடுவதைத் தடுத்தார்கள். இனவெறிக்காக சண்டையிட்டு மடிந்தவன் அஞ்ஞான மரணத்தையே அடைந்தான் என்றார்கள்.

நபி (ஸல்) கூறினார்கள் : "(எந்த லட்சியத்துக்காகவுமில்லாமல்) கண்மூடித் தனமான வெறிக்காக சண்டையிட்டு மடிந்த வன் இனவெறிக்காக (மக்களை) அழைத்து இனவெறிக்காக உதவி செய்தவன். எனவே அவனின் உயிரிழப்பு அஞ்ஞான உயிரிழப்பே"

**(நூல்: முஸ்லிம்)**

இன்னொரு நபி மொழி இப்படிக் கூறுகிறது. "இறைவனுக்குக் கட்டுபடாமல் சமுதாயத்தை விட்டுப் பிரிந்து மரணித்தவன் அஞ்ஞான மரணத்தையே அடைந்து விட்டான். மேலும் கண்மூடித்தனமான இனவெறிக்காக சண்டையிட்டு மடிந்தவனின் கோபம் இனவெறிக்கானது. அவன் மக்களைத் திரட்டியது இனவெறிக்காக.

எனவே அவனது உயிரிழப்பு அஞ்ஞான உயிரிழப்பே.''

**(நூல்: முஸ்லிம்)**

மற்றொரு நபிமொழி இதோ: ''இன வெறியை நிலை நாட்ட மக்களை அழைத்தவன் நம்மைச் சார்ந்தவனல்ல. இனவெறிக்காகப் போரிட்டவன் நம்மைச் சார்ந்தவனல்ல. இனவெறிக்காக மாய்ந்தவன் (இறந்தவன்) நம்மைச் சார்ந்தவனல்ல.''

**(நூல் : அபூதாவூத்)**

''அல்லாஹ்வின் திருத்தூதரே, இன வெறி என்றால் என்ன?'' என்று வாசிலா பின் அஸ்கவு (ரழி) என்ற நபித் தோழர் கேட்ட போது ''உன் சமுதாயம் அநீதியிலிருக்கும் போது அதற்கு நீ உதவி செய்வதே இனவெறி'' என்று நபி (ஸல்) கூறினார்கள்.

**(நூல்: அபூதாவூத்)**

நபி (ஸல்) கூறினார்கள்: ''தன் சமுதாயம் செய்யும் அநீதிகளுக்கு உதவி செய்பவன் கிணற்றில் விழும் ஒட்டகத்தின் வாலைப் பிடித்து இழுப்பவன் போலாவான்''

**(நூல்: அபூதாவூத்)**

''அதனுடன் சேர்ந்து அவனும் கிணற்றில் வீழ்வான். அதை அவனால் காப்பாற்ற இயலாது. அநீதி செய்யும் சமுதாயத்துக்கு உதவுபவனால் அவர்களைக் காப்பாற்ற முடியாது. பாவத்திலும் அதனால் வரும் அழிவிலும் இவனும் வீழ்ந்திடுவான்.'' என்று இதற்கு அறிஞர் ஹத்தாபீ (ரஹ்) விளக்கம் தந்தார்கள்.

நபி (ஸல்) அவர்கள், இனவெறிக்காக மக்களை அணி திரட்டுவதையும் அதற்காக யுத்தம் செய்வதையும் அதற்காக உயிர் துறப்பதையும் கண்டித்ததோடு இனவெறிக்கும் தனக்கும் எந்தத் தொடர்புமில்லை என்று வலியுறுத்தியது போலவே ஒன்றுபட்டு ஓரணியில் (ஜமாஅத்) திரண்டிட அழைத்தார்கள். தன் சொல், செயல், அங்கீகாரம், இவற்றின் வழியாக ஒற்றுமையை வலியுறுத்தினார்கள்.

பிளவு, பிணக்கு, தனிப்பிரிவு, தனிமனிதப் பிரியத்தால் தனி அணி என்பதையெல்லாம் கண்டித்தார்கள்.

இதோ அதுபற்றிய சில நபிமொழிகள்: ''அல்லாஹ்வின் கை (உதவி) ஜமாஅத் எனும் கூட்டமைப்பில்தான் உள்ளது''

**(நூல்: திர்மிதி)**

''ஒன்றுபட்டுவாழ்வது அருள். பிரிந் திருப்பது வேதனை (தண்டனை)''

**(நூல்: அஹ்மது)**

''ஒன்று பட்டு வாழ்வது அருள் வளம் மிக்கது (பரக்கத்) பிரிந்திருப்பது வேதனை (அதாப்)''

**(நூல்: பைஹகீ)**

''ஜமாஅத் எனும் கூட்டமைப்பை பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். பிரிந்து விடாதீர்கள் என்று எச்சரிக்கிறேன். தனித்திருப்பவனுடன் தான் ஷைத்தான் இருப்பான். இருவராக இணைந்திருப்பவர் களை விட்டு ஷைத்தான் தூரமாகி விடுவான். யார் சொர்க்கத்தின் நடுவில் சுகபோக வாழ்க்கை வாழ்ந்திட விரும்புகிறாரோ அவர் ஜமாஅத் எனும் ஒற்றுமையை பற்றிப் பிடித்துக் கொள்ளட்டும்.''

**(நூல்: அபூதாவூத், இப்னுமாஜா, ஹாகிம்)**

இவையெல்லாம் நபி(ஸல்) கூறிய பொன்மொழிகள்.

எனவே தனிமனிதன் மீதான பற்று, குலப்பற்று இவற்றை விட சமுதாயப் பற்றே முதன்மையானது. ஒற்றுமையே முதன்மை யானது.

**தொடரும்**

**தமிழ் வடிவம் : இல்யாஸ் ரியாஜி**

# தனிமைப்பட்டு தவிக்கும் இஸ்ரேல்



கடந்த வருடம் இதே நோன்பு மாதத்தில் நம் கண்கள் எல்லாம் வானத்தை நோக்கியே இருந்தன கலங்கியபடி. பாலஸ்தீன மக்கள் மீது கொடுமையான போரை இஸ்ரேல் துவங்கிய நேரம் அது. பாலஸ்தீனம் தனித்து விடப்பட்டிருந்தது.

உலக முஸ்லிம்கள் அனைவரும் கலங்கிய கண்களோடும் தளர்ந்த உள்ளத் தோடும் இறைவனை ஆனால், இறைவன் மீது கொண்ட நம்பிக்கையை மட்டும் கை விடாமல் இறைவனை இறைஞ்சிக் கொண்டி ருந்தனர்.

2014ம் ஆண்டு ஜூலை 8ம் தேதி இந்தப் போர் துவங்கியது. உலக சட்டாம்பிள்ளை அமெரிக்காவின் ஆதரவுடன் அடாவடித் தனமாக காசா மக்கள் மீது இஸ்ரேல் போரை துவங்கியது. சென்னை மாநகரத்தை விட சிறிய அளவிலான மக்கள் தொகை அடர்த்தியான காசாவின் மீது சரமாரியாக கொத்து கொத்தாக குண்டுகளை வீசியது. போர் விமானங்களை கொண்டு தாக்கியது.

57 நாட்கள் நடந்த இந்தப் போரில் பாலஸ்தீன பொதுமக்கள் 2140 பேர் கொல்லப்பட்டனர். 11,000 பேர் படுகாய மடைந்தனர். ஆனாலும் அந்த மக்கள் காட் டிய தீரம் அலாதியானது. பாலஸ்தீன மக்களின் மன உறுதியே அந்த போரை அவர்கள் வெல்ல காரணமானது.

இதனை ஒரு சிறிய உதாரணத்தின் மூலம் சொல்லலாம். ஹமாசின் தலைவர் ஒரு நேர்காணலின் போது கூறியது, “நாங்கள் வெற்றியாளர்கள். ஏனெனில் இதுவரை உலகில் உள்ள எந்த இயக்கத்திடமும் இல்லாத அளவிற்கு 11,000 ஷஹீதுகளுக்கு சொந்தக் காரர்களாக நாங்கள் உள்ளோம்.”

ஆம், அந்த மக்களின் வெற்றி தங்கள் இன்னுயிரை அல்லாஹ்வின் பாதையில் ஈவதில் உள்ளது. இதுவே அவர்களின் வெற்றிக்கு காரணமானது.

இஸ்ரேல் தரப்பில் 150 இராணுவத் தினருக்கும் மேலாக கொல்லப்பட்டனர். இஸ்ரேல் எங்கும் ஹமாசின் ராக்கெட் ஏவலுக்கு பயந்து எழுப்பப்பட்ட அபாய சங்கொலிதான். 1620க்கும் மேற்பட்ட இஸ்ரேலிய இராணுவத்தினர் படுகாய மடைந்தனர். சமீப காலத்தில் இஸ்ரேலுக்கு கிடைத்த மிகப் பெரிய மரண அடி இது.

## புறக்கணிப்பு முதலீடுகள் திரும்ப பெறுதல், மற்றும் பொருளாதார தடைகள் இயக்கம் ( Boycott, Disinvestment and Sanctions Movement)

இது ஜூலை 9, 2005இல் 171 அரசு சாரா தொண்டு நிறுவனங்களால் ஆரம்பிக்கப் பட்டது. இது சிறிது சிறிதாக வளர்ந்து தற்போது இஸ்ரேலை மிகப்பெரிய நெருக்கடியில் தள்ளியுள்ளது. ஜூன் 2015 இல் ஃபினான்சியல் டைம்ஸ் (Financial Times) என்ற பத்திரிக்கை இந்த இயக்கத்தின் முயற்சிகளால் இஸ்ரேல் அரசுக்கு 1.4 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு நட்டம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டிருந்தது. இதனை அரசின் கால் கலிஸ்ட் கசிந்த அறிக்கை Calcalist (a financial paper owned by the Yedioth Ahronoth Group) வாயிலாக பெற்றுக் கொண்டதாக கூறியது.

அதே ஜூன் 2015இல் ராண்ட் கார்பரேஷன் என்ற Rand Corporation நிறுவனம் இதே நிலை மேலும் 10 வருடங்களுக்கு தொடருமானால் இஸ்ரேலுக்கு 47 பில்லியன் டாலர் நட்டம் ஏற்படும் என கணித்திருந்தது.

### அறிவியலாளர் ஸ்டீபன் ஹாவ்கின்ஸ் அவர்களின் இஸ்ரேலிய புறக்கணிப்பு

தற்போது இந்த இயக்கம் வேகமாக வளர்ந்து வருகிறது. இந்த இயக்கத்தின் முயற்சிகளால் இஸ்ரேல் தற்போடு தனிமைப் பட தொடங்கியுள்ளது.

ஸ்டீபன் ஹாவ்கின்ஸ் என்ற அறிவிய லாளர் இஸ்ரேலில் 2013ல் நடக்க இருந்த அறிவியல் மாநாட்டை புறக்கணித்தார். இந்த செய்தி வெளிவந்த சில நொடிகளில் ஒரு லட்சம் பேருக்கு மேலாக அதனை ஃபேஸ்புக்கில் பகிர்ந்து கொண்டனர். இதன் வெற்றியை கண்ட கார்டியன் இதழ் இது குறித்து கட்டுரை வெளியிட்டிருந்தது.

http://www.theguardian.com/science/political-science/2013/may/13/stephen-hawking-boycott-israel-science

ஸ்டீபன் ஹாவ்கின்ஸ் உடல் நல குறைவின் காரணமாகவே இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை என்ற விஷம தகவல் இஸ்ரேலால் வெளியிடப்பட்ட போது அதனை மறுத்து ஹாவ்கின்ஸ் அவர்கள் செய்தி வெளியிட்டார்கள்.

“பாலஸ்தீனத்தை பற்றி எனக்குள்ள அறிவைக் கொண்டு இந்த புறக்கணிப்பை மதிக்கவும், மேலும் பாலஸ்தீனத்தில் உள்ள என் சொந்த கல்வியாளர்கள் தொடர்பின் காரணமாகவும் அவர்களின் அறிவுரை காரணமாகவும் நான் சொந்தமாக இந்த முடிவை எடுத்துள்ளேன்”என்று அதில் அவர் தெரிவித்திருந்தார்.

மேலும் இந்த பட்டியலில் பல பிரபலங்கள் சேர்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஈரானின் அணு உலை வெற்றி

இஸ்ரேலை இன்றுவரை ஆண்மை யுடன் உலக அரங்கில் எதிர்த்து வரும் நாடுகளில் முதன்மையானது ஈரான்.

ஈரான் அணு ஆயுத சக்தியை பெற்றுவிடக்கூடாது என்பதற்காக ஒற்றை காலில் இஸ்ரேல் நின்று வருகிறது. ஆனால் ஈரானோ சரியான இராஜ தந்திரத்துடன் இவ்விஷயத்தை கையாண்டு வருகிறது.

15 பெப்ரவரி 2012 ஈரானின் வரலாற்றில் ஒரு பொன்னாள். ஏன் உலக வரலாற்றையே திருப்பி போடவும் உலக அரசியல் பார்வையும் மாற்றவும் செய்த நாள்.

ஈரானின் ஜனாதிபதி அஹ்மத் நஜதி அவர்கள் முதலில் குர்ஆனை ஓதி பின்னர் தங்கள் நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட நியூக்ளியர் ரியாக்டரின் எரிபொருள் தகட்டை அணுஉலையின் உள்ளே நுழைத் தார். இந்த நிகழ்வு வடக்கு டெஹ்ரானில் நிகழ்ந்தது.

மேலும் ஈரானிலேயே தயாரிக்கப்பட்ட யுரேனிய செறிவூட்டும் மைய விலக்கியை பற்றிய அறிவிப்பையும் வெளியிட்டார். “ஏறக்குறைய 6000 மைய விலக்கிகள் வேலை செய்து கொண்டிருந்தன. தற்போது அத்துடன் 3000 மைய விலக்கிகள் (Centrifuges)



சேர்க்கப்பட்டுள்ளன. ஆக மொத்தம் 9000 மைய விலக்கிகள் இப்போது வேலை செய்து கொண்டிருக்கின்றன."

"எங்கள் சொந்த தயாரிப்பான இவை நான்காவது தலைமுறை மையவிலக்கிகள். இவை கார்பன் இழைகளால் ஆனவை. எனவே இவை சூப்பர் சானிக் வேகத்தில் யுரேனியத்தை சுத்தப்படுத்திட (செறிவூட்டும்) சுற்றும்போது மிகுந்த வேகமாக சுற்றி செறிவூட்டடிக்கூடியவை. குறைந்த கழிவை வெளிப்படுத்துபவை. மேலும் இவை எடுத்துக் கொள்ளும் இடமும் குறைவு. எனவே தற்போது நடைமுறையில் உள்ள அனைத்து மைய விலக்கிகளையும் விட இவை சிறந்தவை."

"எங்களுடைய நான்காவது தலைமுறை மைய விலக்கிகள் தற்போதைய மைய விலக்கிகளை விடவும் மூன்று மடங்கு வேகமாக யுரேனியத்தை சுத்தப்படுத்தக் கூடியது."

மத்திய கிழக்கு பகுதியில் அணு ஆயுத வல்லமை பெற்றுள்ள ஒரே நாடு என்ற திமிருடன் (ஆனால் இன்றும் அதை அறிவிக்கவில்லை) அடாவடியாக ஒரு ரவுடியை போல் செயல்பட்டுக் கொண்டிருந்த இஸ்ரேலுக்கு சாவு மணி அடிப்பது போன்ற தோர் அறிவிப்பு அது.

அதன் பின்னர் ஐரோப்பிய நாடுகள் ஈரானுக்கு பொருளாதார தடைகளை விதித்தன. ஆனால் இதில் பாதிக்கப்பட்டது ஐரோப்பிய நாடுகள்தான். ஈரானின் மன உறுதிக்கு முன்னால் இந்நாடுகளால் நிற்க முடியவில்லை.

எனவே இவை நாம் ஏன் தோற்றுக் கொண்டிருக்கும் இஸ்ரேலை தொடர்ந்து ஆதரிக்க வேண்டும் அதற்கு பதிலாக வெற்றி பெறும் நாட்டுடன் சேருவோம் என்று எண்ண மாறுதலுக்கு வந்து விட்டதாக தெரிகிறது.

உலக வல்லரசுகள் ஆறு நாடுகளுடன் ஈரான் பேச்சுவார்த்தை 2006ல் தொடங்கியது. தற்போது அது ஈரானுக்கு சாதகமாக முடிவடைந்துள்ளது.

அமெரிக்கா, யுனைடெட் கிங்டம், பிரான்ஸ், சீனா, ரஷ்யா, மற்றும் ஜெர்மனியுடன் இந்த பேச்சுவார்த்தை சுமூகமாக முடிவடைந்துள்ளது.

“வரலாற்று ஒப்பந்தம்” என மற்றவர்களாலும் “வரலாற்று சரண்” என இஸ்ரேல் புலம்பிய வண்ணமும் கூறும் இது நிச்சயமாக ஈரானுக்கு சாதகமான ஒப்பந்தமே.

தொலைக்காட்சி பேட்டியில் அமெரிக்க அதிபர் ஒபாமா இந்த ஒப்பந்ததை மிக பாதுகாப்பானது என வர்ணித்தார். “இந்த ஒப்பந்தம் நம்பிக்கையின் அடிப்படையில் போடப்பட்டதல்ல, இது சரிபார்ப்பின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டது” என கூறினார்.

ஆனால் ஈரான் தலைவர் ரூஹானியோ “ஈரானிய மக்களின் பிரார்த்தனை வெற்றி பெற்று விட்டது. 12 வருடங்களுக்கு பிறகு உலக சக்திகள் ஈரானின் அணு நடவடிக்கைகளை ஏற்றுக் கொண்டன” என அறிவித்தார்.

இஸ்ரேலோ புலம்பலின் உச்ச கட்டமாக இந்த ஒப்பந்தம் எங்களை கட்டுப்படுத்தாது, நாங்கள் தொடர்ந்து எங்களை பாதுகாத்துகொள்வோம் என கூறியது.

http://www.bbc.com/news/world-middle-east-33518524

## ஈரானின் யுரேனிய செறிவூட்டல் நிலையங்கள்

ஈரானில் இரண்டு யுரேனிய செறிவூட்டு நிலையங்கள் உள்ளன. ஒன்று நதன்ஸ் மற்றொன்று ஃபோர்டோ (Natanz and Fordo). இங்கே யுரேனியம் ஹெக்ஸாஃபுளூரைட் வாயு அணு பிரிப்பான்களில் (மையவிலக்கிகளில்) அனுப்பப்பட்டு யு235 என்ற ஐசோடோப்பு களாக பிரிக்கப்படுகின்றன. 3 சதவிகிதம் முதல் 4 சதவிகிதம் வரையிலான தாழ்வு நிலை ஐசோடோப்புகள் அணுசக்தி உலைகளில் பயன்படும். ஆனால் 90 சதவிகிதம் மேல் செறிவூட்டப்படும் ஐசோடோப்புகள் அணு ஆயுதங்களில் பயன்படும். ஈரானிடம் தற்போது 2000 அணு பிரிப்பான்கள் உள்ளன. தற்போதைய ஒப்பந்தப்படி 5060 அணுபிரிப் பான்களை மட்டும் ஈரான் பயன்படுத்தும்.

ஆக இந்த ஒப்பந்தம் வெறும் கண்துடைப்பே. இது ஈரானை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தப் போவதில்லை. மாறாக ஈரானுக்கு விதிக்கப்பட்டிருந்த தடைகள் நீக்கப்படும். இதன் மூலமாக இதுவரை இஸ்ரேலுக்கு ஒத்து ஊதிக் கொண்டிருந்த வல்லரசுகள் தற்போது இஸ்லாத்தை தவிர்த்து விட்டு உலகில் எந்த நிலைபாடும் எடுக்க முடியாது என்ற எண்ணத்திற்கு வந்து விட்டதாகவே தெரிகிறது. அதன் விளைவே இஸ்ரேல் தனிமைப்பட்டு போனது.

அது தனிமைப்பட்டு மட்டும் போகவில்லை. தவிக்கவும் ஆரம்பித்து விட்டது. ஆம், அதனை உருவாக்கியவர்களே அதனை கைவிட்டு விடும் கையறு நிலையே இஸ்ரேலிற்கு.

உலக அரங்கில் பொதுமக்களால் அதிகம் வெறுக்கப்படும் இனமாக யூத இனம் மாறிவிட்ட நிலையில் இஸ்ரேலை கொஞ்சம் கொஞ்சமாக அமெரிக்காவும் மேற்கத்திய நாடுகளும் கைகழுவி வருகின்றன. இது இஸ்லாத்திற்கு கிடைத்த வெற்றி. இந்நாடுகளில் இஸ்லாம் வளர்ந்து வருவதும் இதற்கொரு காரணம்.

மேலும் இஸ்ரேலின் படுபாதக கொலை செயல்களை உலக அரங்கில் எடுத்துக்காட்டி அதனை தனிமைப்படுததி வரும் புறக்கணிப்பு, முதலீடுகள் திரும்ப பெறுதல் மற்றும் பொருளாதார தடைகள் ( Boycott, Disinvestment and Sanctions Movement) இயக்கத்தால் உலக அளவில் இஸ்ரேலின் அடாவடிக்கு எதிராக சிந்தனையோட்டங்கள் உருவாக்கப்படுவதும் மற்றொரு காரணம்.

அனைத்திற்கும் மேலான இறைவனை முன்னிருந்தி மேலை நாடுகளின் அச்சுறுத் தலுக்கு சற்றும் அஞ்சாமல் எதிர்த்து நிற்கும் துணிவோடு சரியான ராஜதந்திரத்தோடு செய்லபாடுகளும் இஸ்ரேல் தனிமைப்பட்டு தவிப்பதற்கு ஒரு காரணம் என்றால் அது மிகையல்ல.

# பைத்துல் முகத்திஸ் (ஜெருசலம்) அல்குத்ஸ் தினம்

## ரமழான் மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமை

**நான் நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களிடம் கேட்டேன் "பூமியில் எது முதல் மஸ்ஜித்?" "புனித மிக்க மஸ்ஜிதுல் ஹரம் (காபா)" என பெருமானார் (ஸல்) அவர்கள் சொன்னார்கள். அடுத்து எது? என நான் கேட்டேன். தொலைவில் உள்ள (மஸ்ஜிதுல் அக்ஸா) என பெருமானார் (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள் . . . .**

**- அறிவிப்பு : அபூதர் (ரலி), முஸ்லிம்**

**பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள் "மூன்று பள்ளிவாசல்களைத் தவிர வேறெங்கும் நன்மையை நாடி பயணம் செய்வது என்பது இல்லை. ஒன்று மஸ்ஜிதுல் ஹராம், மஸ்ஜிதுன் நபவி என்ற என்னுடைய பள்ளிவாசல், பைத்துல் முகத்திஸ் என்ற மஸ்ஜிதுல் அக்ஸா".**

**- ஆதாரம் : புகாரி, முஸ்லிம்**

*பாலஸ்தீனில் - ஜெரூசலத்தில் அமைந்துள்ளது அல் அக்ஸா மஸ்ஜித்.*

*இந்த ஜெரூசலம் (பைத்துல் முகத்திஸ்) அதில் அமைந்துள்ள அல்அக்ஸா மஸ்ஜித் தான் நமது முதல் கிப்லா "தொழுகையில் முன்னோக்குமிடமாக" இருந்தது.*

*பெருமானார் (ஸல்) அவர்களின் பெயரால் நிறுவப்பட்ட மதினா பள்ளி வாசலிலும் கிப்லா இதை நோக்கியே அமைந்திருந்தது.*

*17 மாதங்களுக்குப் பின் பின்வரும் இறைவசனம் கிப்லாவை "காபா"வை நோக்கித் திருப்பிற்று. நபியே "நாம் உம்முகம் அடிக்கடி வானத்தை நோக்கிட காண்கின்றோம். எனவே, நீர் விரும்பும் கிப்லாவின் பக்கம் உம்மைத் திடமாகத்திருப்பி விடு கின்றோம். ஆகவே நீர் இப்போது (மக்காவின்) மஸ்ஜிதுல் ஹராம் பக்கம் உம் முகத்தைத் திருப்பிக்கொள்ளும். (முஸ்லிம்களே) நீங்கள் எங்கிருந்தாலும் உங்கள் (முகங்களை) அந்தப் பக்கம் திருப்பிக் கொள்ளுங்கள்."*

### பைத்துல் முகத்திஸ் - குறுகிய வரலாறு

*விண்ணேற்றம் (மிஹ்ராஜ்) என்ற வரலாற்று சிறப்புமிக்க பயணத்தின் மையப்பகுதி அல் அஸ்கா மஸ்ஜித்தான். (காண்க : அல்குர்ஆன் 17:1)*

*கி.பி. 637 ஜெரூசலத்தை கலீபா உமர் (ரலி) மீட்டு விண்ணேற்ற இடத்தில் மஸ்ஜிதுல் அக்ஸாவை கட்டினார்கள்.*

*705 அப்துல் அல் மாலிக் அவர்களாலும் தொடர்ந்து அவரது மகனாலும் விரிவாக்கம் செய்யப்பட்டது.*

*746 நில நடுக்கம் ஒன்று அதை இடித்துவிட்டது.*

*754 அப்பாசிய கலீபா அல்மன்சூர் அவர்கள் அதனை கட்டி எழுப்பினார்கள்.*

*780 அல்மஹ்தி அவர்கள் அதனை அழகுப்படுத்தினார்கள்.*

*1033 நிலநடுக்கம் ஒன்று அதனை மீண்டும் குலைத்தது.*

*1035 பாத்திமத்து கலிபா அல் அஸ்ஸாஹிர் மீண்டும் அக்ஸாவை கட்டினார் கள். அதுவே இப்போதும் நின்று கொண்டி ருக்கிறது.*

*1095 சிலுவைப் போர்களை தொடங்கினார்கள் கிறிஸ்தவர்கள், போப் அர்பன் II - இன் தலைமையில்.*

*1099 பைத்துல் முகத்திஸ் (ஜெரூசலம்) அல் அக்ஸா பள்ளிவாசல் இவை கிறிஸ்தவர் களின் கைகளுக்குச் சென்றது. 90 வருடங்கள் கிறிஸ்தவர்கள் அல் அக்ஸா பள்ளிவாசலை கிருஸ்தவ ஆலயமாகவும் உல்லாச மாளிகையாகவும் பயன்படுத்தினார்கள்.*

*1187 சுல்தான் சலாஹுதீன் அய்யூபி அவர்கள் ஜெரூசலம் அல் அக்ஸா ஆகிய வற்றை மீட்டார்கள். மனித மாண்பை நிலை நாட்டினார்கள்.*

*1917 கிலாஃபத் என்ற முஸ்லிம்களின் உலக தலைமை இராணுவ பலத்தை இழந்தது. அதே ஆண்டில் ஆங்கிலேயே கிறிஸ்தவர்கள், யூதர்களுக்கு ஒரு தனி நாடு ஒன்றை முஸ்லிம்களின் பாலஸ்தீனத்தில் உருவாக்கி தருவதாக உறுதி தந்தார்கள்.*

*1918 கிறிஸ்தவ நாடுகளின் ஆதிக்கத்தில் இருந்த உலக நாடுகளின் சபை (லீக் ஆஃப் நேஷன்ஸ்) அல் அக்ஸா இருந்த பாலஸ்தீன நிலப்பரப்பை ஆங்கிலேயரிடம் ஒப்படைத் தது. உலகெங்கிலும் வாழ்ந்து கொண்டிருந்த யூதர்களை அழைத்து வந்து முஸ்லிம்களுக்குச் சொந்தமான*

பாலஸ்தீன பகுதிகளில் குடி யமர்த்தினார்கள்.

1922 உலக முஸ்லிம்கள் பாலஸ்தீன "சுப்ரீம் கவுன்சில்" என்றொன்றை உருவாக்கி அல் அக்ஸா பள்ளிவாசலை புனரமைத் தார்கள். இதற்கு இந்திய முஸ்லிம்கள் பெரும் தொகையை தந்தார்கள். **(விரிவான தகவல் களுக்கு பார்க்க வைகறை வெளிச்சம் மாத இதழ் செப்டம்பர் 2009)**

## யூதர்களின் கெடுபிடிகள்

1931-1935 ஆரிய கிறிஸ்தவரான ஹிட் லரால் துரத்தப்பட்ட யூதர்கள், பாலஸ்தீனத் தில் ஆங்கிலேயர்களால் திட்டமிட்டு குடியமர்த்தப்பட்டார்கள்.

1948 - யூதர்களுக்கு ஒரு நாடு, தீவர வாதங்களின் வழி "இஸ்ரேல்" உருவாக்கப் பட்டது. அப்போது (1948-ல்) 7,32,000 முஸ்லிம்கள் அகதிகளாக ஆக்கப்பட்டார்கள்.

1967 முஸ்லிம்களுக்கும் யூதர்களுக்கும் நடந்த போரில் அல் அக்ஸா மஸ்ஜித் வீற்றிருக்கும் பைத்துல் முகத்திஸ் (ஜெரூசலம்) ஜூலை 7ஆம் நாள் யூதர்களின் கைகளில் சிக்கியது. அன்று முதல் இன்று வரை பைத்துல் முகத்திஸ் நகருக்குள் நுழைவதை யூதர்கள் கட்டுப்படுத்தி வருகின்றார்கள். அல் அக்ஸா மஸ்ஜித் "அல் அக்ஸா வக்ப்" - கீழ் இருக்கின்றது. ஆனால் பைத்துல் முகத் திஸ்க்குள் நுழைவது யூதர்களின் கட்டுப்பாட்டிலிருக்கின்றது. அதே ஆண்டில் (ஆகஸ்ட்) ஸலோமாகோரன் என்ற யூத மத குரு 20 யூத இராணுவ வீரர்களோடு பூஜை செய்ய அல் அக்ஸா மஸ்ஜித்-ல் நுழைந்தான். முஸ்லிம்கள் அதை தடுத்தார்கள்.

1969 - மஸ்ஜிதின் ஒரு பகுதியை யூதர்கள் எரித்தார்கள்.

1982 - பால் லெஸ்ரார் என்ற யூதன் வெடிகுண்டாக உள்ளே நுழைந்தான். முஸ்லிம்கள் அவனை தடுத்தார்கள். மஸ்ஜிதை காப்பாற்றினார்கள். பலர் ஷஹீதானார்கள்.

1983 - 46 யூதர்கள் மனித வெடிகுண்டாக மஸ்ஜிதுல் நுழைய முயற்சி செய்தார்கள். முஸ்லிம்கள் தடுத்து அல் அக்ஸாவை காப்பாற்றினார்கள்.

1984 - ஆகஸ்ட் 7-ல் 130 கிலோ எடை கொண்ட வெடிகுண்டு ஒன்று மஸ்ஜிதுல் அக்ஸாவின் கீழ் வைக்கப்பட்டது. முஸ்லிம்கள் வெடிக்கும் முன் அகற்றினார்கள். அதே ஆண்டு டிசம்பரிலும் இதுவே நடந்தது.

1986 - ஈகை பெருநாளின் போது யூதர்கள் உள்ளே நுழைந்தார்கள். தடுத்தார் கள் முஸ்லிம்கள். அதனால் ஆயிரக் கணக்கான முஸ்லிம்கள் ஷஹீதானார்கள். அதே ஆண்டில் சக்தி வாய்ந்த வெடிகுண்டு ஒன்று அக்ஸாவில் கண்டுபிடிக்கப்பட்டு முஸ்லிம்களால் அகற்றப்பட்டது.

1990 - ஆகஸ்ட் 20-ம் நாள் ஒரு யூதன் இரண்டு ஏவுகணைகளை பள்ளிவாசலை நோக்கி ஏவினான். பள்ளிவாசல் சிறிது சேதம் அடைந்தது. அதே ஆண்டு அக்டோபரில் சாலமோன் கோயிலுக்கு அடிக்கல் நாட்டிட யூதர்கள் அக்ஸா பள்ளிவாசலுக்குள் நுழைந்தார்கள். தடுத்தார்கள் முஸ்லிம்கள். ஷஹீதானார்கள் பலர்.

1991 - அகழ்வாராய்ச்சி என்ற பெயரில் பள்ளிவாசலை தோண்டி அஸ்திவாரத்தை பலவீனப்படுத்தினார்கள்.

1992 - அமெரிக்காவில் வாழ்ந்த யூதர்கள் (1990-ல் நாட்டிய) கல்லை பூஜை செய்ய உள்ளே புகுந்தார்கள். தடுத்தார்கள் முஸ்லிம் கள். பலர் ஷஹீதானார்கள்.

2000 யூத தீவிரவாதி ஏரியல் ஷரோன் ஆயிரக்கணக்கான யூதர்களோடு பள்ளி வாசலுக்குள் நுழைந்தான். முஸ்லிம்கள் தடுத்தார்கள். பலர் ஷஹீதானார்கள். அது முதல் ஒவ்வொரு ஜூலை 31-ம் நாளும் யூதர்கள் சாலமோன் ஆலயத்தின் நினைவு நாள் என்று அல் அக்ஸா மஸ்ஜிதுக்குள் புகுந்து கபளீகரங்கள் செய்கின்றார்கள். முஸ்லிம்கள் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் தடுக் கின்றார்கள். பலர் ஷஹீதாகின்றார்கள்.

2009 - ஜூலை 31-ம் நாளும் இதைப் போல் மஸ்ஜிதுல் அக்ஸாவில் புகுந்தார்கள். ஒவ்வொரு முறை இவர்கள் புகும் போதும் முஸ்லிம்கள் பலர் தங்கள் உயிரை தந்து இவர்களை தடுக்கின்றார்கள்.

2010-ல் எகிப்தில் ஏற்பட்ட இஸ்லாமிய எழுச்சிக்கு பின் பாலஸ்தீனுக்கும், எகிப்திற்கும் இடையே எழுப்பப்பட்டிருந்த தடுப்புச் சுவர்கள் அகற்றப்பட்டன. இதனால் பாலஸ்தீன முஸ்லிம்களுக்கிருந்த நெருக் கடிகள் பெருமளவில் குறைந்தன. குறிப்பாக மருத்துவ வசதிகளும், மருந்துகளும் கிடைத் உதன. இப்போது உள்ள இராணுவ ஆட்சியில் இந்த நிவாரணம் தடை செய்யப் பட்டுவிட்டது.

ஆனால் இஸ்ரேல் ஜெரூசலத்தின் ஒரு பகுதியை ஆக்கிரமித்து, ஒரு தடுப்புச் சுவரை எழுப்பியுள்ளது. முஸ்லிம்களுக்கு சொந்த மான இடங்களை ஆக்கிரமித்து, அங்கு யூதர்களை குடியமர்த்தி வருகின்றது. இதற்கு அமெரிக்கர்களும், ஐரோப்பிய நாடுகளும் தொடர்ந்து உதவி செய்கின்றன. ஆனால் இறுதி

வெற்றியை அல்லாஹ் முஸ்லிம் களுக்கே வாக்களித்துள்ளான். (அல்ஹம்து லில்லாஹ்)

38 ஆண்டுகளாக உலக முஸ்லிம்களின் கவனத்தை அல்குத்ஸ் இன் பக்கம் திருப்பி வருகின்றோம். இன்று உலகமெங்கும் இந்த தினம் பொதுமக்களின் கவனத்தை கவர்ந்து வருகின்றது. இதனால் இந்த நாளில் நடக்கும் நிகழ்ச்சிகளை தடை செய்திட வேண்டும் என யூதர்கள் போராடி வருகின்றார்கள்.

## அல் அக்ஸா மஸ்ஜிதுக்கு தொடரும் ஆபத்து

அன்றைய நாள் தொட்டே யூதர்கள் இந்த பைத்துல் முகத்திஸிலுள்ள அல் அக்ஸா மஸ்ஜித்-ஐ தங்களுடையதாக ஆக்கிக் கொள்ள பல்வேறு தீவிரவாத செயல்களையும் செய்து வருகின்றார்கள். அல் அக்ஸா பள்ளிவாசல் இருந்த இடத்தில்தான் தங்களுடைய ஆலயங்கள் இருந்தன என்றும், தங்களுடைய ஆலயத்தை இடித்துவிட்டுத் தான் அந்த இடத்தில் பள்ளிவாவலை எழுப்பி இருக்கின்றார்கள் என்றும், பொய்களையும், புனைந்துரைகளையும் பரப்பிவருகின்றார்கள். இஸ்லாத்தின் இரண்டாவது கலீபாஃ, உமர் இப்னு அல் ஹத்தாப் (ரழி) அவர்கள்தாம். கி.பி. 637 ஆம் ஆண்டு அல் அக்ஸா மஸ்ஜித் -ஐ கட்டினார்கள். அந்த இடம் குப்பை கூளங்கள் நிறைந்த இடமாகவே இருந்தது. அங்கு எந்த ஆலயமும் இருக்கவில்லை. இதற்கு உமர் (ரழி) அவர்களுடன் அந்த இடத்திற்குச் சென்ற கிறிஸ்தவ பாதிரி சாட்சி. ஆனால் இன்றைக்கு யூதர்கள், ஒரு கதையைக்கட்டி விடுகின்றார்கள். அது அன்று நின்றிருந்த எங்கள் ஆலயத்தை இடித்துவிட்டுத்தான் "அல் அக்ஸா மஸ்ஜித்" நிறுவப்பட்டிருக்கின்றது என்றொரு பொய்யைப் பரப்பி வருகின்றார்கள்.

இந்தப் பொய்யை உண்மையாக்கும் வகையில் புனைந்துரைகளை ஆய்வுகளாக வெளியிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். நூல்களையும் வெளியிட்டுக் கொண்டிருக் கின்றார்கள்.

இதுவல்லாமல் தங்களுக்கே உரிய வன்முறைகளையும் கட்டவிழ்த்து விட்டு வருகின்றனர். "அல் அக்ஸா" பள்ளிவாசலை அகழ்ந்து பார்த்திட வேண்டும் என மஸ்ஜித் -இன் - அஸ்திவாரத்தை தோண்டிடத் தொடங்கினார்கள். முஸ்லிம்கள் தங்கள் உயிரைத் தந்து காப்பாற்றினார்கள்.

ஜூலை 17 2014 இல் இப்போதைய தலைமை யூத மதகுரு யஹீதா கிளிக் என்பவர், 46 யூதர்களோடு சேர்ந்து பள்ளிவாசலில் பூஜை நடத்தச் சென்றான். தடுத்தார்கள் முஸ்லிம்கள், பல முஸ்லிம்களைக் கொலை செய்தார்கள். இந்த யூத மதகுரு தான் அல் அக்ஸா மஸ்ஜித் இருக்கு மிடத்தில் யூத ஆலயம் எழுப்புவதற்காக நிர் மானிக்கப்பட்ட அறக்கட்டளையின் தலைவர். Temple Mount Heritage Foundation என்பதுதான் அந்த அறக்கட்டளையின் பெயர்.

இப்போது 50 வயதிற்கு மேற்பட்ட பாலஸ்தீன முஸ்லிம்களை மட்டுந்தான் அக்ஸா பள்ளிவாசலுக்குள் அனுமதிப்போம் எனக் கூறியுள்ளார்கள். ஜனவரி 1, 2014 முதல் ஜூன் 2, 2014 வரை 6311 யூதர்கள் அல் அக்ஸா மஸ்ஜித்க்குள் நுழைந்து கலகங்களை நிகழ்த்தியுள்ளார்கள்.

அண்மையில் தாருல் இஸ்லாம் டிரஸ்ட் இன் பொருளாளர் பேராசிரியர் இல்யாஸ் ரியாஜி அவர்கள் பைத்துல் முகத்திஸ்க்குச் சென்றிருந்தார். அங்குள்ள மக்களை சந்தித்து உரையாடினார்கள். அப்போது "உலக முஸ்லிம்கள் இது தங்களின் முதல் கிப்லா என்பதை உணர்ந்து அதிகமதிகம் இங்கு வந்து செல்ல வேண்டும். அப்போதுதான் இவை நமக்குச் சொந்தம் என்று உலகறியச் செய்ய முடியும். இதற்காக நாங்கள் உங்களிடம் பணத்தையோ, உயிரையோ கேட்கவில்லை. உங்களின் வருகையே நீங்கள் எங்களுக்குச் செய்யும் மிகப் பெரிய உதவி" என்று நெஞ்சைத் தொடும் அளவில் கூறினார்கள்பாலஸ்தீன மக்கள்.

## 2014 -2015

2014 அக்டோபர் மாதம் 15 நாள்களுக்கு அக்ஷா மஸ்ஜித் -ஐ மூடிவைத்தார்கள் யூதர்கள். யாரையும் பள்ளிவாசலுக்குள் விடமாட்டோம் என அடம்பிடித்தனர்.

முஸ்லிம்கள் ஐவேளை தொழுகையை நிறைவேற்றியே தீருவோம் என தொழுகையை நிறைவேற்றினார்கள். பலர் கைதானார்கள்.

பின்னர் - யூதர்கள் இறங்கி வந்தார்கள். 50 வயதுக்க மேற்பட்டவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள் என்றார்கள்.

இப்போது அந்த நிபந்தனையையும் கைவிட்டுவிட்டார்கள்.

சென்ற ரமழானில் ஹமாஸ் - இன் கைகளில் மிகப் பெரியதொரு தோல்வியைச் சந்தித்தார்கள் யூதர்கள்.

அதன்பின் பாலஸ்தீனில் ஒரு பகுதியை பாலஸ்தீன முஸ்லிம்களின் தனி நாடாகப் பிரித்துத் தந்திட வேண்டும் என உலக நாடுகள் குரல் கொடுக்கத் தொடங்கிவிட்டன.

இது ஜெருசலம் - பைத்துல் முகத்திஸ்-ஐ மையமாக கொண்டு அகண்ட இஸ்ரேலை

உருவாக்கிடும் யூதர்களின் திட்டத்தைத் தவிடுப்பொடியாக்கி வருகின்றது. இதனால் அல் அக்ஸா விவகாரத்தைப் பெரிதாக்கிட இஸ்ரேல் விரும்பவில்லை.

அப்படி பெரிதாக்கினால் பாலஸ்தீன முஸ்லிம்களுக்கு தனி நாடு திட்டம். இன்னும் உலக நாடுகளால் வேகப்படுத்தப்படும். இதற்கு அஞ்சியதால் இப்போது கெடுபிடிகள் குறைவு.

கடந்த ஜூலை 10 ஆம் நாள் (2015) உலக முஸ்லிம்களின் பிரதிநிதிகள் மஸ்ஜித் அக்ஸாவில் இஃப்தார் நிகழ்ச்சி ஒன்றை நடத்தி முடித்தார்கள். அன்றே அக்ஸா தினம் அறிவிக்கப்பட்டது.

துஆ செய்வோம் யூதர்களின் ஆக்கிரமிப்பிலிருந்து அல் அக்ஸா விடுதலை அடையும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

இன்ஷா அல்லாஹ்!

முஸ்லிம்கள் அதிகம், அதிகம் (ஜெரூசலம்) அல் அக்ஸா மஸ்ஜித் ஆகியவற்றிற்கு பயணம் செய்து அந்த மக்களின் நம்பிக்கையை வலுப்படுத்தி ஓர் ஒற்றுமை உணர்வைக் காட்டிட வேண்டும்.

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்,

***மக்கா ஹராம் ஷரீப்பில் தொழுதால் ஒரு லட்சம் தொழுகையின் நன்மைகள் கிடைக்கும். பெருமானார் (ஸல்) அவர்களின் மஸ்ஜிதில் - மஸ்ஜ ூதுன் நபவியில் தொழுதால் 1,000 தொழுகையின் நண்மைகள் கிடைக்கும். அல் அக்ஸாவில் தொழுதால் 500 தொழுகையின் நண்மைகள் கிடைக்கும்.***

**(ஆதாரம் : பஸ்ஸார் 4,142 ; பத்ஹுல் ஃபாரி – புகாரி நபி மொழி தொகுப்பின் விளக்கம்)**

பாலஸ்தீன முஸ்லிம்களை நமது துஆக்களில் நினைவு கொள்வோம். உங்கள் துஆக்களில் எங்களையும் நினைவு கூருங்கள்.

## இஸ்ரேலிய பிரதமர் நித்தியின்ஹூவின் ஈத் முபாரக்

சென்ற ரமழான் மாதத்தில் வாங்கிய அடியில் ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து 'இஸ்ரேல்' என்ற யூதநாடு இன்னும் மீட்சிப் பெறவில்லை. இந்த ரமழானில் பாலஸ்தீனி ஆதாரிட்டியின் தலைவர் முஹம்மத் அப்பாஸ்-ஐ தொலைபேசியில் அழைத்து பெரு நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார். அதில்,

## ஈதுல்ஃபித்ர் வாழ்த்துக்கள்.

இஸ்ரேலிய குடி மக்களாகிய நாங்கள் அமைதியையே விரும்புகின்றோம். நாங்கள் இந்த வட்டாரத்தின் பாலஸ்தீன் வட்டாரத் தின் ஸ்திர தன்மையையும் அமைதியையும் காத்திட உழைத்திடுவோம் எனக் குறிப் பிட்டிருந்தார்.

**இந்தியன் எக்ஸ்பிரஸ் - 19.7.2015**

இராணுவ பலத்தில் பாலஸ்தீன முஸ்லிம்களை இனி அடிமைப்படுத்திட இயலாது, என்பதை இஸ்ரேலிய பிரதமர் நெதன்யாஹூ நன்றாகவே உணர்ந்திருக் கின்றார் என்றே சொல்லிட வேண்டும். ஆனால் யூதர்களோடு கைக்கோர்த்து நிற்கும் சவூதி அரேபியா, பாலஸ்தீனர்களுக்கு ஈதுல் ஃபிதர் வாழ்த்துக்களைச் சொல்லவில்லை.

## பாலஸ்தின முஸ்லிம்களுக்கு தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷங்ன செய்த உதவிகள்!

2005/2006களில் ஒன்பதரை லட்சம் ரூபாய் நிதி உதவி. இஃது மருத்துவ உபகரணங்களாக மாற்றப்பெற்று அனுப்பப் பட்டது.

2009/2010 களில் அகதிகளாக இந்தியா வந்தவர்களுக்கு டெல்லியைச் சார்ந்த Charity Alliance உடன் இணைந்து உதவிகள். பின்னர் ஐக்கிய நாடுகள் சபை அகதிகளாக ஏற்று உலகிலுள்ள பல நாடுகளுக்கும் அவர்களை அனுப்பியது. இதன் வழி அவர்கள், பிரச்னை தீர்ந்தது! அவர்கள் டெல்லியிலிருந்த வரை நாம் அவர்களுக்குத் உதவிகளைத் தொடர்ந்து செய்து வந்தோம்! அல்ஹம்ந்துலில்லாஹ்!

## நன்றி! நன்றி!!

அன்பார்ந்த சகோதரர்களே!


தாருல் இஸ்லாம் நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம், அன்பகம் கல்விக் கூடம், ஆகியவற்றின் தொண்டுகளுக்காக உங்கள் உதவிகளை நாடி எங்கள் செயல் மழவர்கள் வந்தார்கள். உங்கள் உதவிகளை வழங்கியும், அவர்களை உற்சாகப்படுத்தியும் பெரும் சேவை செய்தீர்கள். ஜஸாக்கல்லாஹ்!

அல்லாஹ் உங்களுக்கு எல்லா வளங் களையும் வழங்கிட துஆ செய் கின்றோம்.

தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட், வைகறை வாசகர் வட்டம், நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம் சார்பில் எங்கள் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். எங்களை உங்கள் துஆக்களில் நினைவு கூருங்கள்.

தொடர். . .

## முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன?



# துருக்கியர்களின் உயர்வும், தாழ்வும்

## - அபுல் ஹசன் அலீ நத்வீ

### மொழிபெயர்ப்பு:
### அஹ்மது ஜலாலுத்தீன் நத்வீ

இதனை எதிர்த்து ஐரோப்பிய உலகமே இதற்குமுன் கண்டிராத பெரிய Navyஐ (கடற்படையை) உருவாக்கியது. அதில் போர்ச்சுகல், மால்ட்டா, ஸ்பெயின் போன்றவை எல்லாம் அதில் ஒன்றுகூடி எதிர்த்தனர். அப்போர் (ஹிஜ்ரி 945) கி.பி. 1547 ஆம் ஆண்டு நடந்தது. ஆனால் அவர்களால் உதுமானியர்களை எதுவும் செய்ய முடியவில்லை.

உதுமானிய சாம்ராஜ்யம் மாமன்னர் சுலைமான் அல்கானூனியின் காலத்தில் கடற்படை, காலாட்படையில் யாரும் நெருங்க முடியாத பலத்தையும், அரசியல் ஆன்மீகத்தில் ஆளுமையின் உச்சியில் இருந்தனர்.

மாமன்னர் சுலைமான் ஆட்சியில் உதுமானிய சாம்ராஜ்ஜியம் வடக்கே தூனா, ஸாலா வரையில் தெற்கே நைல் நதி முகத்துவாரத்திலிருந்து இந்தியப் பெருங்கடல் வரையிலும் கிழக்கே கப்காஸ் மலைத்தொடர் முற்றிலுமாகவும் மேற்கே அட்லஸ் மலைத் தொடர் முழுவதுமாக இருந்தது. இதன் அளவு நான்கு இலட்சம் சதுர மைல்களை விட அதிகமாகும்.

உதுமானியர்களின் நேவி (கடற்படை) மட்டும் இரண்டாயிரம் போர்க்கப்பல்கள் இருந்தன. அதன் கிழக்குப் பகுதி அஸாக், கருங்கடல், செங்கடல், பாரசீகம் வரை அவரின் ஆட்சிக்கு உட்பட்டு இருந்தது.

ரோமாபுரி அல்லாமல் பழைய நகரங்கள் யாவும் உதுமானிய சாம்ராஜ்ஜியத் தில் இணைந்திருந்தது. முழு ஐரோப்பாவும் அவர்களுக்கு அஞ்சி நடுங்கியது. ஐரோப்பா மன்னர்கள் யாவரும் உதுமானிய சாம்ராஜ் ஜியத்தின் ஆளுகைக்கும் கட்டுப் பட்டு இருந்தனர். அதனால் ஐரோப்பியர்கள் துருக்கியர் வந்து விட்டால் அவர்களுக்குப் பயந்து கௌரவம் அளித்து மாதா கோயிலின் மணியோசையைக் கூட எழுப்புவதில்லை.

அதனால் தான் மாமன்னர் முஹம்மது அப்பாத்திகுவின் மரணச் செய்தி கேட்டவுடன் அந்நாளை பெருநாளாகக் கொண்டாடும்படி போப்பாண்டவர் உத்தரவிட்டார். அத்துடன்

மூன்று நாட்கள் தொடராக நன்றிப் பிரார்த்தனையை கூட்டும்படியும் கட்டளை யிட்டார்.

ஆனால் இதே உதுமானிய சாம்ராஜ் ஜியத்துக்கு ஐரோப்பா பிற்காலத்தில் பெரிய ஆபத்தாக உதுமானியர்களுக்கு எதிரான வலிமையான சக்தியாக உருவெடுத்தது.

அறிவியல் கண்டுபிடிப்புகள் விஞ்ஞான அற்புதங்களை உருவாக்கி முன்னேறிச் செல்ல வேண்டுமென்ற துடிப்பும் ஆர்வமும் உழைப் பும் அவர்களை விண்ணுக்கு அழைத்துச் சென்றது.

இதுபோன்ற ஆதங்கம், வெறி விஞ்ஞான அறிவியல் எல்லையற்ற மோகம் மட்டும் துருக்கியர்களுக்கு இக்கால கட்டத்தில் இருந்திருந்தால் இந்தக் கிருத்துவ சமூகத்தை அறிவியல் விஞ்ஞானத்தில் பின்னுக்குத் தள்ளி, உலகத்தில் தலைமை பீடத்தில் ஜொலித்துக் கொண்டிருப்பார்கள். மக்களை சத்தியத்தின் பக்கமும், நேர்வழியின் பக்கமும் அழைத்துச் சென்றிருப்பார்கள்.

இந்த ஐரோப்பியர்கள் உலகத் தலைமையை பிடித்து தங்களது அறிவியலை யும், விஞ்ஞானத்தையும் பயன்படுத்தி அழிவுகளையும், நாசத்தையும், அபாயங்களை யும் ஏற்படுத்தி இருக்கிறார்களே, அது நடக்காமல் போயிரக்கும்.

## துருக்கியர்களில் ஒழுக்க வீழ்ச்சியும் - போர்க்கலையிலும் அறிவாராய்ச்சியிலும் ஏற்பட்ட தேக்கமும்

துருக்கியர்கள் வீழ்ச்சியை நோக்கிச் செல்ல ஆரம்பித்ததை, துருக்கியர்களுக்கு ஏற்பட்ட துரதிர்ஷ்டம் எனச் சொல்வதை விட முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட துரதிர்ஷ்டம் எனச் சொல்லலாம். முன் சென்ற சமூகங்களுக்கு ஏற்பட்ட நோய்கள் இவர்களைத் தாக்க ஆரம்பித்தன. பொறாமை, வஞ்சகம், அரசர்கள் ஒருவருக்கொருவர் செய்து கொண்ட சதிகள், அரசர்களின் சர்வாதிகாரம், அநியாய அட்டூழியங்கள், வளர்ப்பு முறையில் ஏற்பட்ட சீர்கேடு, ஒழுக்கச் சிதைவுகள், அதிகாரிகள் செய்த மோசடிகள், மக்களை ஏமாற்றுதல், மக்கள் ஆடம்பர களி யாட்டங்களில் மூழ்கிப் போதல் போன்ற வீழ்ச்சி அடைந்த சமூகங்களுக்கு ஏற்பட்ட எல்லா ஒழுக்கச் சிதைவுகளும் ஏற்பட்டன. இவை குறித்து துருக்கிய வரலாற்றுப் புத்தகத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. அவர்களுக்கு ஏற்பட்ட மோசமான பாதிப்பு கல்வி ஞானக் கலையில் ஏற்பட்ட தேக்கமும், யுத்தக்கலையில் ஏற்பட்ட தேக்கமுமாகும். இராணுவத்தை காலத்திற்கேற்ப ஒழுங்கு முறைப்படுத்தாது மற்றொரு காரணமாகும். அல்லாஹ்வின் உடை கட்டளையை மறந்தார் கள்.

பெருமானாரின் ஞானம் என்பது முஸ்லிம்களிலிருந்து காணாமல் போய் விட்டப் பொருள். அது எங்கு கிடைத்தாலும் அதனைப் பெறுவதற்கு முஸ்லிம்களே உரித்தானவர்கள் என்ற கட்டளையை மறந்ததாகும். முஸ்லிம்களின் அரசியல் மற்றும் பூகோள தலைமைக் கேந்திரம் அமைந்திருக்கும் ஆபத்தான நிலைமைக்காக இவ்விரு கட்டளைகளையும் முஸ்லிம் பேணி இருக்க வேண்டும்.

மணிக்கட்டைச் சுற்றி வளையல் இருப்பது போன்று இவர்களை ஐரோப்பிய நாடுகள் சூழ்ந்திருந்தன. மாபெரும் இஸ்லாமியத் தளபதி அம்ருபின் ஆஸ் (ரலி) எகிப்து நாட்டு மக்களுக்குக் கூறிய உபதேசத்தை இவர்களும் தங்களுக்குரிய பெரிய எச்சரிக்கையாக எடுத்திருக்க வேண்டும். “உங்களைச் சூழ எதிரிகள் அதிகமாகிவிட்டார்கள். அவர்களின் இலக்குகள் உங்கள் மீதும் உங்கள் நாட்டின் மீதும் ஒரே குறியாக இருப்பதால், இறுதிநாள் வரை நீங்கள் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். இந்த உபதேசத்தை துருக்கி மக்கள் விட்டு விட்டார்கள். காலமோ முன்னேறிச் சென்று கொண்டே இருந்தது. அவர்களோ முன்னர் இருந்த இடத்தை விட்டும் அகலவில்லை. எல்லாத்துறைகளிலும் ஐரோப்பியர்கள் முன்னேறிப் பறந்தனர். இவர்களோ பின் தங்கி விட்டார்கள்.

**தொடரும். .**

# தஃப்ஹீமுல் குர்ஆன்



## இல்யாஸ் ரியாஜி

**அல்லாஹ் தனக்கென ஒரு குழந்தையை (பெற்று) எடுத்துக் கொண்டான் என்று அவர்கள் கூறுகின்றனர். அப்படியல்ல. அவன் தூயவன். வானங்களிலுள்ளவையும் பூமியிலுள்ளவையும அவனுக்கே உரியவை. அவையனைத்தும் அவனுக்குப் பணிகின்றன.**

**அவன் வானங்களையும், பூமியையும் முன் மாதிரியின்றிப் படைத்தவன். ஏதேனுமொன்றைச் (செய்திட) அவன் தீர்மானித்துவிட்டால், அதற்காக அவன் சொல்வதெல்லாம் "ஆகுக" என்பதுதான். உடனே அது ஆகிவிடுகிறது.**

**அறியாதவர்கள், "அல்லாஹ் எங்களிடம் பேசக்கூடாதா? அல்லது எங்களுக்கு ஏதேனுமொரு சான்று வரக்கூடாதா?" என்று கேட்கிறார்கள். இவ்வாறே இவர்களுக்கு முன்னிருந்தவர்களும் இவர் கேட்டது போன்றே கேட்டனர். அவர்களின் உள்ளங்களெல்லாம் ஒரே மாதிரியாகவே இருக்கின்றன. உறுதியான நம்பிக்கை கொள்ளும் சமுதாயத்துக்கு நாம் சான்றுகளை விளக்கிவிட்டோம்.**

**(2:116,117,118)**

### 116,117 வசனங்களின் விளக்கம்

*பேரறிஞர் ஷஹீது ஸய்யித் குதுப் (ரஹ்) கூறுகின்றார் : "அல்லாஹ் தனக்கு ஒரு குழந்தையை வைத்துக் கொண்டான் என்ற அநியாயமான குழப்பமான சொற்றொடர் ஏதோ கிறிஸ்தவர்களுக்கு மட்டுமானதல்ல.*

*அவர்கள் ஈஸா நபியை அல்லாஹ்வின் மகன் என்கிறார்கள் என்றால் யூதர்கள் உசைர் (அலை)வை அல்லாஹ்வின் மகன் என்கின்றனர். இணைவைப்பவர்கள் (மலக்) வானவர்களை அல்லாஹ்வின் பெண் மக்கள் என்கின்றனர்.*

*இவற்றையெல்லாம் இவ்வசனம் இங்கே விரிவாகக் கூறவில்லை. ஏனெனில் அன்றைய அரேபிய தீபகற்பத்தில் இஸ்லாம் எதிர் கொண்ட (யூத, கிறிஸ்தவ, இணைவைப்பு) ஆகிய மூன்று பிரிவுகள் குறித்தும் போகிற போக்கில் மூடலாக கூறிவிடுவதே இவ்வசனத்தின் நோக்கம். எனவே விரிவாகக் கூறவில்லை.*

*இதில் ஆச்சரியம் என்னவென்றால் அன்று இஸ்லாம் எதிர் கொண்ட அவை இஸ்லாத்தை முழுமையாக எதிர்த்துக் கொண்டேயிருக்கின்றன இன்றைய காலத்திலும்.*

சர்வதேச அளவில், ஜியோனிசம் சிலுவைக் கோட்பாடு (கிறிஸ்தவம்) கம்யூனிசம் என்ற வடிவில் வந்துள்ளன அவை.

இந்தக் கம்யூனிசம் அக்காலத்திலிருந்த இணை வைப்பவர்களை விடவும் கடும் இறை மறுப்பில் திளைத்திருக்கிறது.

ஆக, 'அல்லாஹ்வுக்குப் பிள்ளைகள் உண்டு என்ற கூற்றில் யூதர்கள் கிறிஸ்தவர்கள் இணை வைப்பவர்கள் அனைவரும் சமமே' என்று அவர்கள் எல்லோரையும் ஒரே நேர்கோட்டில் வைத்து இவ்வசனம் பேசுவதன் மூலம் யூதர்களும் கிறிஸ்தவர்களும் பேசி வந்த ஒரு போலியான வாதம் வீழ்ந்துவிட்டது.

'நாங்களே நேர் வழிபெற்ற சமுதாயம்' என்று அவர்கள் பேசிவந்தனரே அது பொய். இதோ அவர்கள் இணை வைப்பவர்கள் போன்றவர்களே!

இங்கே 116வது வசனத்தில் அல்லாஹ்வைப் பற்றி அவர்கள் கொண்டிருககும் தவறான கற்பனையைக் கூறிவிட்டு அடுத்து (அதை மறுக்கும் விதமாக) அல்லாஹ்வுக்கும் அடியானுக்குமிடையிலான உறவு (தந்தை, மகன், உறவு அல்ல) படைத்தவனுக்கும் படைக்கப்பட்டவர் களுக்கும் இடையிலான உறவே என விளக்குகிறது.

இதற்கு இடையில் அவசரமாக ஒருவார்த்தை கூறப்படுகிறது. (சுப்ஹானஹ்) "அவன் தூயவன்". இந்த தவறான கற்பனைகளுக்கு அப்பாற்பட்டவன் என்று கூறிய பிறகுதான் அவர்களின் தவறான கற்பனைக்கு மறுப்பு இடம் பெறுகிறது.

கடவுள் பற்றிய இஸ்லாத்தின் பார்வை இதுதான் : "படைத்தவன் வேறு. படைப்புக் கள் வேறு. இருவரும் ஒன்றல்ல. படைத்தவன் தன்னிகரற்றவன் நிகர் கூறமுடியாதவன்."

எனவே "வஹ்தத்துல் உஜூத்" என்று முஸ்லிமல்லாதவர்கள் கூறும் கோட்பாடு இஸ்லாத்தில் இல்லாத ஒன்றே.

அதாவது, இந்த உலகமும் அதைப் படைத்தவனும் வேறு வேறு அல்ல. இரண்டும் ஒன்று தான். அல்லது இவ்உலகைப் படைத்தவன் தான் உலகின் வடிவில் காட்சி தருகிறான். அல்லது உலகைப் படைத்தவன் எங்கும் பரவி இருக்கிறான். அல்லது இதேப் போல எப்படிக் கூறினாலும் சரி அதுதான் "வஹ்தத்துல் உஜூத்" எனும் கோட்பாடு.

ஒரு முஸ்லிமின் பார்வையில் படைப்புக்களும் படைத்தவனும் ஒன்றல்ல. படைப்புக்கள் என்பதற்கு தனியான ஒரு அர்த்தம் உண்டு.

படைத்த (இறைவன்) ஒருவனின் ஒரு நாட்டத்தில் உருவானவைதான் படைப்புக்கள். அனைத்தும் அவனுக்குப் பணிய வேண்டிய அவனுடைய அடிமைகள்.

ஆம் அல்லாஹ் கூறுவது போல் "வானங்களிலுள்ளவை பூமியிலுள்ளவை அனைத்தும் அவனுக்குரியவை. அனைத்தும் அவனுக்குப் பணிகின்றன" இதுவே சரி.

எனவே வானங்களிலும் பூமியிலும் இருப்பவர்களில் அவனுக்கு ஒரு பிள்ளை வேண்டும் என்று சிந்திக்க எந்த அவசியமுமில்லை. ஏனென்றால் அவனுடைய படைப்புக்கள் அனைவரும் (அனைத்தும் ஒரே தரத்தில் உள்ளவை ஒரே கருவியால் (ஆகுக என்ற சொல்லால்) உருவானவை.

"வானங்களையும் பூமியையும் முன் மாதிரியின்றிப் படைத்தவன். ஏதேனு மொன்றைப் படைக்க அவன் முடிவு செய்து விட்டால் அதற்காக அவன் சொல்வது "ஆகுக" என்பதுதான். உடனே அது ஆகி விடும்."

அல்லாஹ்வின் முடிவு எப்படி செயல்வடிவம் பெறுகிறது என்பதெல்லாம் மனிதப்புலன்களால் புரிந்திட முடியாதவை. மனிதப் புலன்களின் சக்திக்கு அப்பாற் பட்டவை. இந்த ரகசியத்தை அறிந்திட சக்தியைச் செலவிடுவது வீண் வேலை. வழி காட்ட யாருமில்லாத பெரு வனாந்தரத்தில் பயணம் செய்வது போன்ற பயனற்ற செயல்.

**(நூல்: ஃபீழிலால் குர்ஆன்)**

நபி (ஸல்) கூறினார்கள்: "அல்லாஹ் கூறுகிறான்; ஆதமின் மகன் (மனிதன்) என்னை மறுத்தான். ஆனால் அதற்கு அவனுக்கு உரிமை இல்லை. என்னைத் திட்டினான் ஆனால் அதற்கு அவனுக்கு உரிமை இல்லை.

மனிதன் ஏற்கனவே இருந்தது போல் மீண்டும் உயிர்தந்து அவனை எழுப்ப என்னால் இயலாது" என்று கூறியதுதான் என்னை அவன் மறுத்தது.

எனக்குக் குழந்தை உண்டு ஒன்று அவன் கூறியது தான் என்னை அவன் திட்டியது. ஆனால் எனக்கு ஒரு மனைவியையோ, குழந்தையையோ எடுத்துக் கொள்வதை விட்டு நான் தூய்மையானவன்.

**(நூல்: புஹாரீ)**

நபி(ஸல்) கூறினார்கள், தொல்லைதரும் வார்த்தைகளைக் கேட்ட பிறகும் பொறுமை யுடன் இருப்பவன் அல்லாஹ்விட யாரு மில்லை. "அவனுக்குக் குழந்தை உண்டு" என்கின்றனர். அவனோ அவர்களுக்கு ஆரோக்கியமான வாழ்வையும் வாழ்வாதாரங் களையும் வழங்குகிறான்.

**(நூல்: புஹாரீ, முஸ்லிம்)**

## வசனம் 118-ன் விரிவுரை

"அறியாதவர்கள்" என்று அல்லாஹ் இவ்வசனத்தில் கூறுவது இணை வைப்பவர்களாக இருந்த "உம்மீ"கள்தான். இவர்களை "அறியாதவர்கள்" என்று கூறுவதற்குக் காரணம் வேதத்தின் ஞானம் எதுவும் அவர்களிடம் இல்லை. (இதுவரை வேதம் ஏதும் இவர்களுக்கு வரவில்லை)

இவர்கள் பெரும்பாலும் நபி (ஸல்) அவர்களிடம் "அல்லாஹ்வை எங்களிடம் பேசச் சொல்லுங்கள் பார்க்கலாம். அல்லது உலகம் இதுவரை கண்டிராத ஓர் அதிசயம் எங்களிடம் வரட்டும் பார்க்கலாம்" என்று சவால் விட்டுக் கொண்டிருந்தனர்.

இந்த 'உம்மீ'கள் (அறியாதவர்கள்) இப்படிக் கூறியதை அல்லாஹ் எடுத்துரைப் பதற்கு காரணம் என்னவென்றால் இவர்களுக்கு முன்னர் வாழ்ந்த (யூதர்கள், மற்றவர்கள்) சமுதாயத்தினர் தம் இறைத் தூதர்களிடம் இது போலவே தான் கேட்டார்கள் என்று விளக்குவதற்குத் தான்.

ஆம்! அல்லாஹ்வை எங்கள் கண்ணுக்குத் தெரியும்படி காட்டுங்கள் என்று மூசாநபியிடம் (யூதர்கள்) கேட்டனர். அற்புதங்களைக் கேட்டு முரண்டு பிடித்தனர். எனவே (வேதம் வழங்கப்பட்ட யூதர்களும் வேதம் வழங்கப்படாத 'உம்மீ' இணை வைப்பவர்களும்) இருவரும் சுபாவத்தில் ஒரே மாதிரியானவர்கள்தான். ஒரே மாதிரி சிந்திப்பவர்கள்தான். ஒரே மாதிரி வழி கெட்டவர்கள் தான்.

"அவர்களின் உள்ளங்களெல்லாம் ஒரே மாதிரியே இருக்கின்றன" என்று அல்லாஹ் கூறுகிறான்.

எனவே இணைவைக்கும் 'உம்மீ'களை விட வேதம் வழங்கப்பட்ட யூதர்களுக்கு எந்த சிறப்பும் மேன்மையும் இல்லை.

வழி கேடு, பிடிவாதம், தீய சிந்தனை இவற்றிலெல்லாம் இவர்களின் உள்ளங்கள் ஒன்று போலவே இருக்கின்றன.

"உறுதியாக நம்புவோருக்கு நாம் சான்றுகளை விளக்கிவிட்டோம்" என்று அல்லாஹ் கூறுகிறான்.

ஆம்! தன் உள்ளத்தில் உறுதியான நம்பிக்கை பெற்றவர் அதை உறுதிப்படுத்தி உண்மைப்படுத்திடும் அளவுகோல்கள் இவ் வசனத்தில் இருப்பதை அறிவார். தன் இதயத்தை அமைதிப்படுத்திடும் சான்று களைப் பெற்றுக் கொள்வார்.

எனவே சான்றுகள் நம்பிக்கை ஏற்படுத்துவதில்லை. மாறாக உறுதியான நம்பிக்கைதான் தனக்கான சான்றுகளை அறிந்து அடைந்து கொள்கின்றன. தெளி வடைந்து கொள்வதற்காக உள்ளத்தைத் தயார்படுத்துகின்றன.

**(நூல்: ஃபீழிலாலில் குர் ஆன்)**

**தொடரும்**

Owned and published by M. Gulam Mohamed from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001. Editor M. Gulam Mohamed, Printed by M. Gulam Mohamed at Chennai Offset Printers, 19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.